# இக்கால இலக்கியம்

பருவம் - I CC1 கற்பித்தல் : 6     தரப்புள்ளி : 5     பாடக்குறியீட்டு எண் : 18K1T01

நோக்கம்: தற்கால இலக்கிய வடிவங்களையும், உள்ளடக்கம் மற்றும் உத்திகளையும் அறிமுகம் செய்தல்.

பயன்கள்: படைப்பாளிகளின் சமூகச்சிந்தனையை உள்வாங்கி மாணவர்கள், தம் சிந்தனை ஆற்றலை வெளிக்கொணர்தல்.

அலகு 1 :

**பாரதியார் கவிதைகள் (5)**

1. பாரத தேசம்
2. பாரத ஜனங்களின் தற்கால நிலை
3. செந்தமிழ்நாடு
4. தமிழ்
5. பெண்கள் விடுதலைக் கும்மி

**பாரதிதாசன்**

1. சஞ்சீவி பருவதத்தின் சாரல்

அலகு 2 :

1. யூமாவாசுகி (என் தந்தையின் வீட்டைச் சந்தையிடமாக்காதீர்…3, 19)
2. யுக பாரதி (உறுத்துவன, தோட்டக்காரன்…)
3. பா. விஜய் (நான், கடவுளின் காதலி..)
4. சினேகன் (தஞ்சை தமிழர் அடையாளம், உன்னை நீ நம்பு)
5. கவிபாஸ்கர் (நத்தாங்கூடு, பட்டினியாய்ப் பத்தாயம்)
6. புனிதா கணேசன் (பொய்மையும் வாய்மையிடத்து… பூப்பதெப்படி?)
7. கிருஷ்ணப்பிரியா (அரூபப் புலம்பல்கள்.. அரங்கேற்றம்…)
8. பு. இந்திராகாந்தி (மழை… உனெக்கென ஒரு சிறகு…)
9. மு.வேம்பு (நேரம், சோலையே நீங்கள்தான்…)
10. பொ. திராவிடமணி (செடியேற்கா மலர்கள்… சில கேள்விகள்…)
11. ம. கண்ணம்மாள் (வேட்கை… அன்பை நடும் பெண்)
12. தி. ஹேமலதா (நெற்களஞ்சியம்… மெல்ல.. மெல்லப்.. புலனாகி) - (22)

அலகு 3 :

மேலாண்மை பொன்னுசாமி சிறுகதை

- (மின்சாரப் பூ (கங்கைப் புத்தக நிலையம் சென்னை -17) முதல் ஐந்து கதைகள்)

அலகு 4 :

கண்ணதாசன் ரத்த புஷ்பங்கள், கண்ணதாசன் பதிப்பகம்,சென்னை. 7

அலகு 5 :

ரா. கனகலிங்கம் - என் குருநாதர் பாரதியார், அகரம் 01, நிர்மலாநகர், தஞ்சாவூர்.

( அனைத்து அலகுகளிலும் வினாக்கள் சமமாக அமைதல் வேண்டும் )

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| பூ நெஞ்சத் தீ | 1 |
| நீரில்லாமீன் | 14 |
| நாளைய மேற்கு | 27 |
| அன்பெழுத்து | 43 |
| சூரியத் தேர் | 56 |

ரூ. 5,00

# அலை - III.

அள்ளிப் புரட்டிக்கொண்டு போகிற வெள்ளத்துக்குள் விஜயம். வெள்ள மூர்க்கவேகத்தில் மூச்சுத்திணறுகிற உணர்ச்சி. விலகிக் கொண்டோடுகிற ஈரச்சீலை. திரேகம் முழுவதும் புரட்டியெடுக்கப்படுகிற உணர்ச்சித்திணறல்.

விட்டு விலகத் துடிக்கிற மன ஆவல். மூழ்கித் திளைக்க ஆசைப்படுகிற திரேகம். விஜயம் இழுபட்டுத் தவிக்கிறாளா? தவித்துப் பரவசம் ருசிக்கிறாளா? தகிக்கிற ஆண்மகனின் காமச் சுவாசச் சூடு.

''ச்சேய்... என்னை வுட்ரு... ஏய்க், என்னை வுட்ரு... என்னை விடு... என்னை வுட்ரு... வுட்ருடா...''

திமிற நினைத்து, திமிற முயன்று... விடுபட முடியாமல் கிடப்பதில் ஒரு சுகம். ரகசிய ஆவல். திரேக ருசி. மனக்கூச்சம்.

''ம்மா... எம்மா... எம்மா...'' - மகளின் பயந்து நனைந்த குரலின் அதிர்வில் விழித்தாள் விஜயம். சுற்றிலும் கனத்த இருட்டு, கண்ணை வந்து அப்பியது. மகளின் குரலில் பதற்றம்.

உறக்கச்சடவோடு மகளைத் தொட்டுத் தடவினாள்.

''என்னடி...?''

தன்னைப் பற்றி உலுக்குகிற மகள்.

'' ஏம்மா... என்னத்துக்கும்மா பொலம்புறே...?''

''ஒறக்கத்துலேயா பொலம்புனேன்?''

''ஆமாம்மா... கனாகினா கண்டியாம்மா?''

''கனா மாதிரித்தான் தெரியுது... என்னமோ ஒரு பேய் வந்து கழுத்தை நெரிச்ச மாதிரி இருந்துச்சு...''

''வுட்ரு... வுட்ருன்னு... பொலம்புனம்மா...''

''சரி... சரி... நீ ஒறங்குடா சரசு... என்ன கெரகசாரமோ தெரியலே... பேய்க்கனாவா வந்து அமுக்குது...''

ஏழு வயசு சரசுவின் கால், அவளது வயிற்றின் குறுக்காகக் கிடக்கிறது. சரசுவின் பிஞ்சுக் கை அவள் முதுகில் கிடந்து, ஆறுதல் படுத்துகிறது. ''பயப்படாதேம்மா... நா இருக்கேம்மா...'' என்று தைரியம் சொல்லிக் கொண்டே நெஞ்சுக்குள் முகம் புதைத்து உறங்க முனைகிற சரசு. துவண்டு சரிகிற முகத்தில் மகள் உறங்கிப்போனது... உணர முடிகிறது.

விஜயத்துக்குள் வியர்த்தது. குற்ற உணர்ச்சியின் கூர் முட்கள் குத்தியெடுத்தன. பேய்க்கனாவா வந்துச்சு? காமப்பேயில்லே வந்து அமுக்குச்சு? வெள்ளமா? வெள்ள மூர்க்கமாக அள்ளிக் கொண்ட ஆண் கரமா?

விஜயத்துக்குள் குப்பென்று பொங்கிக் குமுறிக் கொண்டுவந்த அழுகை... பறிகொடுத்த வாழ்க்கையின் கனம், மனசைப் பிசைந்தது. விதிக் கொடுமையை நினைத்துக் குலுங்கிக் குலுங்கி அழுதாள். அழுகிற விஜயத்தை பாசமாக விசாரிக்கிற மகள் உறங்கிவிட்டாள். சுற்றிலும் கனத்த இருட்டு மட்டுமே மிச்சமாக இருந்தது.

கேட்பாரற்றுப் போன வனத்தில் செம்போத்துப் பறவையின் ஏக்கக்கூவலாக... நாதியற்றுப் போன அவளது அழுகையும் சோகமும்.

பைக்கட்டை எடுத்துக்கொண்டு புறப்படுகிற சரசு. நீலநிறப் பாவாடையும் வெள்ளைச்சட்டையுமாக... கால் முளைத்த பூச்செண்டாக சரசு. எண்ணெய் தேய்த்து இழுத்துப் பின்னிய இரட்டைச் சடையில், வெள்ளை ரிப்பன் பறக்காத வண்ணத்துப் பூச்சியாகத் தலையில் செருகப்பட்டிருக்கிற ஹேர் கிளிப். விஜயத்தின் மனம் சிறகசைத்தது. ரசித்தது.

''போய்ட்டு வாரீயா கண்ணு....?''

கொஞ்சலான மென்மைக் குரலில் விஜயம். அள்ளி வைத்துக் கொள்வதைப் போல வைத்தகண் எடுக்காமல் பார்த்தாள்.

''ஆட்டும்மா....''

''யார்கூடயாச்சும் சண்டைகிண்டை போடாதே கண்ணு...''

''சரிம்மா...''

''அம்மா கூலிவேலைக்குப் போய்ட்டுச் சாயங்காலம் வருவேன். நீ மதியத்துக்குப் பள்ளிக்கோடத்துலே சாப்புட்டுக்கிடுதீயா?''

''ம்...''

முற்றத்தில் திரிந்த கோழி விடைகளுக்கு அஞ்சாறு தானியத்தை அள்ளிப்போட்டாள். டயர் மிதியடியில் காலைச் செருகினாள். தூக்குச்சட்டிச் சோறும் களைசுரண்டியுமாகத் தெருவில் இறங்கினாள் விஜயம்.

நல்லவேளை... டயப்படி வந்துவிட்டாள். நாலு கூலியாள்களும் அப்பத்தான் வந்திருந்தனர். சதுர சதுரமான பாத்திக்கட்டுகள்... மினுமினுப்பான கரிசல்மண். மக்காச் சோளப்பயிர். கோழிக்குஞ்சுகளைப் போல லட்சணமாக, சிறுசாக இருந்தன. அருகம்புல்லும் கோரைப் புல்லும் களைமோதிக் கிடந்தன.

களைவெட்டுக்கு நிலம் பருவமாக இருந்தது. 'பொதுக் பொதுக்'கென்று மிருது. சுரண்டிக்குச் சுலபமாக இருந்தது. இழுத்து வெட்டினாள்.

ஒட்டமாக ஓடிவந்த ஒரு சிறுமி. மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க இளைத்தாள். ''யக்கா... வெஜயாக்கா...!''

நிமிர்ந்த விஜயம்...

''பள்ளிக்கோடத்துலேயே உங்க சரசுவுக்கு ஜன்னி வந்து, வெட்டி வெட்டி, இழுக்குது. நீங்க வெரசா வருவீகளாம்...''

ஈரல்குலையைப் பிடுங்கி வெளியே போட்ட மாதிரியிருந்தது விஜயத்துக்கு. பகீரென்றிருந்தது. ஆணி வேர் வரை அதிர்ந்து போன பதற்றம்.

என்ன செய்ய.. ஏது செய்ய...? கையும் ஓடாமல், காலும் ஆடாமல் வெலவெலத்துப் போன விஜயம். பொங்கி வந்து அலைக்கழித்த அழுகை.

''ஐயய்யோ... பாதரவே, எம் பச்சை மண்ணுக்கா இந்தச் சீக்கு?''

''போம்மா... விஜயம், போம்மா...! போய் ஆசுபத்திரிக்குக் கூட்டிட்டுப் போய் ஏதாச்சும் வைத்தியம் பாரும்மா...''

சுரண்டியை எறிந்துவிட்டு அழுகையும் கதறலுமாக, ஓட்டமாக ஓடிவந்தாள். ஒரே உயிர்த் துணை. செத்துப் போன புருஷனின் ரத்த நிழலாக மிச்சமிருக்கும் உயிர்த் தொடர்ச்சி. தனது உயிரையும் உருவையும் ஒன்றிணைத்த பூச்செண்டு. மிச்சமுள்ள எதிர்கால வாழ்வுக்கான ஒரே ஆதரவு. பற்றுக்கோல். வாழ்ந்த வாழ்வின் அடையாளம்.

பள்ளியிலிருந்து வீடு கொண்டுவரப் பட்டிருந்தாள் சரசு. கூடியிருந்த தெருக்காரர்கள் பரபரப்பும் பதற்றமுமாக, தெரிந்த கை வைத்தியம் செய்து கொண்டிருந்தனர். சுட வைத்த வேப்பெண்ணெய் கொடுத்து... மூத்திர நீரில் கரைத்த அரைப்பு மூக்கில் பிழிந்து, அமிர்தாஞ்சனம் தடவி... நெல்உமி ஒத்தடம் தந்து...

கிராமத்துமண்ணில் ஆணிவேர் பதிந்திருந்த மனித நேய உயிர்ப்பயிர்.

பதைப்பும் பதற்றமுமாக ஓடிவந்த விஜயம். கூட்டத் தைப் பிய்த்துக் கொண்டு உள்நுழைந்தாள். அகட்டிக் கிடந்த கால். மல்லாக்கக் கிடந்த சிற்றுடம்பு. ஒருபக்கம் சாய்ந்து கிடக்கும் சின்னமுகம். விழித்தவிழி நிலைத் திருக்க... வெட்டி வெட்டி இழுக்கிற உடம்பு. சுண்டிச் சுண்டி இழுக்கிற சின்ன உதடுகள்.

பார்த்தவுடன் விஜயத்தின் கரிக்குடலே தீப்பற்றிய மாதிரியிருந்தது. அடிவயிற்றின் சூன்யத்தில் சுழன்றடித்த அதிர்வுச் சூறாவளி.

''ஐயய்யோ... எம்மவளே...'' என்று ஓங்காரமாகக் கத்தினாள். ''நா என்ன செய்வேன்? எம்புள்ளையையும் புடுங்கி, என்னை ஒத்தைச் சிறுக்கியா ஆக்கி... கூத்துக்கட்டு தானே... கூத்துவன்...''

உண்டியல்... சட்டி பொட்டிகளில் போட்டு வைத்திருந்த ரூபாய்களைப் பொறுக்கிக்கொண்ட விஜயம், பிள்ளையைத் தூக்கிக்கொண்டு வெறி கொண்டு வெளிப் பாய்ந்த விஜயம். தாய்ப்பாச வெறி. தன்னுயிரைத் தானே பற்றிக்கொள்கிற உக்கிரம்.

நல்லவேளை... மினிபஸ் வந்தது. ஏறிக்கொண்டாள்.

திருவேங்கடம் ஆஸ்பத்திரியில் டாக்டரிடம் காட்டினாள். துரிதகதியில் செயல்பட்ட டாக்டர், அடுத்தடுத்து ரெண்டு ஊசி போட்டார்.

பதற்றமும் புலம்பலுமாக நின்று தவிக்கிற விஜயம். விரக்தியின் விளிம்பில் துடிக்கிற கொடுமை... உயிர் துடிக்கச் சிதறுகிற கண்ணீர்.

''எம்புள்ளே பொழைப்பாளா சார்? எனக்கு ஆதரவா இருப்பாளா சார்?''

''ஏம்மா பதர்றீக? உங்க புள்ளைக்கு ஒண்ணும் செய்யாது. சரியாப்போச்சும்மா...''

டாக்டரின் மென்மையான குரல்... அவர் உதடுகளில் இயல்பாகப் பூத்திருந்த சிறு நகை... விஜயத்துக்குள் ஆறுதல் தருகிறது. தைரியம் தருகிறது. ஆண்டவனின் விரல்களாக மனசுக்குள் வருடுகிற இதமாக, டாக்டரின் புன்னகைக் கண்.

வெட்டி இழுத்த இழுப்பு நின்றுவிட்டது. விழித்திருந்த ஜீவனற்ற கண்கள் உயிர் பெற்று, இமை மூடின. அடித்துப் போட்ட மாதிரி கிறங்கிக் கிடந்த சரசு...

''ஏம்மா... மலச்சிக்கல் உண்டா?''

''இல்லே சார்... விடியக்காலம் கூட நல்லா 'வெளியே' போச்சு...?

ஸ்டெதஸ்கோப்பை நெஞ்சில் வைத்தார். தீவிர நுட்பப் பரிசோதனை. அவர் பார்வையின் கூர்மை. விழிச் சலனத்தில் ஒரு குழப்பரேகை.

''சளியுமில்லே... மாந்தமுமில்லே... அப்பவும் ஜன்னிக் கோளாறு. ம்...ம்...ம்.. ப்ரெய்ன்லே ப்ராபளமா?''

அவரின் முணுமுணுப்பும் யோசிப்பும் இவளுக்குள் கலக்கியது. அடிவயிற்றில் ஒரு பிசைவு. திகிலிலும் பீதியிலும் வதைபடுகிற உள் மனசு.

''இப்பச் சரியாப் போச்சும்மா... இந்த மாத்திரை களைக் குடுங்க. நல்லா...த் தூங்கும்.. தூங்கட்டும்மா: ஒரு வாரம் கழிச்சு ஒரு எக்ஸ்ரேயும் ரத்தடெஸ்ட்டும் பண்ணணும்மா...''

''ரொம்பச் செலவாகுமா...?''

''ஆமாம்மா... எப்படியும் நாலாயிரம் ரூவாயாகும். எக்ஸ்ரே எடுக்கணும்னா, பாளையங்கோட்டை போகணும். இல்லேன்னா... மதுரை போகணும். உங்களுக்கு வேற யாரு இருக்காக?''

''யாருமில்லே... நாதியத்தவ. இந்த உசுருதான் ஒரே தொணை...''

டாக்டர் பயமுறுத்தாமல் சொன்னார். அச்சுறுத்தலான விஷயத்தை இங்கிதமாகச் சொன்னார். தைரியத்தை வேரறுக் காத பக்குவத்தில் சொன்னார். விஜயத்துக்குள் அழுகை அழுகையாக வந்தது.

ஆகாயத்துக்கும் பூமிக்குமான ஒங்கு தாங்கான ராட்சஸன். அசுர நிதானமாக நடந்து வருகிற பூதாகாரம். அதன் பாதங்களின் பயங்கரம். அதன் விரலிடுக்கில் சிக்கி, நசுக்குண்டு பிதுங்குகிற சரசு, சரசுவின் சதைத் தெறிப்பு.

விஜயத்துக்குள் திகிலும் பயமுமாக வாட்டி வதைத்தன. இனம்புரியாத மர்ம ராட்சஸம் தம் தலையெழுத்தாக ரூபங் கொண்டு அச்சுறுத்துகின்றன. சாவின் நிழல் துர்வாசமாக வீடு முழுக்க நிரம்பியிருந்தது. பறிகொடுத்து அதிர்ந்தவள், மிச்சத்தையும் மொத்தமாகப் பறிகொடுக்க இருக்கிற பயங்கரத்தை உணர்ந்து... மிரண்டு... அரண்டு...

விஜயம் நனைந்த காகிதமாக நைந்து கிடந்தாள்.

'கூலிவேலை பாத்து அடுப்பைப் பத்தவைக்குற ஏழைப்பட்ட பொட்டச்சி. நாதியத்த வெறுஞ்சிறுக்கி. எனக்கு இருக்குற ஒரே ஆதரவு சரசு. இவளுக்கும் இப்படி யொரு சீக்கா? இம்புட்டுப் பெரிய தொகைக்கு நா எங்க போவேன்? யார்கிட்டே கேப்பேன்? யாரு தருவாக? நால்ாயிரம். ஐயாயிரம்னா... கொஞ்சமா? கடனா வாங்கு னாலும் அடைக்க முடியுமா? நடக்குற காரியமா? ஏலாத சிறுக்கிக்கு இம்புட்டுப் பெரிய பாரமா?'

விஜயம் தனிமையின் சூனியத்தை உணர்ந்தாள். அனாதமையும் ஏழ்மையும் எத்தனை கொடுமையானது என்பதை நினைத்து நினைத்து அழுதாள். ''விஜயம் மகளுக்கு மூளையிலே கட்டி...'' என்று ஊரெல்லாம் பேச்சு பேச்சாகக் கிடக்கிற கேவலம்.

விதிக் கொடுமையை எண்ணி எண்ணி அழுதாள். சரசுவைப் பார்த்துப் பார்த்து உள்ளுக்குள் உடைந்தாள். நொறுங்கிச் சிதறினாள். யார் யாரிடமோ கடனுக்கும் கைமாற்றுக்கும் கண்ணீரோடு போய் நின்றாள்.

மேலத்தெரு மீனாட்சியாச்சி வந்திருந்தாள். நோய் நொடியைப் பற்றி விசாரித்தாள், அசலான பாசத்தோடு. விதிக்கொடுமை பற்றி அங்கலாய்த்தாள்.

''மோன்களுக்கு வரவேண்டிய சீக்கு. சீப்பட்ட ஏழைகளுக்கு வந்திருக்கு. நீ என்ன செய்வே? பாவம்... கவலைப் படாதே விஜயம்... ஒடைஞ்சிராதே... தெம்பாயிரு... அடைஞ்சபொழுது விடியாமப் போகாது...''

''என்னத்தை விடியப்போகுது...? எல்லாம் எந் தலையெழுத்து...''

''அடியே... ரூவா இல்லாமப் போனாலும், நமக்குன்னு ஒரு ரூட்டு இல்லாமப் போகாதுடி. 'நோய்க்கும் பாரு... சாமிக்கும் பாரு'னு பெரியாளுக சொல்லுவாக. ஓங் குல தெய்வம் அருஞ்சுனைகாத்த அய்யனாருக்கு ஒரு நேர்த்திக் கடன் போட்டுருடி... கோவில்பட்டியிலே ஒரு ஹோமியோபதி டாக்டரு இருக்காராம். கொறைஞ்ச செலவுலே நல்லா வைத்தியம் பண்றாராம். பெரிய பெரிய சீக்கெல் லாம் தீத்துருக்காராம். அவருகிட்டே போய் சரசுவைக் காட்டு. 'சாமி' விட்டபடி நடக்கட்டும்'னு நம்பிக்கை யோட இரும்மா. நம்பிக்கை வந்துட்டா, மல்லுக்கட்டுற மன தைரியம் வந்துரும்...''

மீனாட்சியாச்சியின் பேச்சு விஜயத்துக்கு ஆறுதலாக இருந்தது. மனப்புண்ணின் மீது வருடிய மயிலிறகின் மென்மையான சொற்கள். இங்கிதமான ஈரவார்த்தைகள். காரியத்துக்காகாது. கேட்டுக் கேட்டுப் பழகிப்போன அன்புச் சொற்கள்.

எல்லோருடைய அனுதாபத்தையும் வாங்கிக் கொண்டவளைப் போலவே, இதையும் வாங்கிக் கொண்டாள். ருசித்துவிட்டு மறந்து விட்டாள். நாளும் பொழுதும் சோர்வாக நகர்ந்தன.

ஒரு வாரத்துக்கு மேலாகிவிட்டது. சரசு பள்ளிக்கூடம் போகிறாள். சுதாரிப்பில்லாத ஒரு தோற்றம். சிட்டுக்குருவியாகச் சிறகடித்துத் திரிந்த சரசு, நோய் மனப்பான்மையால் பீடிக்கப்பட்டு... கல்லெறி வாங்கிய குருவியாகத் துவண்டு சோர்ந்திருந்தாள்.

விஜயமும் சுடரில்லாத விளக்காகச் சோபையற்றிருந்தாள். வெளுத்துப்போன முகம். உயிரொளி தொலைத்த ஈரக்கண்கள்.

'புள்ளைக்கு என்னாகுமோ... ஏதாகுமோ...?' என்ற திகில். மனசை வாட்டி வதைக்கிற கிலி.

'வைத்தியம் பார்க்க வக்கில்லையே!' என்கிற வருத்தம். வழியறியாத நிராதரவுணர்ச்சி. சூறாவளிச்சுழலுக்குள் சிக்கிய துரும்பாக இவள்.

இருட்டிக்கொண்டு வருகிறது. விளக்கு சுவிட்சைப் போடக்கூட எண்ணம் வராமல் செயலற்றுக் கிடந்தாள்.

''விஜயம்...''

ஆண்குரலில் அன்பின் கனிவு.

நோக்கமற்ற அயற்சியோடு திரும்பிப் பார்த்தாள்.

வாசலைத் தாண்டி வீட்டுக்குள் பக்கத்தில் வந்து நிற்கிற ராசலிங்க மாமா. விஜயத்துக்குள் வெறுப்பின் கசப் பலைகள்.

நரைத்த வயசு. முன் வழுக்கை. ராசலிங்கம் முழியே சரியாயிருக்காது. கபடமிருக்கும். காமம் கசியும்.

கழுத்துக்கு மேல் ஓநாய்த்தலை இருப்பதாகவே இவள் மனசுக்குப் படும். ஓநாயின் நாவில் எச்சில் வழியும்.

கசந்த மனசின் கைப்பைக் காட்டிக் கொள்ளாமல், வெறுமனே பார்த்தாள்.

''என்ன மாமா?''

''வைத்தியம் பண்ண வழிதெரியாம, வளரவேண்டிய புள்ளையை வெச்சுக் கிட்டிருக்கீயாம்லே?'' - உரிமையும் கண்டிப்புமாக அதட்டினார்.

''என்ன செய்ய மாமா? எனக்கு என்ன கொடுப்பினை இருக்கோ, அதானே கிடைக்கும்?''

''ஏன் இப்படிப் பேசுதே? சொந்த பந்தம்னு நாங்க இருக்குறது நெனைப்பு இல்லியா? நாங்க ஒதவமாட் டோமா? ஒனக்கு இப்ப எம்புட்டு வேணும்? ஐயாயிரம் தானே? நாளையே வாங்கிக்க...''

'எதை நம்பித் தாரீக மாமா? நகை நட்டு எதுவும் ஏங்கிட்ட இல்லியே அடகு வைக்க...''

''ஒன்னை நம்பித்தான்...''

''என்னையா...?''

''ஆமா, ஒன்னை மட்டுந்தான்...''

புரியாமையுடன் கண்கள் சுருக்கினாள் விஜயம். நெற்றி யின் சுருக்கத்தில் கேள்வி ஒலித்தது. அவர் சிரிப்புக்குள் இருளின் முகம்.

''நீ தொணையில்லாத பொண்ணு. ஏற்கெனவே குடும்பக் கட்டுப்பாடு செஞ்சுக்கிட்டிருக்கே... கையும் கையும் பொத்துனாப்புலே நாம கமுக்கமா இருந்துக்க லாம். எந்தப் பயமுமில்லாம, நாம அப்பப்ப பாத்துக் கிடலாம்...''

ஓநாய்த் தலையில் குரூரக் கண்களின் பார்வை.

விஜயத்துக்குள் பற்றிக்கொண்ட தீ. திரேகமெல்லாம் 'திகுதிகு'வென எரிகிறது. விருட்டென்று எழுந்தாள். விரிகிற கண்ணில் எரிகிற அனல். பூ மனசிலிருந்து வீசிய வெக்கையின் தகிப்பு.

கையை வெளியே நீட்டினாள் விறைப்பாக!

''போ... நாயே... வெளியே...!''

''புள்ளையை நெனைச்சுப்பாரு... யாருக்கும் தெரியாம நாம பழகிக்கலாம்...''

''ச்சீ! தெரியாம செய்ற அசிங்கம், அசிங்கமில்லியா? ஒழுக்கம்கிறது ஊருக்குப் பயந்து காப்பாத்துறதுல்லே. உள்ளேயிருந்து கொழுந்து விட்டெரியுற பண்பு. தீ! ச்சேய்... நாயே, அதெல்லாம் ஒனக்கு என்ன தெரியப் போகுது? போயிரு வெளியே... விளக்குமாத்தை எடுக்குறதுக் குள்ளே...''

ராசலிங்கத்தின் முகம் கறுத்துவிட்டது. விளக்குமாறு அடிபட்ட அவமான வலியோடு வெளியே போனார் தலை கவிழ்ந்த நிலையில்.

தெருநாய்கூட நின்று குரைக்கிற அளவுக்கு நாம் அவல மாகிவிட்டோமே என்ற லஜ்ஜை. அவமானக் கூச்சம். நெஞ்சே பிளந்து கொண்ட மாதிரி.,. 'ஓ'வென்று கத்திக் கதறி அழுத விஜயம்.

மீனாட்சியாச்சி சொன்ன சொற்கள் நினைவில் உரசின. வைத்தியத்துக்கு வழியில்லாமல் நிற்பதால்தானே, தெருநாய் கூட வருகிறது?

மறுநாளே -

குலதெய்வத்துக்கு நேர்த்திக்கடன் போட்டுவிட்டு, கோவில்பட்டி ஹோமியோபதி டாக்டரிடம் போனாள்.

சாமிமேல் மனபாரத்தை இறக்கி வைத்துவிட்டு... 'என்ன ஆனாலும் இறைவன் சித்தம்' என்று மனசைக் கல்லாக்கிக் கொண்ட விஜயம், ஹோமியோபதி மாத்திரைகளை மட்டும் தவறாமல் சரசுவுக்குக் கொடுத்து வந்தாள்.

சரசு பெற்ற ஆம்பிளைப் பிள்ளையை நரைத்த தலையோடு கொஞ்சிக் கொண்டிருந்த விஜயம்மாவை ஊரே கையெடுத்துக் கும்பிட்டது... 'வைராக்கிய மனுசி' என்று!

- ஆனந்த விகடன்
*2-3-2003*

# நீரில்லா மீன்

சங்கையாவுக்கு முழிப்பு தட்டினாலும், எழுந்து விட மனசு வரவில்லை. உறக்கச் சடவு வந்து அமுக்கியது. சொருகிக் கொண்ட கண்ணுக்கும் முன்னால், சொக்கிக் கொண்டு வருகிற உறக்கம்.

'இன்னும் சித்த நேரம் கண்ணை மூடுவோம்' என்ற மனச் சம்மதத்தோடு, ஒருக்களித்துப் படுத்த சங்கையா. முழங்கால்களை மடக்கி ஒடுங்கிக் கொண்டான்.

''இந்தாங்க... ஏய்க்... இந்தாங்க''

முதுகில் தட்டி உசுப்புகிற புற உலகமாக ராசாத்தி.

கோபம் கோபமாக வருகிறது சங்கையாவுக்கு. அசந்து உறங்குகிற சந்தோஷத்தை தட்டிப்பறிக்கிற அச்சலாத்தி. சுள்ளென்று பற்றிக் கொண்டு வருகிறது.

சீறிச் சினந்து கத்தலாமா என்று நினைத்த கணத்தில் சினந்து சீறுகிற ராசாத்தி. கண்டனக் குரலின் தொனி. உஷ்ணம்.

''ஏய்க்... இந்தாங்க, எம்புட்டுத் தரம் எழுப்ப? காது கேக்கா, இல்லே... அவிஞ்சு போச்சா? விடிஞ்சு, பொழுது ஒசக்க வந்துருச்சு. இன்னும் என்ன ஒறக்கம்? சொரணை யத்த ஒறக்கம்?''

சுரீரென்று சுடுகிற சொற்கள். லௌகீக வாழ்வின் சாட்டையடியாக வந்து விழுந்த மனைவியின் அதட்டல்.

துள்ளத் துடிக்க எழுந்தான், சங்கையா. வாயில் ஊறி யிருந்த எச்சில். துப்பவும் முடியாத - விழுங்கவும் இயலாத எச்சில். தூக்கச் சடவோடு 'விலுக், விலுக்'கென்று விழித்தான். என்ன என்பது போல இடுங்கின கண்ணால் வினவினான்.

''சீட்டுக்கார்ர அண்ணாச்சி வந்துட்டுப் போறாரு''

''ம்''

''இப்ப திரும்பவும் வருவாராம்...''

சங்கையாவுக்குள் திகைப்பு. முகத்திலும் திடுக்கிடல்.

'அவக், தொவக்'கென்று எழுந்தான். அவசர அவசர மாக முகத்தைக் கழுவினான். வாயைக் கொப்பளித்தான். அரைச் செம்பு தண்ணீரை குடித்தான். எல்லாம் துரித கதி.

நிறை குடத்தை இடுப்பில் சுமந்தவாறு வீட்டுக்குள் வருகிற ராசாத்தி.

''ரெண்டு மாசத் தவணை கட்டலியாமில்லே?''

''ஆமா...'' தொண்டைக்குள் பம்முகிற குரல்.

''இன்னிக்கு கட்டாயமா வேணுமாம். முகத்தை 'கடு, கடு'ன்னு வைச்சுக்கிட்டு, கண்டிஷனா சொல்லிட்டுப் போறாரு...''

''இன்னிக்கு சாயங்காலம் குடுத்துர வேண்டியதுதான்'' சங்கையாவின் நம்பிக்கையற்ற குரல். சாத்தியப்படுமா என்று சஞ்சலப்படுகிற மன நடுக்கம்.

''என்னத்தை வைச்சு குடுக்குறது? வெறுங்கை மொழம் போடுமா?'' வெடுக்கென்று குத்திக்காட்டுகிற ராசாத்தி.

''போட்டுத்தானே ஆகணும்? வேற வழி?''

மனசில் தெம்பில்லை. நம்பிக்கையில்லை. வெறும் கை எப்படி முழம் போடும்? ஒரு துணியோ, சுவரோ... பொருளோ இல்லாமல் அந்தரத்தில் முழம் போட முடியுமா? நடக்கிற காரியமா?

குளமோ, வலையோ, தூண்டிலோ இல்லாமல் எப்படி மீனைப் பிடிப்பது? விதையோ, நிலமோ இல்லாமல் எப்படி விளைச்சல்? வெறுமையில் அறுவடையா? சூன்யத்தில் சொர்க்கம் சாத்தியமா?

சங்கையா மருகி நின்றான். திசையற்ற திகைப்பு கண்ணில். என்ன பதில் சொல்ல? எப்படி பதில் சொல்ல?

''சரி... ராசாத்தி, சீட்டுக்கார மச்சான் வந்தார்னா... 'சாயங்காலம் வந்து கண்டிஷனா ரூவா வாங்கிட்டுப் போகலாம்'னு சொல்லிரு''

''நீங்க?''

''டீக் கடைக்குப் போயிட்டு ஓடைக்குப் போறேன்'' சங்கையா, மேல்துண்டை எடுத்துப் போட்டுக் கொண்டான். கைலியை மடித்துக் கட்டிக் கொண்டான். செருப்பில்லாத வெறுங்காலுடன் வீதியில் இறங்கினான்.

ரெண்டுமாசச் சீட்டு, முந்நூறு ரூபாய். கட்டாயமாக இன்னைக்கு தந்தாகணும். இல்லேன்னா, மானம் போயிரும். தாட்சண்யம் பாக்காம, தாறு மாறா கத்துவாரு... ஊரு கூடிப் பாக்கும். கேவலக் கூத்து... நாண்டுக்கிட்டு சாகுற மாதிரி நாறவசவு வைவாரு.

சங்கையாவுக்குள் இறங்கிப் படரும் நடுக்கம். மனத் தடுமாற்றம். வரப்போகும் அவமானத்தை நினைத்தே திகில் கொள்கிற மனசு. பயந்தோடுகிற களவாணியைப் போல தலைமறைகிற அவலம்.

இன்னிக்கு ஞாயிற்றுக் கிழமை. திருவேங்கடம் சந்தை. போய்ப் பார்க்கலாமா? என்னத்தைப் பாக்க? சூன்யத்துலே வலையை வீசி மீனை அள்ள முடியுமா?

விற்க ஒரு பொருள் இல்லை. எப்படி, எப்படி?

பங்குனி மாசம், காலைப் பொழுதின் வெயிலில் தெரிகிறது. வெயிலின் குணத்தில் தெரிகிறது. டீக்கடையில் கூட்டமில்லாத காற்றாடல்.

''என்னப்பா ஆளையே காணலே?''

''ஏவாரமே டல் தான். போட்ட வடைகளே மிச்ச மாயிருது''

''ஏன், என்னாச்சு?''

''ஊருக்குள்ளே துட்டு நடமாட்டமே அத்துப் போச்சுல்லே? என்னத்தை வைச்சு வடை திங்க?''

''ம் ம்...''

''காடுகரை வைச்சிருக்குற சம்சாரிகளுக்கும் வெள்ளாமை யில்லே. வெள்ளச்சல் இல்லே. போட்டது பூராவும் மண்ணாய்ப் போச்சு. எங்க பொழைப்பும் மண்ணுதான்...''

சங்கையாவுக்கு புளியை கரைக்கிறது. அவனிடம் இல்லாத பணம். அவனிடம் மட்டுமா இல்லை? ஊர் உலகத்திலேயே அதன் புழக்கம் அத்துப் போயிருக்கிறது. நாணயமில்லா நாடு.

''ஒரு டீ போடப்பா''

''வடை எடுத்துக்கலியா?''

''துட்டு இல்லே, அம்புட்டுக்கு''

டீ கிளாஸை கொதி நீரில் கழுவி சீனியைப் போட்டான். கழுவின கிளாஸிலிருந்து புகை வருகிறது.

''இந்நேரத்துக்கு இங்க ரெண்டு பஞ்சாயத்து வந்துருச்சு. ஊரு நெலவரமே சரியில்லே''

''என்ன வெவகாரம்?''

''எல்லா...ம் கொழை ஒடிச்ச தகராறுதான். கோடை வந்துருச்சு. காடு கரைகள்லே பச்சையில்லே. ஆடுகுட்டிக வைச்சிருக்குறவன், கொழை களவாங்க வேண்டியிருக்கு. வம்பு தும்பு வருது. வாயில்லாச் சீவனுக வவுறும் காயுது''

''பங்குனி பொறந்துட்டா... பச்சை அத்துப் போகும். ஆடு குட்டிக சந்தைக்குத்தானே போகும்?''

டீக்கடைக்காரனின் ஆயாசத் தலையசைப்பு. டீயை நீட்டினான். வாங்கிய சங்கையா, அங்குட்டும் இங்கிட்டுமாக பார்த்துக் கொண்டான். 'சீட்டுக்கார மச்சான் தலை தட்டலேல்லே?'

ஓடைக்குப் போனான். கரையேறினால், இவனது புஞ்சை, மிளகாய் தோட்டம். சுருட்டை நோய் அப்பியிருக் கிறது. எலிக் காதுகளாக சுருண்டு கொண்ட இலைகள். நடு நடுவே ரத்தப் புள்ளிகளாக தொங்கும் மிளகாய் பழம். அங்கொன்றும், இங்கொன்றுமாக...

''ம்... போச்சு. செலவழிச்ச தெல்லாம் மண்ணாய் போச்சு. மண்ணை... நம்புனவன் பொழைப்புலேயெல் லாம் மண்ணுதான்'' மனசின் முணு முணுப்புகள். 'திருவேங்கடம் சந்தைக்காச்சும் போவோம்...'

பரபரப்பாக வீட்டை நோக்கிப் பறந்தான். பல்லைத் தேய்த்தான். காட்டுக்குப் போகிற வேகத்தில் இருந்த ராசாத்தி.

''கஞ்சி ஊத்திரவா?''

''ஊத்தி வை''

''நா களைவெட்டுக்குப் போகணும். பொழுது போகுது''

''ஊத்தி வைச்சுட்டு, நீ போ. குடிச்சிட்டு நா திருவேங்கடம் போறேன்.''

''சந்தைக்கா? கைச் செலவுக்காச்சும் துட்டு இருக்கா?''

''நயா பைசா இல்லே''

'மாடக் குழியிலே சாமி படத்துக்குப் பின்னாலே அஞ்சு ரூபா இருக்கு. எடுத்துக்கங்க...''

''இப்பத்தான் நீ ராசாத்தி... என் ஆசைப் பொண்டாட்டி''

''இதுக்கெல்லாம் கொறைச்சல் இல்லே''

ஓட்டைச் சைக்கிள் 'கரக், புரக்'கென்று இடக்கு பண்ணுகிறது, வாழ்க்கையைப் போல. ஓங்கி ஓங்கி மிதித்தால் தான், நகர்கிறது, நாட்களைப் போல.

திருவேங்கடத்தில் ராகவன் கடைப் பக்கத்தில் சைக்கிளைப் போட்டு விட்டு... நடையை பிடித்தான். மதியத்துக்கு மேல் தான் சந்தைக்கு ஆடுகள், கிடாய்கள் வரும். விற்க - வாங்க வருகிற சம்சாரிகள், வியாபாரிகள் வருவார்கள். நடக்குற கொடுக்கல் வாங்கலில் நாம ஏதாச்சும் உரசிப் பார்க்க வேண்டியது தான்...

வேனலாய் கொதிக்கிற வெயிலில், சைக்கிள் மிதித்த அயற்சி. தொடைச் சதையெல்லாம் கொத்திப் பிடுங்குகிற வலி.

குடித்த கஞ்சி மாயமாய் போயிற்று. பசி வயிற்றை பிறாண்டியது. ரெண்டு வடையை பிய்த்து வாயில் போட்டு, ஒரு டீ யடித்தால்... பசி தாங்கும். தெம்பாக இருக்கும்.

இருப்பதே ஐந்து ரூபாய். என்ன செய்ய? வாயை சப்புக் கொட்டிக் கொண்டு, மனசில் அறைகிற ஏமாற்ற

உணர்வை ருசித்துக் கொண்டே பஜாருக்குள் நடந்தான், சந்தையை நோக்கி. மேலத்திருவேங்கடத்துக்கும் கீழத் திருவேங்கடத்துக்கும் நடுவில் சந்தை. கல் கிடங்குகளில் ஆடுகளுக்கு தண்ணியடித்தனர். கால் இடுக்கில் ஆட்டை அமுக்கிக் கொண்டு, அது கதற கதற... தண்ணீரை ஓலைக் கொட்டானில் மோந்து மோந்து வாயில் ஊற்றுகின்றனர். குட்டிகளின் கதறல்களும், கனைப்புகளும் காற்றில் அலைந்தன.

ஆட்டு வியாபாரிகள் அண் டிராயர் தெரிய வேட்டியை மடித்துக் கட்டியிருக்கின்றனர். அழுக்குச் சால்வைகளை தலைப்பாகையாக்கி யிருக்கின்றனர். மீசையில் வெற்றிலைக் காவி. வாயெல்லாம் வசவுப் பேச்சுகளும், கோபக் கத்தல் களும், மூத்திரக் கவிச்சி வாடை ஆடுகளோடு வந்தது.

''கோடை வந்துருச்சு, வாயில்லாச்சீவனை வச்சிச் சமாளிக்க முடியலே. வித்து துட்டாக்கிட்டுப் போவணும்''

''கோடை வெள்ளாமை. உப்பு வாங்கக் கூட துட்டு இல்லே. ஆட்டை வித்தாச்சும் யூரியா வாங்கணும்லே?''

ஆடு குட்டி வளர்க்கிற 'அப்புராணி சப்புராணி' மனுசர்கள் இப்படிப்பட்ட நொம்பலப் புலம்பல்களோடு ஆடுகளும் கவலைகளுமாக நின்றனர்.

சங்கையா யோசனைத் தீவிரத்துடன் அலைகிறான். அடிக்கண் கிடாய்களைப் பார்க்கிறது. ரெட்டைக் குறுக்கு, பின்சதை, கால் வளைசல், சுழி, நிறம், கண், தலை சுற்றுமா, நீர் குடிக்குமா என்று உள்கணிப்புகளோடு சுற்றுகிறான். மனசுக்குள்ளேயே ஒரு தேடல். ஒற்றைக்கால் கொக்கின் எச்சரிக்கையில் நினைவு. இரை தேடுகிற தவம்.

எச்சரிக்கையே வலை. வாய் வார்த்தையே வீச்சு. மாயத்தில் மீன் வந்து நிறையணும். மந்திரத்தில் மாங்காய் பழுத்து மடியில் விழணும்.

புளிய மரத்தடியில் கிடாயோடு நிற்கிற ஓர் கிராமத்தாள். பக்கத்தில் வியாபாரி. ரெண்டு பேருக்கும் கை வீச்சும் வாய்வீச்சுமாக வாக்கு வாதம். மேட்டுக்கும் பள்ளத்துக்குமாக பாய்கிற வாய் வீச்சுகள்...

''ஏய்... என்னய்யா... வெவகாரம்? வெலை தெகையலலியா?'' உள்ளே நுழைகிற சங்கையா. உறுத்தாத தலையீடு.

''இங்க பாரு... வள வளன்னு பேசாதே. உருப்படிக்கு நீ என்ன வெலை சொல்லுதே, இவரு என்ன ரேட்டுக்கு கேக்காரு...? அதைச் சொல்லு மொதல்லே''

''நா ஆயிரத்து எழுநூறு ரூவா சொன்னேன். இவுரு என்னடான்னா... ஆயிரத்து நூறுக்கு கேக்காரு. நா என்ன, களவாண்டுட்டா.. வந்துருக்கேன்? வளர்த்த பொருள்லே?''

''இந்தப் பூனைக்குட்டிக்கு ஆயிரத்து எழுநூறும் தருவாக, அதுக்கும் மேலேயும் தருவாக... போய்யா...''

சூடான வார்த்தைகள். ஏளனமும் எகத்தாளமுமான பாய்ச்சல்கள். சங்கையா ரெண்டு பேரையும் அதட்டினான். கிடாயை கூட்டியும் குறைத்தும் பேசினான். சத்தத்தை உயர்த்தினான். காட்டுக் கத்தல். வாய்களை அடைக்கிற கூவல்காடு.

ஆயிரத்து ஐநூத்தைம்பது என்று விலையை பேசி முடித்தான். குட்டியை கை மாத்தி விட்டான். ரெண்டு பேரிடமும் ஆளுக்கு பத்து ரூபாய் தரகு வாங்கிக் கொண்டான்.

மடியில் இருபது ரூபாய். வலையில்லாமல், குளமில்லாமல் வந்த மீன். விதையில்லாமல் நிலமில்லாமல் வந்த விளைச்சல். மந்திரத்தில் பழுத்த மாங்காய். வெறும்கை போட்ட முழம். மூலதனமில்லாத வியாபாரத் தரகு.

இப்படியே நாலைந்து தலையீடுகள். தொண்டையெல்லாம் காந்துகிறது. கத்திகத்தி நெஞ்செல்லாம் எரிச்சல். அப்பவும், நூறு ரூபாய் தான் தேறியிருக்கிறது.

சீட்டுக்கார மச்சான் மனசுக்குள் மிரட்டுகிறான். லௌகீக வாழ்க்கை மிரட்டுகிறது. அக உலகைச் சுழற்றுகிற புற உலக மூர்க்கம்.

சங்கையா மதியச் சாப்பாடில்லாத கிறக்கத்தில், நஞ்சடித்த கெண்டையாக மிதந்து வந்தாலும், பச்சை தேடியலைகிற பசித்த வெள்ளாட்டின் மன ஆவல். நினைவுக்குறி. கொக்கின் தவம்.

ஒரு பெரியவர். பத்து நாள் தாடி. காய்ந்த பரட்டைத் தலை. வயசுக்குப் பொருந்தாத கிழிந்த டி.ஷர்ட். மடித்துக் கட்டியிருந்த அழுக்கு வேட்டி. வெயிலிலும் மழையிலும் மானாவாரித்தனமாக வேர்வை சிந்தின உழைப்புத் திரேகம்.

அவர் கையில் கயிறு. தேன் நிறத்து வெள்ளாடு. நீளக் கொம்பு. தொய்ந்த மடு. அதன் பக்கத்தில் ரெண்டு கிடாய்கள். மினுமினுப்பான தேன் கலரில் வாலிபமாக நின்றன. நல்ல ரெட்டைக் குறுக்கு. விரிந்த பின் சதை, கட்டைக் கால். நல்ல சைஸ்.

மூனு உருப்படியும் கூட்டிக் கழித்துப் பார்த்தால்... நாலாயிரத் தைந்நூறுக்குப் போகும், பெறும். யோசிக்காமல் வாங்கலாம்.

விலைகேட்டு நெருங்குகிறவர்களை யெல்லாம் 'சள், புள்'ளென்று சீறி விழுந்து விரட்டுகிறார். கசப்பும் வெறுப்புமாக கடித்துக் குதறுகிறார்.

அவரையே கவனித்த சங்கையா. நிறைய யோசித்த பிறகு, மெல்ல நெருங்கினான். இங்கிதமாகக் கேட்டான்.

''என்னண்ணாச்சி, வந்தவுக எல்லாம் குந்தக் கேடா கொறைச்சுக் கேக்காகளா?''

''ஆமய்யா... பாவிப்பயக...'' மனக் கொதிப்போடு அவர்.

''என்ன... நாலாயிரத்துக்கு கேட்டுருப்பாகளா?''

''இந்த ஏவாரிக எழவுலே போக... வெறும் மூவா யிரத்துக்கு கேட்டுட்டுப் போறாக, கூசாமப் பேசுறாங் கய்யா. இவுங்கல்லாம் வெளங்குவாகளாய்யா?'' மனசின் குமைச்சலை யெல்லாம் கொட்டித் தீர்க்கிற அவரது ஆங்காரம். ரொம்ப நேரமாக கொத்துப்பட்ட காயத்தின் சீற்றம். சங்கையா அடி உதட்டை கடித்தான். நிதானமாக யோசித்தான்.

''நீங்க சம்சாரி. உங்க கையிலே சரக்கு நின்னா... வர்றவுக கொறைச்சுத்தான் கேப்பாக. இதுவே ஏவாரி கையிலே நின்னா, வேற மாதிரி...''

''என்னத்துக்கு?''

''சம்சாரிகளைப் பாத்தா... யாருக்குமே கொள்ளை யடிக்கத் தோணும். ஏமாத்தத் தோணும். ஏவாரிகன்னா... பாட்சா பலிக்காது. பருப்பு வேகாது...''

''தம்பி... நீ சொல்றது ஞாயம் தான். மண்ணைப் பொன்னாக்கி ஒலகத்துக்கே சோறு போடுறவன், சம்சாரி. அவன் வாயிலே மண்ணைப் போடத்தான்... ஆள்றவங்க நெனைக்காக...''

''கரெக்ட். நானும் சம்சாரிதான். மண்ணை நம்பிப் பாடுபடுறவன்... மண்ணாய்த்தான்போவான்ங்குறதை புரிஞ்சுக்கிட்டுத்தான், தரகுத் தொழிலுக்கு வந்துட்டேன்.''

''ஒனக்கு மாத்துத் தொழில் தெரியுது. தப்பிச்சுட்டே. மண்ணைத் தவிர, வேற ஒரு மண்ணும் தெரியாது, எனக்கு.

கட்டுதோ... இல்லியோ... மண்ணைக் கட்டித்தான் மாரடிச் சாகணும். வேற வழி?''

''சரி... வுடுங்கண்ணாச்சி. நாலாயிரத்து எரநூறு. உங்களுக்குச் சம்மதமா?''

உணர்வொற்றுமையுடன் பரஸ்பரம் சோகத்தை பரிமாறிக் கொண்டிருந்த கணத்தில் - சட்டென்று இப்படி ஒரு வியாபாரக் கேள்வியை கேட்பான் என்று நினைக்காத வெலவெலப்பில் பெரியவர். திகைப்பில் விரிந்து உறைந்த இமைகள், சலனப்பட சற்று நேரமாயிற்று. யோசிக்க நேர மில்லை. நாலாயிரத்துக்கு விற்க முடிந்தாலே போது மென்றிருந்தவருக்கு, இது நியாயமாகவே பட்டது.

''சரி'' என்றார்.

ஒற்றை ரூபாய் நாணயத்தைத் தந்தான்.

''அட்வான்ஸ். வைச்சுக்கங்கண்ணாச்சி... உருப்படிகளை ஏங்கிட்டே வுட்ருங்க...''

''ரூவா?''

''வித்தவுடனே ரொக்கமா வாங்கிக்கங்க. நட்டமோ, லாபமோ... அது எம்பாடு...''

உருப்படிகளைப்பத்தினான். நாலைந்து மரங்களைக் கடந்தான். வேப்ப மரத்துக்கு அடியில் நின்றான். பெரியவரை சற்று தள்ளி நிற்கச் சொல்லி விட்டான்.

நீலநிற சால்வையை போர்த்திக் கொண்டு, வெற்றிலை மென்ற வாய்ச்சிவப்போடு வந்து நின்ற ஒரு வியாபாரி. வெள்ளாட்டின் குறுக்கெலும்பில் கை வைத்தார்.

''போடவா...?''

''போட்றத்தான்...''

''ஏவாரமா, சரக்கா?''

''ஏவாரந்தான்... அட்வான்ஸ் போட்டுட்டேன்''

''கை மாத்திக்கிடுவமா?''

''ம்... ரொக்கந்தானே...?''

''எட்டையாபுரம் சந்தையன்னிக்கு தாரேன்...''

''ரொக்கந்தான்.''

''சரி... மேக் கொண்டு என்ன கேக்கே?''

''நமக்கு என்னன்னு வேணும்? அதைக் கேளும்...''

''கட்டில் காலு (நாலாயிரம்)''

''போட்டுருக்குற அட்வான்ஸே... கட்டிலுக் காலுக்கு மேலே ஒரு கை (நாலாயிரத்து ஐநூறு). மேக் கொண்டு எம்புட்டு தருவீரு...?''

''அதெல்லாம் சும்மா...''

சங்கையா சவுண்டை ஏற்ற, அவரும் கூவல்காடு போட... அவர் உருவிக் கொண்டு போக சங்கையா கெஞ்ச, அவர் நெருங்கி வருகிற போது, சங்கையா விறைத்துக் கொண்டு போக...

ஒரே தள்ளுமுள்ளு. சண்டைக்காடு. சத்தக்காடு. முன்னுக்கும் பின்னுக்குமாய் இழுப்பு. விட்டு விலகிப் போய் விடாத மல்லுக்கட்டு.

'அந்தா... இந்தா' என்று... இழுபறி முடிந்து, 'நாலாயிரத்து அறுநூறு' என்று விலை முடிகிற போது... ஒரு பேய் மழை ஓய்ந்த மாதிரி. ஒரு கலகம் நின்ற மாதிரி.

ஒரு சத்த வெறிச்சிடல்.

ஆடு... கிடாய்களின் வாலோர ரோமத்தில் கொஞ்சம் பிடுங்கி, பெரியவரிடம் ஒப்படைத்தான். ஆடுவளர்ப்பு ராசி அற்றுப் போய் விடாமல், தொடர வேண்டுமென்ற ஐதீகம்.

ரூபாய் கை மாறியது. நாலாயிரத்து இருநூறு எண்ணி வாங்குகிற போது, பெரியவரின் விரல்களில் நடுக்கம். மனப் பரவசம். வியாபாரிகளின் மூர்க்கக் கொள்ளையி லிருந்து காப்பாற்றிவிட்ட சங்கையா மீது ஒரு மரியாதை. வாஞ்சை.

''நல்லாயிருப்பே தம்பி... நீ இல்லேன்னா... மூவாயிரத் தைந்நூறுக்குக் கூட என்னாலே வித்துருக்க முடியாது... சம்சாரின்னா ஏவாரிகளுக்கு அம்புட்டு எளப்பமா போச்சு. நீ வந்ததாலே தான் தப்பிச்சேன்...''

இவன் மடிக்குள் தனியாக நானூறு ரூபாய். மடி கனக்கிறது. விதையில்லாமல் நிலமில்லாமல் நடந்த விளைச்சல். குளமில்லாமல் வலையில்லாமல் வந்த மீன். வெறும் கை போட்ட முழம். மந்திரத்தில் பழுத்த மாங்காய்.

நானூறு ரூபாய் லாபம் மனசில் முள்முள்ளாகக் குத்துகிறது. தரகாக வந்த நூறு ரூபாய் வேறு. மனசு கனத்து அழுத்துகிறது.

பெரியவரின் மரியாதையும், வாஞ்சையும் அவனது குற்ற உணர்ச்சியை கூடுதலாக்கினாலும்... புற உலகின் மூர்க்கமாக நிற்கிற சீட்டுக்கார மச்சான்... அவன் மனசை தழும்பாக்கினார்.

- குங்குமம்
18.4.2003

# நாளைய மேற்கு

நஞ்சடித்த கெண்டையாக (அ) லம்பிப் போய் வந்தார், ரெங்கப்ப நாயக்கர். ஊர் பூராவும் ரெண்டு மூன்று தடவை ரவுண்டு அடித்து விட்டார். ''வேலைக்கு வாரீயா... வேலைக்கு வாரீயா'' என்று கேட்டு வாயும் வலிக்கிறது. தெருக்காட்டைச் சுற்றி சுற்றி கால் நரம்பும் அ(று)ந்து விட்டது. கண்ணில் தட்டுப்பட்டவனையெல்லாம் கேட்டுக் கேட்டு சலித்துப் போயிற்று.

என்ன கொடுமையோ... ஒரு பாவிப் பயலும் வேலைக்கு வரமாட்டேன் என்கிறான். 'வேலை இருக்கு' என்கிறான்கள். 'கொறை வேலை கெடக்கு' என்கிறான்கள். ஆளுக்கு ஒரு பதில். ஆனால், எல்லாமே மறுப்புதான்.

கோடை உழவுகளும், பாத்தி கட்டுகளும், கோடை விதை ஊன்றல்களும், தண்ணீர் இறவைகளும் மும்முரமாக நடக்கிற நேரம். அறுத்த நாற்றுகளை பாரமேற்றிக் கொண்டு வந்து படப்பாக்குகிற வேலைகள். மிளகாய் பழம் காயப் போட... கூட்டியள்ள... தாட்டுகளில் அள்ளி அடைய... நெரிபுரியாக வேலைகள்.

ரெங்கப்ப நாயக்கருக்கு உழவு போட்டுக் கிடக்கிறது. பாத்தி கட்டுவதற்கான 'பட்ட உழவும்' அடித்துக் கிடக் கிறது. உடனடியாக பாத்தி கட்டணும்.

கோடை மழையை நம்ப முடியாது. காயப் போட்டாலும் போடும். 'திடுதிப்' பென்று கொட்டி ஊற்றினாலும் ஊற்றி விடும். மழை தண்ணீர் வருவதற்குள் பாத்திகட்டி முடிக்கணும். இல்லேன்னா... போட்ட உழவு வீணாகிப் போகும்.

ரெங்கப்ப நாயக்கருக்கு யோசனையும் பதைப்புமாக இருந்தது. 'என்ன செய்ய, ஏது செய்ய' என்று ஒரே முழிப் பாட்டம். தவியாய் தவித்து வருகிறார்.

கரையாண்டி ஞாபகம் வந்தது. ஆங்... சரியான ஆளு. பாத்திகட்டுறதுக்குன்னே பெறவியெடுத்தவன். கச்சிதமாக பாத்தி கட்டுவதில் துல்லியமும், நேர்த்தியும் கைகோர்த்து நிற்கும். சுத்துபட்டி பத்து ஊருக்கும் தெரியும், 'பாத்தி கட்டுறதுலே கரையாண்டியை ஃபீட் பண்ண ஆளே கெடையாது' என்று.

கரையாண்டி வீடு தெற்குத் தெருவில். நடையை எட்டிப் போட்டார், நாயக்கர். மலை மாதிரி மக்காச் சோளத்தட்டை பாரமேற்றிக் கொண்டு கடந்து போகிற டக்கர். சாயங்கால வெயில் பங்குனித் தகிப்போடு. ஓடியாடி தெருக்குழாய்களில் தண்ணீர் பிடித்து குடம் சுமக்கிற பெண்கள்.

திண்ணையில் காலை நீட்டி சுவரில் சாய்ந்து உட்கார்ந்து பீடி குடித்துக் கொண்டிருந்த கரையாண்டி. வயசான நாயக்கர் வருகிறார் என்ற மரியாதையில் பீடியை நசுக்கினான். தெருவில் நாயக்கர் நிற்கவும்... 'தடபுடா' வென்று எழுந்தான். முற்றத்தில் வந்து நின்றான். மேல் துண்டை எடுத்து, 'என்ன செய்ய' என்று ஒரு தடுமாற்றம். தத்தளிப்பு.

'தோளில் போடவா... கம்மங்கூட்டில் இடுக்கவா...' ஒரு குழப்பம். திண்ணையிலே கிடக்கட்டும்' என்று வீசியெறி கிறான்.

''என்ன கரையாண்டி, எப்படி இருக்கே?''

பவ்யமான சிரிப்பு. ''இருக்கேன்யா... உங்க புண்ணி யத்துலே''

''வேலைக்கு வாரீயா?''

''என்ன வேலைய்யா?''

''பாத்திகட்டு...''

''டிரில்லர் உழவா... மாட்டுக் கலப்பை உழவா?''

''ஏர்க் கலப்பைதான்...''

கேள்விகளின் ஆர்வத்துடிப்பு. வேலைக்கு வருவான் என்ற நம்பிக்கை தருகிறது, நாயக்கருக்கு. குரலில் உயிர்ப்பு வருகிறது. துவண்டு நனைந்து கிடந்த குரலில்... ஒரு சிறிய துள்ளல். அலைந்து அலைந்து ஆக்கை விட்டுப் போயிருக்கிற ரெங்க நாயக்கருக்குள் நம்பிக்கைத்துளிர்.

''இந்தாங்க... இங்க ஒரு எட்டு வந்துட்டுப் போங்க.'' வீட்டுக்குள்ளிலிருந்து வருகிற பெண் குரல்.

''இரு... வாரேன்... ஐயா இருக்காகள்லே?''

''இருக்கட்டும்...வந்துட்டுப் போயிருங்க...''

நாயக்கர் முகத்தையும், வீட்டையும் திரும்பித் திரும்பிப் பார்க்கிற கரையாண்டி. கண்களின் பறவையாட்டம். தர்ம சங்கடத் தத்தளிப்பு. எங்குட்டுப் போக என்ற பேய் முழி.

''போய்... என்னன்னு கேட்டுட்டு வா... அர்ஜெண்டு இல்லாம கூப்புட மாட்டா...''

நாயக்கரே அவனது தர்ம சங்கடத்தை தவிர்க்கிறார்.

''ஐயா... திருணையிலே உக்காருங்களேன்...''

''இல்லே... நீ போய்ட்டு, வெருசா வந்துரு... நா நிக்கேன்''

வேகமாக உள்ளே போகிற கரையாண்டி.

''என்ன... என்ன... சொல்லு...''

''பாத்தி கட்டப் போறீகளா, 'வரலே'ன்னு சொல்லப் போறீகளா?''

''ஏன்... என்ன விஷயம்?''

''போறதுக்கு வழியைப் பாருங்க.''

வெடுக்கென்று உத்தரவு போடுகிற பேச்சி. முகத்தில் கடுகடுப்பு. கண்களின் விறைப்பான பார்வையில் மனத் தெறிப்பு. இவனுக்குக் கோபம். சீண்டப்பட்ட சீற்றம். 'உத்தரவு போடுகிற அளவுக்கு திமிரா' என்கிற 'மன எகிறல். 'இவளுக்கெல்லாம் பணியணுமா' என்ற திமிறல்.

''கடைப்பாக்கியே நூத்தி எழுவது ரூவா இருக்கு'' கரையாண்டியின் உறுமலான ''ம்''.

''கடிச்சிக்கிடை என்னத்தையாச்சும் பாக்கணுமேன்னு தக்காளியும், முளகாயும் வாங்கப் போயிருந்தேன். கடைக் கார அண்ணாச்சி... மூஞ்சியை 'கடு, கடு'ன்னு வைச்சுக் கிட்டு, அரை மனசும் கொறை மனசுமாய் சரக்குக் குடுத்தாரு...''

உறுமல் இல்லாத ''ம்'' சுருதி குறைந்திருந்தது.

''பாக்கியை குடுக்குற வழியைப் பாருங்க'ன்னு கடுசலா சொல்லிட்டாரு. குடுக்குறதுக்கு ஏற்பாடு பண்ணுங்க... போங்க...''

பணிந்து ஒடுங்க வேண்டிய கட்டாயத்தில் கரையாண்டி. சட்டையை பிடித்து உலுக்குகிற வாழ்க்கை. சாட்டையை எடுத்து சுழற்றுகிற புற உலகம். பண உலகின் நிர்ப்பந்தம். மௌனமாக வெளியேறுகிறான்.

முகம் குறாவிப் போய் வருகிற கரையாண்டி. துள்ளல் வேகமாய் உள்ளே போனவன், வாழ்வின் மூர்க்கத்தால் உதைபட்டு துவண்டு வருகிற அவன். நனைந்த கயிறாக அயர்ந்துபோய் அவன். முகத்தில் கவலை நிழல்.

நாயக்கர் அவனையே பார்க்கிறார்.

''என்னப்பா... என்னமும் பிரச்சினையா?''

மறைக்க விரும்புகிற அவனது சுயமரியாதை உணர்வு. முகத்தை சகஜ நிலைக்குக் கொண்டு வர முயல்கிறயத் தனிப்பு.

''அதெல்லாம்... ஒண்ணுமில்லே... சும்மாதான்'' என்ற சமாளிப்பு. தன் கஷ்டத்தை தனக்குள்ளேயே புதைத்துக் கொள்கிற தன்மானம்.

பீடியை பற்ற வைக்கலாமா என்ற மன நமைச்சல். மரியாதைக்காக தம்மடக்கிக் கொண்ட கரையாண்டி.

''சரி... பாத்தி கட்டுறதுக்கு வாரீயா?''

''வாரேன்யா... எவ்வளவு எடம்யா?''

''முக்காக் குறுக்கம்''

''கொத்துக்கூலி தாரீகளா... காண்ட்ராக்ட் வுடுறீகளா?''

''நீ பாத்தி கட்டுனா தெளிவாயிருக்கும். வருஷ வெள்ளாமையே நல்லாயிருக்கும். கடைசி வரைக்கும் உடைப்பு இல்லாம ஒழுங்கா தண்ணி பாயும். இதையெல் லாம் நெனைச்சுத்தான் ஒன்னைத் தேடி இம்புட்டுத் தூரம் வந்துருக்கேன். காண்ட்ராக்டா பேசி... நீயே பொறுப் பாயிருந்து பாத்தி கட்டிக் குடுத்துரு...''

ரெங்கப்ப நாயக்கர் ஆள் கிடைக்காமல் தட்டலைந்து வந்தவர். இவனையே தேடி வந்த மாதிரி... வாயாலேயே சிலம்பு வரிசை போட்டார். 'அள்ளி விடுறார்' என்பதை துல்லியமாய் புரிந்துகொண்ட அவன், உள்ளுக்குள் சிரித் தான். மனசு துரிதமாக கணக்குப் போட்டது. காரியார்த்த மாக யோசிக்கிற போதே... அவரது 'சிலம்பு வரிசை'யை நம்புகிற மாதிரியாக முகத்தை வைத்துக் கொண்டான். ''அப்பச் சரியா'' என்று ஓர் ஒப்புதலும் போட்டு வைத்தான்.

''சொல்லு கரையாண்டி... எம்புட்டு கேக்கே?''

சொல்லத் தயங்குகிற பாவனை. கேட்கக் கூச்சப்படுகிற மாதிரியான தோற்றம். வார்த்தைகள் நொண்டியடிக் கின்றன. பேச்சு இழுத்து இழுத்து கரைகிறது.

''ஒழைச்ச கூலி கேக்க, என்ன தயக்கம்? சும்மா கேளப்பா...''

''அஞ்சாள் சம்பளத்தை குடுத்துடுங்க. 'படம் வரைஞ்ச மாதிரி பாத்தி கட்டித் தந்துருதேன்... கச்சிதமாய்''

மட்டியை கடித்து யோசிக்கிற நாயக்கர். நாலாள் சம்பளம் என்பது நாயமான ரேட், இவன் கூடுதலாகக் கேட்கிறான். அல்பத்தனமாக கணக்கு பாத்து, கஞ்சத்தன மாக கசறுனோம்னா... 'வரலை'ன்னுட்டு இவனும் உருவிக் கிட்டுப் போயிருவான். அலைய சீவன் இல்லே. கேவலக் கூத்தாயிரும்.

இவர் இப்படி நினைக்கிறார். அவன் நினைப்போ... வேறு திசையில்.

''ரொம்பக் கேட்டுட்டமோ... பயந்துபோய்... கலைஞ் சிடுவாரோ...?''

நாயக்கர்தான் முதலில் வாயைத் திறந்தார்.

''சரியப்பா... வாங்கிக்க. ஓரம்சாரம் செதுக்கி... அருகை யெல்லாம் செதுக்கி... கட்டிகளையெல்லாம் தட்டிவிட்டு... நல்லா கட்டிரப்பா...''

''வாய்க்கா வரப்பெல்லாம் இழுத்து... ஜம்முன்னு முடிச்சுத் தாரேன். அப்ப... டீச் செலவு பானைஞ்சுரூவா?''

''அது வழமைதானே? வாங்கிக்க...''

கரையாண்டிக்குள் ஒரு மகிழ்ச்சிச் சுனை. திருப்தியில் மனக்கனம் மறைந்திருக்கிறது. உள்ளுக்குள் ஒரு மன நிறைவுத் ததும்பல்.

அஞ்சாள் சம்பளம். ரெண்டாள் பகிர்ந்து கிடலாம். நேரக்கணக்கு பார்க்காமல், நிமிராமல் குனிந்து, வைராக் கியமாய் வேலையில் மும்முரப்பட்டால்... ரெண்டாள் பாத்தி கட்டி முடிச்சிரலாம். ஆளுக்கு நூத்து எழுவத்தைந்து ரூபாய் பிரித்துக் கொள்ளலாம், கடைப்பாக்கியை 'தூர நின்னு வாங்கிட்டுப் போ' என்று கித்தாய்ப்பாக கடைக் காரனிடம் பேசலாம். பேச்சியிடமும் சந்தோஷக் களையை பார்க்கலாம். கண்ணில் ஒளிப்பூவின் குளிர்ச்சியை காணலாம்.

ரெங்கப்ப நாயக்கருக்கும் ஒரு பாரம் இறங்கிய நிம்மதி. அவர் முகத்திலும் அதே மலர்ச்சி. ''அப்பா... டா! வேலை முடிஞ்சது' என்ற திருப்தி.

''ஒங்கூட... வரப்போறது... செந்தூரான்தானே?''

''ஆமாய்யா... அவன்தான், நம்ம கூட சமதையான ஸ்பீட்லே பாத்தி கட்டி வருவான். மம்பட்டிக் குன்னே பொறந்தவன்... அவன்''

புறப்பட்டவரிடம் இடைமறித்து கேட்டான்.

''அய்யா... எந்தப் புஞ்சைன்னு இன்னும் நீங்க சொல்லலே''

''பூவரசு மரத்துப் புஞ்சைதான்... ஓடைக்கு மேறகே நாலு புஞ்சை தள்ளி.''

கரையாண்டிக்குள் ஜில்லென்னு மின்னலாய் பாய்ந்த ஒரு சிலிர்ப்பு. அடிவயிறுக்குள் ஒரு திகில் கவ்வல். அடிமுதுகு முடிகிற இடத்தில் ஒரு ஐஸ் பாய்ச்சல். மூச்சடைப்பு வந்த மாதிரி, நெஞ்சுக்குள் ஒரு திக்கல். திணறல். பிசையப்படுகிற வலி. முகம் குறாவிப் போயிற்று. கண்ணின் இமைகள் துயரத் தில் துரிதத் துடிப்பாக படபடத்தது.

''என்னப்பா... தெகைச்சுட்டே?''

''இல்லேய்யா... நான் வேலைக்கு வரல்லே. வேற ஆளைப் பாத்துக்கங்க.''

நாயக்கருக்குள் பகீரென்றது. 'கல் ஏற்றிய மாதிரி மனப்பாரம்.

''ஏம்ப்பா... வாரேன்னு சொல்லி... எல்லாம் பேசி முடிச்சீயே?''

முகம் தாழ்கிற கரையாண்டி. நேர் பார்வை பார்க்க முடியாத மனத்தயக்கம். வாய்ப்பேச்சு மாற்ற வேண்டி யிருக்கிறதே என்கிற உள் கூச்சம். உயிரிழந்த குரல்.

''தப்பா நெனக்காதீக... நா வரல்லே...''

''அதா... ஏன்னு கேக்கேன்''

''அயத்துட்டேன்... ரொம்ப முக்கியமான சோலி இருக்கு''

''என்ன சோலி?''

''ரொம்பக் கேக்காதீக... என்னை வுட்டுருங்க...''

முகம் முறித்து பேசிவிட்டு வீட்டுக்குள் போகிற கரையாண்டி.

கரையாண்டி பொய் சொல்கிறான். எதையோ மறைக்கிறான். நிஜத்தை சொல்ல முடியாமல் மருகுகிறான் என்பதையெல்லாம் உணர்ந்துகொள்கிற ரெங்கப்ப நாயக்கருக்கு, என்ன செய்ய என்று தெரியவில்லை. குறுக்கும் மறுக்குமாக ஓடுகிற யோசனைகள்.

எல்லாம் கூடி வந்து... தாளிசத்தில் கடுகு பொறிகிற போது சட்டி உடைந்த மாதிரியிருக்கிறது. நாயக்கருக்கு. எதையோ பறிகொடுத்த ஏமாற்ற உணர்ச்சி.

அவனையே இதமாக... பரிவாக பார்த்த நாயக்கர். விட்டு விடவும் மனசில்லாமல், கட்டியிழுக்கவும் முடியாமல் அரை மனசும் குறை மனசுமாக... நடக்கிறார்.

திண்ணையில் அலை பாய்கிற கண்களுடன் கரையாண்டி. போகிற நாயக்கரின் முதுகு ரோமங்களையே பார்க்கிறான். எதையோ பறி கொடுக்கிற துயர உணர்ச்சி. நாயக்கரின் 'டடப் டடப்'பென்கிற செருப்புச் சத்தம் தேய்ந்து தேய்ந்து மறைகிறது.

கரையாண்டி பீடியை பற்ற வைத்தான். காய்ந்த உதடு. காய்ந்த மனசு. காந்தலான புகை. உலர்ந்த மனசைச்

சுடுகிறது. கசந்து வருகிற புகை நாற்றம். 'த்தூ' என்று சத்தமாய் துப்பி... பீடியை நசுக்கி எறிகிறான்.

ஆழ் மனசின் கசப்பு. அவமானத் தகிப்பு. மேலத் திசையையே வெறுப்பாக வெறிக்கிறான்.

...கரையாண்டி சின்னப்பிள்ளையாக இருக்கிற போது, உறக்கச் சடவில் நடந்தால் கூட... மேலத் திசையில்தான் நடப்பான். மேல் ஓடைக்கரையில் நற்சதுரமாய் ரெண்டு குறுக்கம் புஞ்சை. நல்ல தண்ணிக் கிணறு. சொல்லி வைத்த மாதிரி வெள்ளாமை வரும். உயிர்ச்சத்துள்ள மண். ஒன்றைப் போட்டால், நூறாகத் தரும். விதைக்கு உயிர் தரும். கோடி விதை தருகிற தாய்மை தரும். பொன்னாகிற மண்.

'பிள்ளையை காணோம்' என்று ஊரெல்லாம் தேடி... அலை பாய்ந்து, தவியாய் தவித்துவிட்டு அயர்ந்து உட்கார்ந்து விட்டார்கள், ஒரு சமயம். கரையாண்டி புஞ்சையின் வாய்க்காலில் படுத்துத் தூங்கியிருந்துவிட்டு, விடியக் காலம் வீடு வந்து சேர்ந்தான். கரையாண்டிக்கு புஞ்சை ரொம்பப் பிடிக்கும். புஞ்சை மண்ணை மிதித்தால், அம்மா மடியில் முகம் புதைக்கிற சுகம் இருக்கும். இவன் நட்டி வைத்த வேப்பங்கன்று. பொத்திப் பொத்தி வளர்த்த கன்று. இப்போது பெரிய மரமாக இருக்கிறது.

கரையாண்டியின் அய்யா முத்துவேல்தான் கிணறு தோண்டினார். கமலை போட்டார். மிளகாயும், பருத்தியும் தாட்டு தாட்டாக விளையும். முத்து வேலின் அய்யாதான் புஞ்சையை விலைக்கு வாங்கினார். நாலு மரக்கால் கேப்பைத் தவசத்துக்கு கை மாறிய புஞ்சை. அப்போதெல்லாம் காணப்பயறும், குதிரை வாலியும்தான் விளையும்.

முத்துவேல் கமலை மாட்டினார். முத்துவேல் மகன் கரையாண்டி காலத்தில்தான் பம்ப் மோட்டார் மாட்டி, கரண்டு வாங்கினார்கள். பசுமைப் புரட்சி. வீர்ய விதைகள்... யூரியா, காம்ப்ளெக்ஸ் என்று ரசாயன உரங்கள்... டெஸிஸ், மோனோ கிராப்ட்ஸ் என்று பூச்சி கொல்லி மருந்துகள்.

கரையாண்டி காலத்தில்தான் கூடுதலான மகசூல் வருகிற மாதிரி தோற்றம் காட்டி விட்டு, மளமள வென சரிந்தது. புதுப்புது நோய்கள். புதுப்புது மருந்துகள். மடியை பிடித்து இழுத்தன.

மண் புழு காணாமல் போய்... ரசாயன உரங்கள் மண்ணின் உயிர்த் தன்மையை காயடிக்க... புஞ்சை மலடாக... விளைந்த விளைச்சலைவிட... கடன் கூடுதலாக விளைய...

முண்டாப் பனியன் ஒன்பது ரூபாய் விற்ற காலத்தில், பருத்தி குவிண்டால் ஆயிரத்து எழுநூறு ரூபாய். முண்டாப் பனியன் முப்பத்து மூன்று ரூபாய் விற்கிற போதும், பருத்தி அதே ஆயிரத்து எழுநூறு தான்.

சர்க்காரும் சம்சாரிகளை நோம்பலப்படுத்தி மகிழ...

கீழ ராஜகுலராமன் பத்திர பதிவு ஆபீஸில் -

''கரையாண்டிங்குறது நீங்கதானா?''

''ஆமா...''

''அப்பா பேரு முத்துவேலா?''

''ஆமா''

''புஞ்சையை மனப்பூர்வமாய்த்தானே விக்கு றீங்க?''

''ஆமா''

''கையெழுத்து போடத் தெரியுமா?''

''கைநாட்டு தாங்க...''

''இங்க வாங்க... இந்த எடத்துலே கைநாட்டு வைங்க...''

செத்த பிரேதமாக பேசிய கரையாண்டி. மானம், மரியாதை, உயிர் எல்லாவற்றையும் விற்கிற அவமானம். ஐயாப்பா, ஐயாம்மா பாடுபட்ட புஞ்சை. அய்யா அம்மா வேர்வை சிந்தின புஞ்சை. நம்ம சந்ததிக்கு விட்டுட்டுப் போக வேண்டிய சொத்தை... கடன் சுமை தாங்காமல் யாரிடமோ பறி கொடுக்கிற பரிதாபம். வம்சத்து கௌரவத்தையே தொலைக்கிற அவமானம். வம்ச ரத்தம் உயிரில் ஓடுகிறது. வம்சச் சொத்தையும், மரியாதையையும் காப்பாற்ற முடியாத கையறு நிலைமை.

இப்போது-

கரையாண்டி மேலத்திசையை ஏறிட்டுப் பார்க்கக் கூட நடுங்குகிறான். எல்லாத் திசைக்கும் போவான். அந்தத் திசைப்பக்கம் மட்டும் போகவே மாட்டான். சிறு விவசாயியாக இருந்த குடும்பம், நிலமிழந்து, கூலிக்காரனாகிப் போனாலும்... சூடு சுரணை போகவில்லை. ரோஷம் குறையவில்லை.

மேற்குத் திசையே பகைத் திசையாகி விட்டது. பரம்பரை பரம்பரையாக சொந்தமாக இருந்த புஞ்சையை, வேற்றாள் நிற்கிற புஞ்சையாக நினைக்கவே சங்கடமாக இருக்கிறது. கண்கொண்டு பார்க்க மனசில் திடமில்லை.

பெருமூச்சோடு எழுந்தான். வீட்டின் வலதுபுறமிருந்த தொழுவத்திற்குள் நுழைந்தான். ரெண்டு ஜோடி மாடுகள்... எருமைகள், ஆடு குட்டிகள் என்று உயிர்கள் நிரம்பி... மூத்திர வாசமும், சாணி மணமுமாய் இருந்த இடம். இப்போது-

கழுவிக் கவிழ்த்த பாத்திரமாய் நிரம்பிக் கிடக்கிற வெறுமை. மனசைக் குத்துகிற சுத்தம். அவனுக்குள் ஏதோ ஒரு பிசைவு. கண்ணுக்குள் நீரின் உறுத்தல். கால் நீட்டி படுத்துக் கிடக்கிற கனத்த மௌனம். சவ அமைதி.

சோகத்தில் வாடி வதங்கிப் போய்... நனைந்த கந்தல் துணியாக துவண்டு வந்து திண்ணையில் விழுந்த கரையாண்டி. பீடியை பற்ற வைத்து கசந்த புகையை விழுங்கினான், வாழ்க்கையைப் போல.

அக உலகத்தை உசுப்புகிற புற உலகமாக பேச்சியின் கோபக் கத்தல். திசையற்று பாய்கிற தீயம்புகள்.

''ஏழரைச் சனியன் ஏறிக்கிட்டான்லே? வீடே எறங்கு தெசையிலேதானே சரியும்? காடு கரை காணாமப் போய்... மாடு கண்ணுக மாயமாகி... சின்னா பின்னமாகி... சீரு குலைஞ்சு, கூலிக்கு உழைச்சாத்தான் குடும்ப வவுறு நனையும்னு கூத்துவன் கொண்ணாந்து நிப்பாட்டிட்டான். கூலி வேலைக்கும் போக மாட்டேன்னு குத்துக் கல்லு கணக்கா ஆம்பளை உக்காந்துருந்தா... வீடு வெளங்குமா? அடுப்பு எரியுமா? கடைக்காரங்கிட்டே மானங்காப்பாத்த முடியுமா? என்ன எழவு வந்து விடியப் போகுதோ...''

பேச்சியின் ஆங்காரமான அங்கலாய்ப்புச் சத்தம். அடிமனசை அறுக்கிற அவமானம். தீயாய் சுட்டுத் தகிக்கிற சொற்கள்.

அடிபட்ட வலியோடு நிமிர்ந்து பார்த்தான். கோபமும், எரிச்சலுமாய் வந்தது. காட்டுக்கத்தலாக கூப்பாடு போடலாமா என்று குமுறுகிற உணர்ச்சியை அடக்கிக் கொள்கிற கரையாண்டி.

யிருக்க முடியாது... ச்சேய்!'' மனசின் வெக்கையை முணுமுணுத்துவிட்டு, துண்டைத் தூக்கி தோளில் போட்டு தெருவில் இறங்குகிற கரையாண்டி.

டீக்கடையில் நிற்கிற செந்தூரான்.

''கரையாண்டி மச்சானுக்கும் ஒரு டீ போடப்பா'' என்று சத்தம் தருகிற செந்தூரான். டீக்கடைக்குள் ஃபோர்ட்டபிள் டி.வி. பலத்த சத்தம் போட்டது. நாலைந்து பேர் டீக்கிளாஸும், டி.வி. பார்வையுமாக.

டி.வி. சத்தம் தொல்லை தராத தூரத்தில் ஒதுங்கி நின்று கொண்ட செந்தூரான். ரெண்டு பேருக்கும் டீ வந்தது.

''பாத்தி கட்ட வாரேன்னு சொல்லி, ரேட்டெல்லாம் பேசி முடிச்ச பெறகு, 'வரலே'ன்னு சொன்னீகளாம்லே... மச்சான்?''

''ஆமா. ஒனக்கெப்படி தெரியும்?''

''நாயக்கர் வந்துருந்தாரு...''

''நா என்னத்துக்கு அப்படிச் சொன்னேன்னு தெரியுமா?''

''தெரியும் மச்சான்...''

''எப்படி?''

மனசுக்கே ஆறுதலாக இருக்கிறது. விளக்கெண்ணெயில் கிடந்த இறகால் புண்ணை வருடின மாதிரியான இதம்.

''மச்சான்... நா ஒண்ணு கேட்டா... வருத்தப்பட மாட் டீங்கள்லே?''

''ம்... சொல்லு...''

''கண்ணை மூடிக்கிட்டா... பொழுதும், வெயிலும் சுடாம இருக்குமா?''

''சுடத்தான் செய்யும்?''

''வெக்கப்பட்டுப் போய், வேதனைப்பட்டுப் போய், எலங்கைப் பக்கமே ஏறிட்டுப் பாக்காம இருந்துருந்தா... சீதையை மீட்டிருப்பாரா, ராமரு?''

மனசில் தைக்கிற கேள்வியின் வலி தாளாமல், மௌன மாகப் பார்க்கிற கரையாண்டி.

''முக்கி மொனங்கிக்கிட்டு... திசையை பாக்காம மொடங்கிக் கிடந்துருந்தா... பாண்டவர்களுக்கு ஞாயம் கொடைச்சுருக்குமா?''

அலை பாய்கிற பார்வையோடு திகைக்கிற கரையாண்டி.

''பரம்பரைப் புஞ்சை போயிருச்சுன்னு முக்காடு போட்டுக்கிட்டு அழுதா... சரியாயிருமா? அணிலு, அனுமாரு, குகன், விபீஷணன்னு வந்தவுகளையெல்லாம் கூட்டிக்கிட்டு சண்டை போட்டாத்தான், பறி போனது திரும்பக் கெடைக்கும். தெரியுமா, மச்சான்?''

''நீ என்ன சொல்லுதே செந்தூரா...?''

''அடைஞ்சபொழுது விடியாமப் போகாது. ஒழைக் கணும். ஒதுங்காமப் போராடணும். பறி குடுத்த மேலப் புஞ்சையைக்கூட மீட்டிறலாம்''

# அன்பெழுத்து

எழுதமுடியாமல் போன மனத்தடை. சட்டென்று வந்து பிடிக்கிறது தடை. சிகரெட் இல்லாமல், வார்த்தை களே வற்றிப் போன மாதிரியோர் சூன்யம், பகீரிடுகிற வெறுமை.

எரிச்சலும் சிடுசிடுப்புமாக பேடையும் பேனாவையும் போட்டுவிட்டு, விருட்டென்று எந்திக்கிற சொர்ணச்சாமி, கோபமுறுக்கோடு தெருவில் இறங்கினான்.

டீக்கடையை நோக்கி நடையை எட்டிப்போடுகிற சொர்ணச்சாமி. சிகரெட்வெறி. அது இல்லாதது, கிறுக்குப் பிடித்த மாதிரியிருக்கிறது.

சீரெட்டு இல்லாம எழுத முடியலே. புத்தகம் வாசிக்க முடியலே. சீரெட்டை நிறுத்திட்டா... கதை எழுதுற திறமையும் நின்னுபோகுமோ.....

நேத்து இன்னிக்குத் தோணுன பழக்கமா? பதிமூனு வயசுலே பத்தவைச்சுப் பழகுனது. அப்பா அம்மா இல்லாமல், கண்டிச்சு நெறிப்படுத்த நாதியில்லாமல்... பத்திக்கிட்ட பழக்கம்.

இப்ப, கட்டாயமாகிப் போச்சு. இது இல்லேன்னா... கதை எழுத முடியாதுன்னு ஆயிப்போச்சு.

டீக்கடையில் போய்... துரிதப்படுத்தினான், சொர்ணச் சாமி.

''மொதல்லே சிரெட்டை குடு. அப்புறமா... ஒரு டீ போடு''

நாளைக்காச்சும்... எழுதாம நிக்குற கதையை எழுதி முடிச்சாகணும்.

சொர்ணத்தாய் வாளைக் கருவாடு வதக்கினாலே.... தனீ ருசிதான். ஏழெட்டு வீட்டுக்கு வாசம் பரவி, எச்சில் ஊறவைக்கும். சின்ன வெங்காயம், மிளகாய் நறுக்கிப் போட்டு, சீரகம் நசுக்கிப் போட்டு, எண்ணெயில் வதக்கி... அலசி வைத்த வாளைக் கருவாட்டுத் துண்டுகளை தூக்கிப் போட்டு ரெண்டு கிளாஸ் நீச்சுத் தண்ணீரை ஊற்றி... வற்ற வைத்து... எண்ணெய் ஊற்றி இறக்குவாள். அவள் கைப் பக்குவத்தில் தெருவே மணக்கும்.

சோறு 'கொண்டா', கொண்டா' என்கும். வஞ்சகமில் லாமல் வளைத்துவிட்டான். முரட்டுப்பிடி. வயிறும், நாவும், மனசும் நிறைந்த சாப்பாடு.

பற்றவைத்திருக்கிற சிகரெட், இந்த மன நிலையில் ரொம்பச் சுகம்.

வீடு முழுக்க அலைகிற சொர்ணத்தாய். பொழுதுக்கும் வீட்டுவேலைகள், பாத்திரம் கழுவ...சட்டிப் பானை அலச... உலை வைக்க... அரிசி பிணைய... காய்கறி நறுக்க... தாளிக்க... சாப்பிட்ட வட்டில்களைக் கழுவ...

சொர்ணச்சாமி வாசலை ஒட்டிய இடத்தில் உட்கார்ந்து, சு. சமுத்திரத்தின் 'வாடாமல்லி' நாவலை வாசிக்கிறான். நாலு பக்கம் வாசிப்பதற்குள், அடுத்த சிகெரட் பற்ற வைக்கணும். நாக்கும் மனசும் கிடந்து பரபரக்கும். ராத்திரி பத்து மணிக்கு மேலாகிவிட்டது. கரண்டு நின்று, வந்து விட்டது. சூடம் கொளுத்திவிட்டு... பாயில் படுக்கப் போனவளை,

''மாத்திரை சாப்புட்டுட்டியா?''

நாவலின் மும்முரத்திலும் அக்கறையோடு கேட்கிற அவன்.

''ம்''

அவனுக்குள் மெல்லிசான சந்தேகம்.

''பாப்பா, அம்மா மாத்திரை சாப்டுட்டாளா?''

''சாப்புட்டாகன்னுதான் நெனைக்கேன் பா''

''சரியா... கவனிக்கலியா?''

சொர்ணச்சாமி பாசத்தின் கோபக் கத்தல்.

''சாப்புட்டேன். பொய்யா சொல்லுதேன்?''

சொர்ணத்தாயின் தெளிவான பதில். சமாதானமாகிற அவன், 'வாடாமல்லி'க்குள் சிகரெட் வாசத்துடன் நுழைகிறான்.

சொர்ணத்தாய் அவனுக்கு வெறும் மனைவி மட்டுமல்ல; உயிர்த் தாய். ஆத்மக் காவலாளி.

சின்ன வயசிலேயே அப்பாவை இழந்து விட்டவன், சொர்ணச்சாமி. அம்மாவையும் தான். கூடப் பிறந்த அக்கா, தங்கச்சியும் கிடையாது. அம்மாவிடம் பாசத்தை ருசித்த நினைவு... மங்கலாக.

''தலைக்கு எண்ணெய் தேய்க்கலியா?'' ''மொகம் கொறாவிப் போயிருக்கியே, சாப்புடலியா?'' ''காய்ச்சலா, மண்டையடியா? பத்து அரைச்சுப் போடட்டா?'' என்றெல்லாம் பரிவுடன் கேட்க நாதியில்லா வெறுமை. 'செத்தானா, இருக்கானா' என்று புரட்டிப் பார்க்கக்கூட ஆளில்லாத சூன்யம். தைப்பொங்கல் பங்குனிப் பொங்கல் என்றால், ஊரெல்லாம் தோசை மணக்கும். இவன் வயிற்றில் பசியே

தகிக்கும். 'சாப்டுதியா' என்று ஒருத்தர்கூட இவன் மனசை அன்பால் தீண்டியதேயில்லை.

அம்மா பாசமில்லை. அக்கா தங்கை அன்பு இல்லை. பெண் வாசமேயில்லா வீடு. அன்புப் பட்டினியோடு சுற்றி யலைந்த சொர்ணச்சாமி, உறவுகளெல்லாம் ஒதுங்கிக் கொள்ள... வறுமை மட்டுமே வந்து அப்பிக் கொள்ள, அன்புச் சொட்டு நீருக்கும், பாசத்துளிக்கும் ஏங்கிச் செத்த வருஷங்கள்.

சொர்ணத்தாய் வாழ்க்கைப்பட்டு வந்தபிறகுதான் -

நாலு சுவரும், கதவுமாக இருந்த கட்டிடம், வீடாயிற்று. வீடு, அன்பும் இன்பமும் சுனைப் பெருக்குமாக ஊற் றெடுக்கிற குடும்பமாயிற்று.

சொர்ணத்தாயின் அன்புக்கும் சொல்லுக்கும் அப்படியே கட்டுப்படுவான், சொர்ணச்சாமி. கட்டுப்படாதது, சிகரெட் விஷயம், ஒன்றில்மட்டும்தான். ''இதிலேமட்டும் தலை யிடாதே, சொர்ணம். சீரெட்டு இல்லாம, எழுத முடியாது என்னாலே. எழுதலேன்னா... எம் பெறப்புலேயே அர்த்தம் இல்லே''

கெஞ்சலும் உறுதியுமாக அவன் சொல்ல... '' உங்க மனம் போல'' என்று பெருந்தன்மையாய் சகித்துக் கொண்டாள்.

...போன வருஷம், மாசி மாசம், ராத்திரி நேரம். பிள்ளைகள் சண்டையும் சத்தமுமாக கும்மாளம் போட்டுக் கொண்டிருந்தனர். அந்நேரம்

திடுமென்று, சொர்ணத்தாய் காலை அகலித்து உட்கார்ந் தாள். வலதுகை முழுக்க எரிச்சல் பற்றுவதாகச் சொன்னாள்.

வீடு முழுக்க பரவுகிற பதற்ற அலை.' அவளது கண் பார்வை ஒரு மாதிரியாக விறைத்தது. பிரக்ஞை தவறுகிற மயக்க நிலை. உதடுகளின் விம்மல். விறைப்பு.

மறு நாளே... ராசபாளையம் டாக்டர் கணேசனிடம் கூட்டிக் கொண்டு போனான். பதற்றத்தில் ரொம்பப் பதைத்தான்.

''பயப்படாதீக...நா இருக்கேன்லே? பார்த்துக்கிடுதேன்''

பரிசோதித்தார். ரத்தப் பரிசோதனை. எக்ஸ்ரே. டாக்டரின் அக்கறையும் பொறுப்புணர்வான செயல் பாட்டுத் துரிதமும் மனசுக்குள் நம்பிக்கை இறகால் வருடுகிறது.

ஊசி போட்டார். இங்கிதமான குரலில் பேசுகிற இதம்.

''நரம்புத் தளர்ச்சிதான். பயப்படுறதுக்கு ஒண்ணு மில்லே. இரும்புச் சத்தும் ரொம்பக் கொறைவாயிருக்கு. டெக்ரிட்டால் - 200னு ஒரு மாத்திரை எழுதியிருக்கேன். இதை மட்டும்...டெய்லி நைட்லே கட்டாயமா சாப்புடனும். அயத்துரக்கூடாது. ஒரு நாள் கூட மாத்திரை சாப்புடாம தவறவுட்ரக் கூடாது. இதை மட்டும் பாத்துக்கங்க. ஒண்ணும் பண்ணாது. நீங்க, உங்க பாட்டுக்கு நிறைய கதைகளை எழுதுங்க...''

டாக்டரின் முகமென்மை, பார்வையின் மிருது, மென்னகையிலிருந்த அவரது மனம், எல்லாமே நம்பிக்கை யூட்டியது. தைர்யம் தந்தது.

ஒவ்வொரு நாள் ராத்திரியும் ''மாத்திரை சாப்புட்டீயா?'' என்று கேட்காமலிருக்கவே மாட்டான். எங்காவது ஊருக்குப் போக வேண்டியதிருந்தால்... மகளிடம் சொல்லிவிட்டுப் போவான்.

''பாப்பா, நைட்லே அம்மாவை மாத்திரை சாப்புட வைக்கிறது ஒம் பொறுப்பு,''

கதை எழுத்தும், சிகரெட் புகையும், ஊர் சுற்றலுமாக இருக்கிற சொர்ணச்சாமிக்கு அப்பப்ப சளிபிடிக்கும். நெஞ்சு கனக்கும். சூறாவளியாக வந்து இருமல், விடிய விடிய உலுக்கியெடுக்கும். உறங்க விடாமல், வறட்டு இருமல் வாட்டியெடுக்கும். வீடே, இருமல் சத்தமயமாகும். அவனுக்கு வைத்தியம் என்றால், நண்பரிடம் போவதை தவிர்ப்பான். வேறு வேறு டாக்டர்கள் தாம்.

ஊசிகளைப் போடுவார்கள். மாத்திரைகளை எழுதித் தருவார்கள்.

''ஸ்மோக்கிங்கை நிறுத்துங்களேன்'' என்பார்கள். அசட்டுச்சிரிப்பில் சமாளிக்கிற சொர்ணச்சாமி. சிகரெட்டை எப்படி நிறுத்துறது? நிறுத்திட்டா... எழுதமுடியாதே. கதை எழுதமுடியாதே. கதை எழுதாம நூறுவருஷம் வாழ்ந்து, என்ன செய்ய? வெறும் வாழ்க்கை. வெறும் பிழைப்பு.

ஆயுசு குறைஞ்சாக்கூட பரவாயில்லே. சிகரெட்டை விட்டுர முடியாது. சிரெட்டை குடிச்சு கதைகள் எழுதி எழுதி... வெருசா... செத்துட்டாக்கூட கவலையில்லே. ஒடம்பாலே முடிஞ்சுபோன வாழ்க்கை, கதைக மூலமா... முடியாம நிரந்தரமா... புகழோட, சமுதாயப் பயன் பாட்டோட வாழ்ந்துக்கிட்டே யிருக்கும்.

சொர்ணச்சாமிக்குள் நினைவுறுதி. சிகரெட்டை எடுத்து பற்றவைத்து விடுவான்.

பங்குனி மாசம். கோடை வெய்யில். ராத்திரியிலும் தரை சுடுகிற அளவுக்கு அருங்கோடை. சொர்ணத்தாய்க்கு வைசூரி. சின்ன அம்மை.

இவனுக்குள் திணறல். மூச்சுமுட்டல். கவலையும் படபடப்புமாக உள்ளுக்குள் மருகுகிற சொர்ணச்சாமி.

என்ன செய்ய? வைசூரி விளையாடியிருக்கிறபோது, ஆசாரமாக இருக்கணுமே. மாத்திரை மருந்து சாப்பிடக் கூடாதே. ஒரு நாள்கூட நிறுத்தக் கூடாது என்று எச்சரித்த டாக்டர்.

போன் பண்ணினான், பதற்றமும், பதைப்புமாக. டாக்டர் மிருதுவான குரலில் பேசினார்.

"பயப்படாதிக. ஒண்ணும் செய்யாது. டெக்ரிட்டாலை நிறுத்த வேண்டாம். டெய்லி குடுத்துருங்க. சின்ன அம்மை தான். தப்பு இல்லே."

மறு மாசம். சொர்ணச்சாமி 'கலை இலக்கிய இரவு' நிகழ்ச்சிக்குப் போய்விட்டு விடிய விடிய கண் விழித்து... கண்ட கண்ட தண்ணீரைக் குடித்து, உறங்காமல் சிகரெட்டை ஊதி... தொலைதூரப் பஸ் பயணம் செய்து... வீடு வந்த போது... நல்ல சளி.

இறுகிக் கனத்த நெஞ்சு. முறுக்கிப் பிழிகிற உடம்பு வலி. தடுமன். மூக்கில் ஒழுகல். காந்தலான சுவாசம். இருமுகிற போதெல்லாம் நடு நெஞ்சில் 'சுருக், சுருக்' கென்கிற வலி. சிகரெட் புகை; கசக்கிறது.

உள்ளுக்குள் பயந்து போன சொர்ணச்சாமி, மரணச் சிறகின் நிழலிருட்டு. மாரடைப்புக்கான அறி குறியோ...

வியர்த்துப் போகிற மனசுக்குள் நடுக்க அதிர்வுகள்.

சத்தமில்லாமல் பஸ் ஏறிவிட்டான். டாக்டர் கணேசனிடம் தான் போகணும். பொறுப்பான பரி சோதனைகள் வேணும்.

பரிசோதித்தார். உதடுகளில் புன்னகை. மெல்லிய பரிகாசம்.

''வேற ஒண்ணுமில்லே. சளிதான். ஜாஸ்தியாயிருக்கு''

''நல்ல வேளை! நா என்னமோ ஏதோன்னு பயந்துட்டேன்''

''பயப்படுறாப்புலே நெலமை முத்துறதுக்கு, ரொம்ப நாள் ஆகாது''

''அ...ப்...பு...டியா? சரி, இப்ப இன்ஜெக்ஷனைப் போடுங்க''

''ஒரு நல்ல எழுத்தாளரைக் கொன்ன பழியை நா சுமக்க முடியாது. ஸ்மோக்கிங்கை நிறுத்துறேன்னு சொன்னாத்தான்... ட்ரீட்மெண்ட் பண்ணுவேன்'' சடேரென்று விழுகிற அடிகள்.

''இல்லேன்னா...?''

''வேற டாக்டர் கிட்டே போங்க...''

சிரிப்பும் கோபமுமான முகத்தில் கணேசன். புன்னகையில்லாத இறுக்கத்தில் உதடுகள். அவரையே பார்க்கிற இவன் முகத்தில் அசட்டுச் சிரிப்பு. கோபம் மாறாமல் கேட்கிற டாக்டர்.

''ம்... சொல்லுங்க... ஊசி போடவா?''

''போடுங்க''

''ஸ்மோக்கிங்கை நிறுத்துவீங்களா...?''

தயக்கம், அலைபாயும் கண்கள், மரணச்சிறகின் நிழல். புன்னகையற்ற டாக்டரின் முகம். கண்டிப்பான முகபாவம்.

''ம்... சரி, நிறுத்துறேன்''

ரெண்டு தோள்பட்டையிலும் ஊசி போட்ட வலி. இன்ஜெக்ஷனும், மாத்திரைகளும் சிரப்பும் எழுதின சீட்டுடன் மெடிக்கல் ஷாப்புக்கு வருகிற போது

திருகுமுருகலான யோசனைகள். வதைக்கிற நினைவுகள்.

சிரெட்டை நிறுத்திட்டா.. கதை எழுத முடியாதே... புத்தகம் வாசிக்க முடியாதே...நிறுத்த முடியுமா? ஏலுமா, என்னாலே...?

தனக்குக் கிடைக்காமற்போன அன்பை, எழுத்து மூலமா மானுடத்துக்குத் தரவேண்டாமா? அன்பில்லாத பூமியை அன்பாலே நனைக்க வேண்டாமா? சாதிச் சண்டைத் தீயை நனைக்கிற அன்பு. மதச் சண்டைத்தீயை அணைக்கிற அன்பு. எல்லா மனுசரையும் தாயாக பிள்ளை யாக பாசபந்தத்தோட புன்னகைக்க வைக்கிற பேரன்பு.

தன்னிலிருந்து பொங்கிப் பிரவகிக்கிற அன்பை அள்ளி அள்ளித் தருவதற்காகவே எழுதுற கதைகளை, நிறுத்திரவா? அன்பெழுத்தை நிறுத்துரது நியாயமா?

மெடிக்கல் ஷாப்பை விட்டு வெளியேறுகிற போது -

சிகரெட்டை பற்றவைத்தான். புகையை ஆழ்ந்து இழுத்தான். நடு நெஞ்சுக்குள் காந்தல் புகையின் மென் சுகம். கண்கள் சொருக... அதை அனுபவித்து, ரசித்தான். அடித்தொண்டையில் நமைச்சல்.

அஞ்சாறு நாளாயிற்று. காய்ச்சல் விட்டாலும், இருமல் விடவில்லை. உறங்கவே விடாத இருமல். சூறாவளி உலுக்கல், பாடாய்ப்படுத்துகிறது.

சொர்ணத்தாய் பதறிப் பதைத்தாள். மிளகும், பொறி கடலையும் சேர்த்து திங்கக் கொடுத்தாள். பனங்கற்கண்டும் சித்தரத்தையும் வேகப்போட்டு, சாறு தந்தாள். ஓடி ஓடி துளசி பறித்து, இண்டு தூதுவளை சேகரித்து, கஷாயம் போட்டுத் தந்த கைப் பக்குவம்.

சரியாகி வருகிற மாதிரி தெரியவில்லை. அவளுக்கு ஆயாசம். உள் பதற்றம்.

''என்னங்க... தொரத்தலு (இருமல்) வுடவே மாட் டேங்குது. வேற டாக்டர் கிட்டே பாப்போமா?''

''என்னத்தைப் பாக்குறது...'' சலிப்பும் விரக்தியுமாக அவன்.

''ஏங்க? என்ன இப்படிப்பேசுறீக?''

சட்டைப் பையிலிருந்து சிகரெட்டை எடுத்து, உதட்டில் பொருத்துகிறான். தீப்பெட்டியை தேடுகிற பரபரப்பில் அவன். தேடி எடுத்துத் தருகிறாள். பற்றவைத்து... புகையை உள்ளிழுத்து... நெஞ்சுக்கூட்டில் வைத்திருந்து, நாசித்து வாரம் வழியே விடுகிறான். அவனைப் பரிவுடன் பார்க்கிற ஆத்மக் காவலாளி.

''டாக்டர் என்னதான் சொன்னாரு?''

''நல்ல எழுத்தாளரை கொல்லக்கூடாதாம்... சிரெட்டை நிறுத்தணுமாம். ஊசிபோடுறதுக்கு ரொம்பத் தயங்குனாரு''

சொர்ணத்தாயுக்குள் அதிர்வின் நடுக்க அலைகள். அவளுக்குள்ளிருந்து வெளிப்பட்ட கனத்த மௌனம். கண்ணில் மனதின் வெல வெலப்பு.

''சிரெட்டை நிப்பாட்டலேன்னா... வைத்தியம் பாக்க மாட்டேன்னாரா?''

உணர்ச்சிகள் உறைந்து இறுகிப் போன குரலில் அவள். அலட்சியமாய் அசட்டுச் சிரிப்போடு இவன்: ''ஆமா... டாக்டருக்கு வேற என்ன வேலை? அப்படித்தான் சொல்வாரு''

''நீங்க சிரெட்டை நிப்பாட்ட மாட்டீக?'' அவளது கேள்வியில் மனசின் இறுக்கம். ஏதோ முடிவுக்கு வந்து விட்ட தீர்மானம். மன வைராக்கியம். பேரன்பில் விளைந்த கோபக்கனல்.

''நிப்பாட்ட முடியாதுல்லேம்மா... கதை எழுதணும்லே?''

விருட்டென்று அடுப்பங்கரைக்குள் பாய்கிற அவள். பிளாஸ்டிக் டப்பாவிலிருந்த டெக்ரிட்டால் மாத்திரை களை கோப வெறியில் தூக்கி எறிந்த உக்கிரம். வீசி யெறியப்பட்ட மாத்திரைகளை வெறித்தான். மனசின் கொதிப்பு.

பதறிப்போன சொர்ணச்சாமி. முழுசாகக் குலுங்கிப் போனான். ஆணி வேர் வரைக்கும் நடுங்கிப்போன அவன்.

''ஏம்மா... இதை வீசுறே?''

வைரத் தெறிப்பாக அவள். ''என்னத்துக்கு இது... எனக்கு?''

''வைசூரி போட்டப்பகூட நிப்பாட்டாத மாத்திரைம்மா. நீ பாட்டுக்கு எறியுதே...?'' வெலவெலத்துப் போன சிறு பிள்ளையின் தவிப்பில் அவன்.

உள்ளுறைந்த வைரக் கோபத்தில் தெறிக்கிற குரலாக சொர்ணத்தாய் ''இதை இனிமே தொட்டுக்கூட பாக்க மாட்டேன்''

நிமிர்ந்து அவளைப் பார்க்கிறான். அவளது இறுகலான முகத்தில் தெரிகிற உறுதி. துடிக்கிற நாசி நுனி. விசும்ப யத்தனித்து, நடுங்கி அதிர்கிற உதடுகள்.

இவள் நின்றால்... குடும்பச் சுழற்சி நிற்கும். குடும்பமே இல்லை.

இவளில்லாமல், நான் ஒன்றுமில்லை. மீண்டும் அன்பில்லாத பாலை வெக்கை வந்து மோதும். பிள்ளைகள் கதி?

என்னைப் போலவே, எனது பிள்ளைகளும் தாயற்ற பிள்ளைகளாக வேண்டுமா? தவிக்கவேண்டுமா? பாசமில் லாமல், ஆதரவில்லாமல், நாதியற்றுச் சீரழிய வேண்டுமா?

வேண்டாம்... வேண்டாம்... வேண்டும். எனக்கு என் உயிர் வேண்டும். ஆன்மா வேண்டும், சொர்ணத்தாய் வேண்டும்.

உடைந்து போகிற சொர்ணச்சாமிக்குள் உளைச்சல்.

குனிந்து... டெக்ரிட்டால்களை சேகரித்து... வலது கையில் வைத்து... அவளிடம் நீட்டுகிறான். அவனது கையின் நடுக்கம்.

உறைந்தப் பார்வையில் வாங்க மறுத்து சொர்ணத்தாய்.

''வாங்கிக்க...''

''என்ன?''

''இந்த நிமிஷத்துலேயிருந்து சிரெட்டை நிப்பாட்டிருந் தேன்... போதுமா?''

''நெசமாகவா?''

''ஒம்மேலே சத்தியமா''

ஏழு சிகரெட்களோடு கிடக்கிற பாக்கட்.

''அடுப்புலே இதை போட்டுரட்டா?''

''வேண்டாம். இங்கயே கெடக்கட்டும். கண்ணு முன்னாலே இருக்கட்டும். அப்பவும் தொடமாட்டேன்... ஒன்னைவிட சிரெட்டு எனக்கு மூக்கியமில்லே.

# சூரியத் தேர்

ஆவணி மாசத்து வெய்யில், பங்குனி சித்திரை வெய்யில் மாதிரி சுள்ளென்று அடிக்கிறது. ஆடி மழை பெய்யாமல், காற்று நனையாமல் வெக்கையைக் கக்குகிறது, தரை.

அரண்மனை வீட்டை நோக்கி, ஏழெட்டு இளவட்டங் களோடு, முற்றிய இளவட்டமாக வருகிறான் ராமையன் மகன் பாலையன். வாழ்க்கைக்கு வசங்கியவன். நேக்கு போக்கு தெரிந்தவன். நெளிவுசுளிவாக நடப்பவன். அவனது குழைவு நெளிவுப் போக்கு பிடிக்காமல், வெறுப்பும் கடுப்புமாகக் கொந்தளித்துக் கொண்டே வருகிற மற்றவர்கள். அதிலும் துடிப்பும் வெடிப்புமாக சடையனும், மருதனும். தெறித்துச் சிதறுகிற வார்த்தைக் கங்குகள்.

''வம்பாடுபட்டு... வேனாக் கொதிக்கிற வெய்யில்லே கெடந்து வெந்து அவிஞ்சு... நாம அறுத்துச் சேத்த கொளுஞ்சி கொழைக்கட்டுகளை அரமனைக்குத்தான் குடுக்கணும்னு சட்டமா?''

''அதானே? நெல்லுக்குத் தொழி கலக்குகிற ஒவ்வொரு வயல்காரவுங்களும்... தொழியிலே (பதப்படுத்தப்பட்ட வயல் சேறு) போட்டு மிதிச்சு அடி உரமாக்குறதுக்கு, 'எனக்கு வேணும், ஒனக்கு வேணும்'னு ஆலாய் பறந்துவர் ராக... கேக்குற துட்டை குடுக்கவும் ரெடியாயிருக்காக.''

''ஆமாப்பா...! அவுகளையெல்லாம் வுட்டுட்டு... அரமனையைத் தேடி இப்படி ஓடியாரணுமாக்கும்? ஓரஞ்சாரமா ஒடுங்கி நின்னு, தொண்ணாந்து கெடக்கணுமாக்கும்? தலையெழுத்தா?''

''காலம் முச்சூடும் இப்படியே அடிமைப் புத்தியோட இருக்கப் போய்த்தானே... நம்ம வாய்லே மனுசக் கழிவைத் திணிக்காக?''

'பீயைக் கரைச்சு மூஞ்சியிலே ஊத்துனாலும், சூடு சொரணையே வராதுப்பா. பாலையன் மாதிரியான ஆளுகளுக்கு காலடியிலே மிதிபட்டுக் கெடக்குறதுலே ஒரு சொகம், எரும மாட்டுக்கு சகதி மாதிரி''

சடையன், மருதனிடமிருந்து தெறிக்கிற கங்குத் துண்டுகள். பாலையன் மீதும் சில பொறிகள். சுர்ரென்று சுட்டது. கோபம் கோபமாய் வந்தது பாலையனுக்கு. பொறுமை வெடித்துச் சிதற... பெருங்கூப்பாடாகக் கத்தினான். ''ஏலேய்ய்...'' என்று எரிமலையாய் வெடித்தான்.

''வாயைப் பொத்துங்கடா... மூதிகளா'' கூவல்காடான கத்தல்.

''நேத்து மொளைச்ச குட்டி நாய்க நீங்க. என்னடா தெரியும் உங்களுக்கு? கோவில் கொளம் திருவிழான்னா... ஊர்லே தேர்தல் கீர்தல் வர்றப்ப... அரமனைக்காரவுக ஆதரவும், அரவணைப்பும் நமக்குத் தேவைப்படுதுல்லே? அரமனைச் சீமானோட அருமை, என்னடா தெரியும் ஒங்களுக்கு? பேசாமக் கெடங்கடா. வழமை போல அரமனைக்காரவுகளுக்குத்தான் முதல் மரியாதை. அவுக வேண்டாம்னு சொல்லிட்டாத்தான்... கொளுஞ்சி கொழைக் கட்டுக வேற ஆளுகளுக்கு 'கம்ம்'முன்னு வாங்கலே...''

அரண்மனை வீடு நெருங்கிவிட பொருமலுடன் மௌனமாயினர் சடையனும், மருதனும். மற்றவர்களும் விறைப்பும் தெறிப்புமாக. மூன்றாள் உயரத்துக்கு நின்ற மிகப் பெரிய இரும்பு கேட்டுக்கு வெளியில் நின்றனர் அவர்கள். மடித்துக் கட்டிய கைலியும், கலர்பனியனும், தோளில் மடித்துப் போட்ட அழுக்குத்துண்டுமாக முதல் ஆளாக நிற்கிற பாலையன்.

இரும்பு கேட் வழியே பார்க்கிற பாலையன். சுற்றிலும் கற்கோட்டைச்சுவர். நாலு குறுக்கம். நீள அகலத்தில் முற்றம், சமுத்திரம் மாதிரி. கூவல்காடு போட்டாலும்... இங்கிருந்து சத்தம் போய்ச் சேருமா அரண்மனைக்கு?

அடிவயிற்றிலிருந்து குரலெடுத்துக் கூப்பிடுகிற பாலையன்.

''சா...மியோவ்... சா... மியோவ்... சாமியோ...வ்''

அரண்மனையின் உள் மையத்திலிருந்த சின்னக்கனிப் பண்ணையாருக்கு இது கேட்டிருக்க நியாயமில்லை. தலைவாசலையொட்டிய வராண்டாவில் நின்ற 'கணக்கு'க்குக் கேட்டது. பரம்பரை கிராம முன்ஷீப் குடும்பம். முன்ஷீப் பதவி ரத்து செய்யப்பட்ட நாளையிலிருந்து, இந்தப் பண்ணையில் தான் சேவகம். நிர்வாகச் சேவகம்.

எட்டிப் பார்க்கிற கணக்கு தூரத்தில் கண்ணை எறிந்தார் ஏழெட்டு கறுத்த உருவங்கள். 'கீழத்தெரு ஆளுகளா இருக்குமோ? ராமையன் வந்துருப்பானோ...?'

பதிமூன்று படிகள் இறங்கி, கூட்டுவண்டியும், டிராக்டர் ட்ரெயிலரும், பல்கலப்பைகளும், சட்டிக்கலப்பைகளும் கூளப்படப்புகளுமாக இருக்கிற நாலு ஏக்கர் தாண்டி நடந்து வந்து, கேட்டுக்கு வந்து நிற்கிற கணக்கு அவரையே கண் வைத்துப் பார்க்கிற பாலையன்.

நெற்றி நிறைய திருநீறு. கை வைத்த பனியன். ரோமமில்லாத சின்னத் திரேகம். மழுங்கச் சிரைத்த முகம். இடுங்குகிற சின்னக் கண்ணுக்குள் சமுத்திர ஆழம். மீன்களும், திமிங்கலங்களும், இறாலும் சுறாவும் உலாவும் இருள் ஆழம்.

கிட்டவர, கிட்டவர... அசூயையில் சுருங்கி கோண லாகிற கணக்கின் முகம். வியர்வை நாற்றம் தாளாத முகபாவனையில், கண்ணைச் சுருக்கி, நாசியைப் பொத்து கிறார். கேட் அருகில் வந்து நிற்கிற அவர் கண்ணில் ஓர் எதிர்பார்ப்பு. ஆவலான தேடல்.

பவ்யமாகப் பணிந்து, முதுகு குனிந்து, நிற்கவேண்டும் என்று நினைக்கிறாரோ? குனிந்து, கும்பிட்டு மரியாதை செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறாரோ...

பாலையனுக்குள் மின்னலாய் ஓடிப்பாய்கிற நினைவு.

'உள்ளதையும் கெடுத்து நாசக்காடு பண்றதுலே தெற மையைக் காட்டுற இந்தக் கெடுதல்காரருக்கெல்லாம்... என்னத்துக்கு மரியாதை? இவரு பண்ணுன குசும்பு கொஞ்சமா? பத்த வைச்ச வினைகள் கொஞ்சமா?'

தலைமடங்காமல் நிமிர்ந்து யோசிக்கிற பாலையன்.

அவருக்குள் குப்பென்று பரவிப் படர்கிற வெறுப் புணர்ச்சி.

''என்னலே?'

காட்டமாய்க் கேட்கிற அவர்.

''சாமியவுகளைப் பாக்கணும்?''

''என்னத்துக்கு?''

''முக்கியமான வெஷயம்தா.''

''ஏன், ஏங்கிட்ட சொல்ல மாட்டீகளோ?''

''சொல்லாம என்ன?... நீங்கதானே நிர்வாகம் பண்ற சாமி? உங்ககிட்டே சொல்றதைவிட... சாமியவுகளைப் பாத்து, முகத்துக்கு முகமா சொல்லிரலாமேன்னு ஆசைப் படுதோம்.''

அப்புராணிப் பாவனையில் குழைவாகப் பேசுகிற பாலையன்.

கரட்டாண்டி கணக்காகத் தலையாட்டிக்கொள்கிற கணக்கு. கேட் பொருத்தியிருக்கிற சுவர் வளைவில் ஒரு சுவிட்ச். அதை நசுக்க நசுக்க... உள்ளே 'கிணிங், கிணிங்' கென்ற ஒலியதிர்வலைகள்.

வெறுப்பில் கறுத்த கணக்கின் கண்ணுக்குள் வன்ம நிழல்.

சின்னக்கனி செக்கச் செவேலென்று வருகிறார். கழுவித் துடைத்த சுத்தத்தில் முகம். தும்பைப் பூவாய் வேட்டியும், சட்டையும். அறுபதுக்கு மேல் வயது இருக்கும். நாற்பது போல ஒரு மயக்கம். நிழல் வாட்டத்து நிற மினு மினுப்பு. பரம்பரை பணச் செழிப்பு தந்திருக்கிற மனப் பூரிப்பு, முகப்பிரகாசிப்பாக...

'இம்புட்டுத் தூரத்துக்கு நடந்தே வர்றாக சாமியவுக. எளிய சாதியாளுகளை உள்ளே நுழையவுட்டுறக் கூடாதுங் குறதுலே அம்புட்டு உஷாரு' பாலையனுக்குள் திக்கங்காக ஒரு நினைவுப் பொறி.

'இப்பேர்ப்பட்ட ஆளுக்கா... தேடி வந்து... கூனிக் குறுகி... நின்று... அரும்பாடுபட்டு அறுத்த கொளுஞ்சி கொழைக்கட்டுகளை... தங்கப் பெட்டி கணக்கா தரணும்?'

சடையனின் பார்வை உக்கிரம். சீறிச் சினந்து தெறிக்கிற மௌனச் சொற்கள்.

கேட் நிழலில் போடப்பட்ட சேரில், ஆற அமர உட்கார் கிற சின்னக்கனி, ஆசுவாசமாகப் பெருமூச்சு விடுகிறார்.

''கும்புடுதேஞ்...சாமி'' பாலையனின் பவ்யம். தோள் துண்டு, உள்ளங்கைகளில். குனிந்து நிற்கிற பணிவு. சின்னக்கனி முகத்தில் மலர்ச்சி.

இதையே 'உர்ர்ர்'ரென்று பார்க்கிற கணக்கு.

பாலையனின் பின்னால் நின்றவர்கள்... தாழாமல், குனியாமல், கும்பிடாமல், விறைப்பும், கடுப்புமாக இருக்கிற 'திமிரை'யும் கவனிக்கிற சின்னக்கனி. 'விடலைப்பயக. விலாவுலே வெடிச்ச பயக இப்ப இப்ப... இந்தப் பயக எல்லாருமே, இப்படித்தான். இவங்களோட உள்ள சகவா சத்தை நிறுத்திக் கொள்ளலாமா? சங்காத்தமே வேண் டாம்னு அத்துவுட்டுறலாமா?' அவருக்குள் ஓடுகிற வெறுப் பலைகள். 'மரியாதை கெட்ட அற்பப் பயகளோட பழகுறதே இளப்பம்தான்' என்றொரு ஒளிச் சிமிட்டல்.

மரியாதையும், பணிவுமாகக் கும்பிட்டு நிற்கிற பாலை யனைப் பார்க்கிற சின்னக்கனி.

''கும்புடுதேஞ்... சாமி'' என்று மீண்டும் தாழ்கிற பாலையன்.

''என்னப்பா பாலையா, என்ன சௌக்யந்தானா?''

''ஏதோ... சாமியவுக புண்ணியத்துலே இருக்கோ...ஞ் சாமி.''

''ம்... அப்புறம்... என்ன காரியமா வந்தீக?''

''ஒரு முக்கியமான காரியந்தான்... சாமி''

''ம்... ஊர்த்திருவிழாவா... கோவில் கொளத்து வெவ காரமா... ஏதாச்சும் துட்டு துக்காணி வேணுமா?''

பாலையனின் கும்பிடு, குழைவு, தாழ்வு, குரல்பணிவு எல்லாவற்றையும் பொய்ச் சிரிப்போடு பார்க்கிற கணக்கின் கண்ணுக்குள் வன்ம நிழல். இதையும் நுட்பமாக மனசால் உணர்கிற பாலையன்.

'ஒசந்த சாதிக்கில்லாத வணக்கமும் குழைவும், ஊர்ப் பண்ணையாருக்கா? ம்...ம்' என்று நினைக்கிறாரோ... முதலாளியைப் பார்த்தான்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லே சாமி. ஆனிமாசத்துலே, வேலை சோலிக கெடைக்காத சமயத்துலே... நாங்க அறுத்து வைச்ச கொளுஞ்சி கொழைக் கட்டுக கெடக்கு. வருஷா வருஷம் ஒங்களுக்குத்தானே குடுப்போம்? அதான்... கேட்டுட்டுப் போகலாம்னு வந்தோம் சாமி...''

மறுபடியும் மற்றவர்களை ஒரு பார்வை பார்க்கிற சின்னக்கனி. வெடிப்பும் துடிப்புமாக நிற்கிற இளவட்டங் களைப் பார்த்து, மனசுக்குள் ஒரு கசப்புணர்ச்சி. ''போங்கடா... நாய்களா'' என்று துரத்தி விடலாமா என்று ஆத்திரப்படுகிற மனசு. பல்லைக்கடித்து தம்மைக் கட்டுப் படுத்திக்கொள்கிற பிரயத்தனம். முகபாவ இறுக்கத்தைத் தளர்த்துகிற பொய்ச் சிரிப்பு.

''கொளுஞ்சி கொழையா? ரைட்... ரைட்... நெல்லு வெள்ளாமைக்காக தொழி கலக்குறப்ப... கொளுஞ்சி கொழையைப் போட்டு மிதிச்சு... அடி உரமாக்குறது நல்லதுதான். ரசாயன ஒரங்களைவிட... தழை ஒரம்னா... தனி மவுசுதான்.''

''ஆமா...ஞ்சாமி, அதான் நாங்க வந்தோம். ஏழெட்டுப் பேரு கேட்டாக. நாங்க ஒங்களுக்குத்தானே, முதல் மரியாதை தருவோம்?''

பாலையனின் குரல் கனிவும், மனப்பணிவும் சின்னக் கனிக்கு இதமாக இருந்தது. மனசின் பெருமிதம், முகத்தில் பேரொளியாக ஒளிர்ந்தது. உதட்டில் ஒரு பூ மலர்ச்சி.

''சரிசரி... எத்தனை கட்டுக இருக்கு?''

''கொளுஞ்சிகொழை மட்டும் அறுபத்தாறு கட்டுக சாமியோவ். அப்புறம், ஆவரஞ் செடிக, ஆதாளைச் செடிக ஒரு மலைபோல அறுத்துக் குமிச்சிருக்கோம்.''

''நெசந்தானா? 'தாம், தூம்'னு கூடுதலா சொல்லுதியா?''

''உங்ககிட்டே பொய் புளுகு சொல்லுவமா?''

''வெலையைச் சொல்லப்பா...''

''வெலையெல்லாம் வேண்டாம் சாமி. பூமித்தாய் குடுத்ததை பூமித்தாய்க்கே குடுக்கப்போறோம். இதுலே வெலை சொல்ல எங்களுக்கு என்ன ரைட் இருக்கு? அறுப்புக் கூலி மட்டும் எறிஞ்சா போதும் சாமி, துண்டேந்தி வாங்கிட்டுப் போயிருவம்.''

சின்னக்கனி முகமலர்ச்சியையும் பெருமிதப் பூரிப்பால் கண்கள் மின்னுவதையும் பிடிக்காமல் பார்க்கிற கணக்கின் முகத்தையும் பார்த்த கணத்தில், மன இருட்டை உணர்கிற பாலையன்.

''சரிசரி... ஆளுக எம்புட்டு? அதையாச்சும் சொல்லப்பா?''

''நூத்தி எம்பத்தெட்டு ஆளுக... சாமி.''

'ஜாஸ்தியா சொல்தீயே...''

''உங்ககிட்டே கூட்டிக்கொறைச்சு சொல்வனா?''

''அப்...புடி..யா?''

''ரைட்... பாலையா, நீ நல்லவனா இருக்கே. ஒம் மொகத்துக்காக ஒத்துக்கிடுதேன்.''

''அப்ப... கொளுஞ்சி கட்டுகளை வாங்கிக்கிடுதீக. வேற ஆளுகளுக்கு இல்லேன்னு சொல்லிர வேண்டியது தானே, சாமி?''

''ஆமப்பா... கெடக்கட்டும். நமக்கே இருக்கட்டும். அட்வான்ஸ் கிடவான்ஸ் வேணுமா?''

பதறிப் பதைத்துப்போன பாலையன், துடித்தலறினான்.

''ஐயோ சாமி, நீங்க வாயாலே சொல்லிட்டா போதாதா? அதுவே எங்களுக்குச் சட்டந்தானே? இதுக்கு மேலே அட்வான்ஸ் என்னத்துக்கு?''

''அப்பச் சரி... நம்ம வயக்காட்டுக்குத்தான் உங்க கொளுஞ்சிக் கட்டு. மாத்துப் பேச்சில்லே. பேச்சு மாற மாட்டேன். கணக்கு வந்து, கட்டுகளை எண்ணிப் பாத்துட்டு வருவாரு. அப்புறம் வந்து பணத்தை வாங்கிட்டுப் போங்க.''

''அப்பச் சரி... சாமி, நாங்க உத்தரவு வாங்கிக்கிடு தோம்.''

''ம்ம்ம்... போய்ட்டு வாங்க...''

பாலையன் தவிர மற்ற பையன்களின் கடுப்பும் கனலு மான பார்வை, விறைப்பான நிமிர்வு எல்லாம் பண்ணை யார் மனசை உறுத்தியது. அறுத்தது.

'மதிக்காத பயகளோட சங்காத்தம் வைக்குறது தப்போ...?' உள்ளுக்குள் சலனப்படுகிற மனசு. சஞ்சலப் படுகிற அதிகார உணர்வு.

ஒரு கும்பிடு போட்டுவிட்டுத் திரும்பிய பாலையன், வந்த காரியம் முடிந்ததில் மகிழ்ந்தான். சக இள வட்டங் களைப் பெருமிதமாகப் பார்த்தான். கணக்கை ஒரு பார்வை பார்த்துவிட்டு நடந்தான்.

அவனுக்குள் அவரைப் பற்றிய நினைவுகள்.

ஆனி மாசம் தேதி பத்துக்கு மேல். அய்யன் ராமை யனைத் தேடி வந்தார் கணக்கு. கிழக்கே செவல்காட்டில் ஆள்களை வைத்து வேலை வாங்கிக் கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டு, அங்கேயும் வந்திருந்தார். வாகை மரத் தடியில் நின்றிருந்த அய்யன் காலடி நிறைய கொளுஞ்சிச் செடிகள். கடுகு மாதிரியான சிவப்புப் புள்ளிப் பூக்கள். பிறை நிலா மாதிரியான காய்கள்.

கணக்கை உட்காரச் சொன்ன அய்யன்.

''என்ன ராமையனா...'' என்று உட்கார்ந்தார்.

காட்டு வேலைக்கு ஆட்கள் வேண்டுமென கேட்க வந்திருந்த கணக்கு, நிறையப் பேசினார். அதையும் இதையு மாக வண்டி வண்டியாகப் பேசினார். பேசுவதிலேயே கவனம் குவிந்திருக்க... அவரது வலது கை, உணர்வே யில்லாமல், கொளுஞ்சிக் காயைப் பறித்தது. இலைகளை உருவியது. பூக்களை உருவியது.

இதையே... தள்ளி உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்த பாலையன். அய்யனும், கணக்கும் பேசுகிற பேச்சுக்குள் குறுக்கிட்டான்.

''என்ன சாமி, கொளுஞ்சிச் செடியோட மல்லுக் கட்டுதீக?''

''சும்மாதானப்பா...''

''அதை ஆட்டுதீக... அசைக்கீக... உருவுதீக... வேரோட புடுங்கிர முடியாது.''

''இவ்வளவு சின்னச் செடியையா... புடுங்க முடியாது?''

''முடிஞ்சா... புடுங்கிப் பாருங்களேன்.''

நக்கலான புன்னகை அவன் உதட்டில். கணக்கு, அலட்சியமாகப் பிடுங்க முயன்றார். அலட்சியமான முயற்சி. வரவில்லை. சிரத்தையோடு இழுத்தார். மொத்த உள்ளங்கையாலும் அழுந்தப் பற்றி இழுத்தார். மட்டியைக் கடித்துக் கொண்டு... 'தம்ம்' பிடித்துக் கொண்டு...

ம்ஹூம்... வந்து பார் என்றது. தோல்வியை ஒப்புக் கொள்வதில் வெட்க உணர்வு. இரண்டு கையாலும் மல்லுக் கட்டினார். கதையாக வில்லை. வியர்த்து விட்டது. கணக்கு தப்பி விட்டது, கணக்குக்குப் புரிந்து விட்டது.

''முடியலியேப்பா...''

அசட்டுத்தனச் சிரிப்பு. அவமானத்தை மறைக்க யத்தனிப்பு. ராமையன் சிரிப்பில் ஓர் ஏளனம். பாலையன் கண்ணில் துள்ளிய எகத்தாளம்.

''கொளுஞ்சியை அறுக்கலாம், மிதிக்கலாம்... பயன் படுத்தலாம்... பலனடையலாம். ஆனா... வேரோட புடுங்கி அழிச்சிர முடியாது.''

''உங்களை மாதிரியா?''

''உழைப்பாளிகளை மாதிரி...''

'எல்லாம் தெரிந்த ஞானக்கடலான நம்மை, இந்த எளிய சாதிப் பயல்கிட்டேயும் ஏதோ ஒண்ணைக் கத்துக்கிட வைச்சுட்டானே... ஈஸ்வரன்.'

உள்ளுக்குள் ஒரு கசப்புணர்வு. விளக்கெண்ணெய் குடித்த வரைப் போல கணக்கின் சின்ன முகம், ஏழு கோணலாக நெளிந்ததை... இப்ப நினைத்தாலும், சிரிப்பாணி அள்ளிக்கொண்டு வருகிறது பாலையனுக்கு.

''கொளுஞ்சி கொழைக் கட்டுக்கான பணத்தை வந்து வாங்கிட்டுப்போ'' என்ற தாக்கல், 'இப்ப வரும், பிறகு வரும்' என்று காத்துக் கிடந்தது தான் மிச்சம். அரண்மனையிலிருந்து ஒரு தூசிகூட வரவில்லை.

ரெண்டு மலைக்குன்று போல அடுக்கிக் கிடந்த கொழைக்கட்டுகளை கணக்கு, சுற்றிச் சுற்றிப் பார்த்து விட்டுப் போய் ஏழெட்டு நாட்களாயிற்று. ஒரு கிழமையின் வாலைப் பிடித்துக் கொண்டு மறுகிழமைகள் போக...

பாலையனே அரமனைக்குப் போனான்.

''சாமியவுகளைப் பாக்கணும்.''

இரும்புக் கேட் வர்ணாசிரமக் கோட்டையாக நின்றது.

''டவுனுக்குப் போயிருக்காக பண்ணை மொதலாளி''

''டில்லி போயிருக்காக...''

''அஸ்ஸாம் போயிருக்காக...''

நிஜமோ, பொய்யோ... இதுவே பதிலாகக் கிடைத்தது. இரும்புக் கேட்டில் பாலையனை இழுத்தடிப்பதில்..

அலைக்கழிப்பதில், கணக்குக்கு கொள்ளை மகிழ்ச்சி. குரூர நிறைவு.

வயல் வேலைகளின் மும்முரம். லாரி லாரியாக வந்து இறங்குகிற ரசாயன உர மூட்டைகள். டிராக்டரின் தொழி யடிப்புகள். சும்மா கிடக்கிற கொளுஞ்சி கொழைக் கட்டுகள்.

ஐந்தாம் தடவையாகப் போகிற போதுதான் கணக்கு, புதிரை விடுவித்தார்.

''பண்ணையாருக்கு உங்ககிட்டே கொழைக்கட்டு வாங்க மனசில்லே.''

''ஏனாம்?''

''நீங்க அவரை மதிக்கலியாம். அலட்சியமா நடந்துக் கிட்டீக. மொறைப்படி நடந்துக்கலே. அவரு ரொம்பக் கோபத்துலே கொந்தளிச்சுப் போயிருக்காரு...''

''நானா... மதிக்கலே?'' அதிர்ந்து போய்க் கேட்கிற பாலையன். வெலவெலத்துப் போனான்.

''ஆமா... மதிக்கலே. மொறையா நடக்கலை.''

''என்ன மொறை?''

''உங்க தெரு நாட்டாமை யாரு? உங்க அய்யன் ராமையன் தானே? பண்ணையாரைப் பார்த்துப்பேச நாட் டாமை வராம... குட்டிநாய், நீ வந்து வாலாட்டலாமா? அவரோட தரத்துக்கு நீ ஈடாகுமா?''

சுரட்டாண்டி கணக்காகத் தலையாட்டுகிற கணக்கு. ஊசிக் கண்ணில் வன்மக் குதூகலம்.

பாலையனுக்குள் அந்தநாள் நினைவுக்கு வந்தது. சாமியவுக. அவரது முகப்பெருமிதம். மனமலர்ச்சி. பூரித்த

சிரிப்பில் சுடர்விட்ட பூர்ண சம்மதம். 'அட்வான்ஸ் வேணுமா' என்று அவர் கேட்ட ஆர்வம். தீவிரம்.

பாலையனுக்குள் நம்பமுடிய வில்லை. திகைப்பு.

'அவரா... இப்படிச் சொல்லியிருப்பார்? ஒருவேளை... கணக்கு, 'ஊடு கலைப்பு' வேலை பண்ணியிருப்பாரோ? கட்டுகளை பாத்துட்டு வந்தபெறகு, வாங்கவிடாம கெடுக்குறதுக்கு ஏதாச்சும் 'குசும்பு' பண்ணியிருப்பாரோ? ''போன் போட்டா போதும், பெர்ட்டிலைசர் கம்பெனிக் காரனே சலாம் போட்டுட்டு... லோடு லோடா எறக்கிட்டுப் போயிருவாங்க. மதிக்காத இந்த எளிய சாதிப் பயககிட்டே, சங்காத்தமே வேணாம்...'' என்று அதையும் இதையும் பேசி... உசுப்பேத்தி விட்டிருப்பாரோ...''

கணக்கை நிமிர்ந்து பர்ர்த்தான். பார்வையின் தீ. அடிபட்ட மனசின் சீற்றம்.

பாலையனுக்கு ரொம்பக் கேவலமாக இருந்தது. மூஞ்சியில் காறித் துப்பியதாக உணர்கிறான். உள்ளுக்குள் அவமானக் கசப்பு.

அறுத்த அறுப்பு. பட்டபாடுகள். கொட்டிய உழைப்பு. ''உன்னோட வேர்வைக்கு வெலை சொல்ற தகுதி கூட, ஒனக்குக் கிடையாது'' என்று செருப்பால் அடித்த மாதிரி, இழிவு படுத்திவிட்டார்கள். மனசு கிடந்து தகிக்கிறது. ''நீயொரு மனுசப்பயலே கிடையாது. போடா'' என்று ஆதிக்கக் காலால் எற்றப்பட்ட வலி.

வாயில் மலத்தைத் திணித்த மாதிரி... மலத்தைக் கரைத்து மூஞ்சியில் ஊற்றின மாதிரி... பாலையனுக்குள் ஒரு கொதிப்பு. அய்யன் ராமையன்முன் தலை குனிந்து நின்றான். கொதிப்பும் குமுறலுமாக நடந்ததைச் சொல்கிற பாலையன். சொல்லுக்கு முந்திக்கொண்டு பொங்குகிற அழுகை.

ராமையன் அழுத்தமான நிதானத்துடன் சொன்னான்.

''ஒன்னை அடிச்சா... என்னை அடிச்ச மாதிரி தாண்டா... அந்த வலியும், அவமானமும் எனக்கும் தானே? அழாதேடா... பாலை, நமக்கும் ஒரு காலம் வராமலா போயிரும்?''

கொளுஞ்சி கொழைக்கட்டுகளை வேறு ஆட்களுக்கு விலை பேச நகர்கிற ராமையன். தேம்புகிற மகனை, நின்று திரும்பிப் பார்க்கிற ராமையன்.

''ஏலேய்... பயப்படாதேடா, கலங்காதேடா... கொளுஞ்சி கொழைக்குள்ள மவுசை எந்த காம்ப்ளெக்ஸ் ஒரமும் கொறைச்சிற முடியாது. நம்ம உழைப்பும், அப்படித் தாண்டா...''

கண்ணில் நீர்த்துளி முட்ட, அய்யனை ஏறிட்டுப் பார்க்கிற பாலையன்.

''காட்டை நெலமாக்குனதும், நெலத்தை பொன்னாக்குனதும் நம்ம ஒழைப்புதாண்டா. நம்ம வேர்வை சூரியனைப் போல. என்னென்னைக்கும் இருக்கும். எல்லாத்தையும் உண்டாக்கும் டா.பண்ணையாரு இல்லாம, நம்ம ஒழைப்பு வாழ்ந்துரும். நம்ம ஒழைப்பு இல்லாம, பண்ணையாரு வாழ்ந்துர முடியாதுடா... தைமாசம் வரட்டும்டா. நெல் கருதறுப்புக்கு நம்மளைத் தேடித் தானே வந்தாகணும் அப்ப... பேசிக்கிருவோம்டா...''

நரைத்த முடியும் கறுத்த உடலும், பழுத்த வயதுமாய் சூரியத்தேராய் நகர்கிற ராமையனை ஒளி துள்ளும் கண்ணால் பார்க்கிற பாலையன்.

- குங்குமம்
30.1.2004

9080831826

# ரத்த புஷ்பங்கள்

## 1

## ஒரு புஷ்பம் பேசுகிறது

எனக்குத் திருமணம் என்றார்கள் அத்தை. நான் என்ன பதில் சொல்வேன்? எந்தப் பெண்ணும் உள்ளுக்குள்ளேயே மகிழ்ந்து கொள்ளும் இடம் இதுதானே! சினிமாவில் வரும் கதாநாயகிகளைப் போல திருமணம் என்ற வார்த்தையைக் கேட்டதும் நான், ஓடி ஆடிப் பாட்டுப்பாட முடியுமா? இல்லை, என்னைக் கேலி செய்து பாட பத்துத் தோழிப் பெண்கள் இருக்கிறார்களா?

நானோ பிறந்தவுடனே தந்தையை இழந்தவள். அடுத்த வருஷம் தாயை இழந்தவள். 'தோசி' என்ற பட்டத்தைச் சுமக்கப் பிறந்தவள்.

அன்று எனக்குத் தொட்டில் கட்டியதும் அத்தைதான்; தூக்கி வளர்த்ததும் அத்தைதான்; பாவாடை கட்டி, தலை சீவிப் பொட்டிட்டதும் அத்தைதான்; பருவம் வந்ததும் புடவை கட்டச் சொல்லிக் கொடுத்ததும் அத்தைதான்.

என் அத்தையின் பெயர் அலமேலு. ஆனால் ஊரில் அவர்களை அலமேலுத்தாயார் என்றே அழைப்பார்கள். இரக்கமுள்ள பெண்மையெல்லாம் தாய்தானே.

என் அத்தையின் மனது பூப்போன்றது. ஆண்டவன் விதித்த சோதனை அவர்களுக்கு ஒரு அண்ணனும் இருந்து அவரும் ஒருநாள் ஒரு ஆண் குழந்தைக்குத் தந்தையாகி, மனைவியும், கணவனும் ஒரே நாளில மடிந்ததுதான்.

நாத்தனார் மகளைக் காத்து வளர்த்தது போல் அண்ணன் மகனையும் அணைத்து வளர்த்தார்கள் அத்தை.

அவர்களது சைவப்பற்று எனக்குத் தெய்வானை என்று பெயரிட்டது. அண்ணன் மகனுக்குத் திருமந்திரம் என்றும் பெயரிட்டது. தான் பெற்ற மகனுக்கு ரகுநாதன் என்றும், மகளுக்குக் கல்யாணி என்றும் பெயரிட்டது.

கணவனை இழந்துவிட்ட என் அத்தைக்கு நாங்கள் நாலு பேரும் குழந்தைகளாகவே இருந்தோம்.

'அத்தை' என்றழைப்பது திருமந்திரமும், நானும். 'அம்மா' என்றழைப்பது ரகுநாதனும், கல்யாணியும்.

ஒரு பக்கம் முறைப் பையன் திருமந்திரம், அவனுக்காகக் காத்திருந்தது கல்யாணி. மறுபக்கம் முறைப் பெண் நான். நான் காத்திருந்தது ரகுநாதனுக்காக.

யுத்த காலத்தில் ரஷ்யாவில் குடும்பங்கள் பல சேர்ந்து கூட்டு வாழ்க்கை நடத்தினார்களாம். பல குடும்பங்கள், ஒரே சமையல் என்று. அப்படித்தான் எங்கள் குடும்பம் இருந்தது.

அடிக்கடி கேலி செய்து கொள்ளவும், ஒருவருக்காக ஒருவர் காத்திருக்கிறோம் என்றெண்ணி ஆனந்தப்படவும் எங்களுக்கு வசதி இருந்தது.

என் மாமா, தர்மவான். தர்மவான்களின் சொத்துப் பலருக்குப் பயன்பட்டிருக்குமே தவிர, குடும்பத்துக்குப் பயன்பட்டிராதே! ஆகவே, மாமா சாகும்போது நாங்கள் நடுத்தர்வர்க்கப் பட்டியலுக்கு வந்து சேர்ந்தோம்.

இந்த நாட்டில் நடுத்தர வர்க்கம் என்பது ஊசலாடும் பொம்மை. அது பணக்காரனைப் போல் நினைத்துக் கொண்டு ஏழையாக வாழ்வது. நாங்களும் அப்படித்தான் வாழ்ந்தோம்.

— வரப்போகும் மணப்பெண் அதற்குள் அப்படிக் கேட்க லாமா? ஆனால் நான் கேட்டேன். அவரென்ன அறிமுகமில் லாத புது மாப்பிள்ளையா?

உள்ளே நுழைந்ததும் நுழையாததுமாக அவர் கதவைத் தாழிட்டார். அவர் முகத்தில் பயமோ பீதியோ, இல்லை. ஆனால் ஒரு பரபரப்பு இருந்தது!

''இதோபார் தெய்வா! ரயில்வேத் தொழிலாளர் வேலை நிறுத்தம் சம்பந்தமாக போலீஸார் என்னைக் கைது செய்ய வருகிறார்கள். நான் அங்கேயே கைதாகி இருப்பேன். அம்மா வைப் பார்த்துச் சொல்லி விட்டுப் போவதற்காக இங்கே வந்தேன்!'' என்றார், அவர்.

எங்களுக்கு இது வாடிக்கையான பழக்கம்தானே! ஆனா லும் எனக்கு என்னவோ போலிருந்தது. 'அம்மாவிடம் மட்டும் தான் சொல்ல வந்தாரா? நான் என்ன...' என்று எண்ணினேன்.

அதற்குள் அத்தை எழுந்து வந்தார்கள்.

''அம்மா! என்னை இப்போது கைது செய்வார்கள். இருந் தாலும் ஒரு வாரத்திற்குள் நான் வெளியே வந்து விடுவேன். வேலை நிறுத்தம் முடிந்தால் விடுதலையாகி விடுவேன். இல்லையேல் ஜாமீனில் வருவேன்'' என்றார் அவர்.

''கல்யாணத்திற்கு இன்னும் முப்பத்தாறு நாட்கள் தானப்பா இருக்கின்றன?'' என்றார்கள் அத்தை.

''அடேயப்பா! அதற்குள் மூன்று தடவை ஜெயிலுக்குப் போய்த் திரும்பி விடுவேன்'' என்றார் அவர்.

''என்னமோ மகனே! நான் செத்துப் போனால் எங்கிருந்தா லும் வந்து நீ கொள்ளி வைத்துவிட வேண்டும்'' என்று கண்ணைத் துடைத்துக் கொண்டார்கள் அத்தை.

''நான் எங்கிருந்தாலும் வந்து கொள்ளி வைத்து விடுவே னம்மா!'' என்று கையிலடித்தார் அவர்.

என்னதான் புரட்சிக்காரராக இருந்தாலும் பாசம் விடுகி றதா?

ஆதிசங்கரர் ஞான நிலை பெறப் போகும்போது அவரது தாயார் ஆர்யா தேவி கேட்டுக் கொண்டாராமே, 'நீ எங்கிருந்தாலும் வந்து கொள்ளி வைக்க வேண்டும்' என்று. அதுதான் என் நினைவுக்கு வந்தது.

"வேறு ஏதாவது விஷயம் இருந்தால் வழக்கம் போல் டாக்டர் ராமநாதனுக்கு டெலிபோன் செய்யுங்கள்... டெலிபோன் வேண்டாம். நேரிலேயே போய்ச் சொல்லுங்கள்" என்றார் அவர்.

என்னைக் காட்டி, "அவளுக்கு ஒரு தகவலும் இல்லையா?" என்றார்கள் அத்தை.

"தாலிதான் நான் அவளுக்கு தரும் முதல் தகவல்!" என்றார் அத்தான்.

மற்றத் தகவல்கள் அதற்குப் பிறகுதானே!

என் நாத்தனார் கல்யாணி இருக்கிறாளே, அவள் ஒரு வேடிக்கையான பெண். படுத்திருந்த பாயில் எழுந்து உட்கார்ந்தபடியே, "அண்ணா! எங்கிருந்தாவது லெட்டர் போடு அண்ணா" என்றாள்.

அவளுக்கு எப்போதுமே இந்த லெட்டர் பைத்தியம். வீட்டுக்குள்ளேயே இருக்கும் காதலனுக்கே லெட்டர்தான் எழுதுவாள்.

பாதி நேரத்தை ரயிலிலும், பாதி நேரத்தை ஜெயிலிலும் கழிக்கும் அண்ணனிடம் இருந்து அவளுக்கு லெட்டர் வந்தால் போதாதா! என்னால் தாங்க முடியுமா?

"எப்போது வருவீர்கள்?" என்று கேட்டு விட்டேன்.

"யாரறிவார் பராபரமே!" என்றார் அவர்.

அப்பொழுது பராபரங்கள் கதவைத் தட்டும் சத்தம் கேட்டது.

எதிர்பார்த்தது தானே!

போலீஸ் உள்ளே வந்தது; வாரண்டைக் காட்டி மரியாதை யாக அழைத்துச் சென்றது — அரசியல் கைதியல்லவா!

வழக்கம்போல் அத்தை கண் கலங்கினார்கள்.

எப்போதும் இல்லாமல் இப்போது ஏன் என் கண்களில் நீர் வருகிறது?

பந்தம் உறுதிப்பட்டு விட்டதல்லவா! மின்சாரம் வேலை செய்கிறது.

"இந்தப் பிள்ளைக்கு எப்போதுதான் புத்தி வருமோ..." என்று சொன்னபடி அத்தை படுக்கையில் வந்து உட்கார்ந்தார்கள்.

நான் அவர்கள் காலை அமுக்கியபடியே, "இந்த அரசியலில் என்ன வருகிறது? இதை விட்டு விட்டால் என்ன?" என்றேன். "கடவுளுக்குத்தான் வெளிச்சம்...!" என்றார்கள் அத்தை.

2

## இரண்டாவது புஷ்பம் பேசுகிறது

என் அண்ணா ஜெயிலுக்குப் போவது எனக்கு அதிர்ச்சியைத் தருவதில்லை. வருஷத்தில் ஒரு முறையாவது போகாமல் இருந்தால்தான் ஆச்சரியம். அம்மாதான் ஒவ்வொரு தடவையும் அதிர்ச்சிக்குள்ளாவார்கள். நல்ல வேளையாக அவர்களுக்கு மாரடைப்பு வருவதில்லை.

பெரும்பாலும் பெண்களுக்கு மாரடைப்பு வராதென்று டாக்டர்கள் சொல்கிறார்கள், பெண்மை உயிரணுக்களின் சக்தி அவ்வளவாம்.

குடும்பச் சூழ்நிலை சந்தோஷமாக இருக்க அவரும் எங்களைப் போலிருந்தால் எப்படி இருக்கும்? என்ன செய்வது?

மான் குட்டிகளில் ஒன்றாவது வலையில் மாட்டிக் கொண்டால்தானே வேட்டைக்காரன் பிழைக்க முடியும்?

நான் மறுநாளே அதை மறந்து விட்டேன்.

என் அத்தான் திருமந்திரத்தோடு எங்காவது சுற்ற வேண்டும் போல் எனக்குத் தோன்றிற்று. இவ்வளவு காலம் சேர்ந்திருந்தும்கூட நாங்கள் தனியாக எங்கேயும் போனதில்லை.

கல்யாணம் ஆகாத பெண் அப்படிப் போகக் கூடாது. சுற்றக் கூடாது. ஆனால் வரப்போகும் மாப்பிள்ளை, கூடவரும் போது என்ன பயம்?

எனக்கு ஒரு கவலை. நாங்கள் இருவரும் ஜாலியாகப் போவதைப் பார்த்தால் தெய்வானைக்கு ஏக்கமாக இருக்காதா? அதற்கு நான் என்ன செய்ய முடியும்? அவரவர் தலையெழுத்தை அவரவர்தானே அனுபவித்தாக வேண்டும்.

''அம்மா! நானும், அத்தானும்...!'' என்று இழுத்தேன்.

''இதை என்னிடம் கேட்க வேண்டுமா? பத்திரமாகப் போய் வாருங்கள். நல்லதும், கெட்டதும் கல்யாணத்திற்குப் பிறகுதான்'' என்றார்கள்.

நானென்ன அவ்வளவு அவசரக்காரியா? இல்லை, அவர்தான் அப்படியா? அவர் கொஞ்சம் குறும்புக்காரர். அவ்வளவுதான். அந்தக் குறும்பும் ஒருவகைச் சுகம் தானே!

''கடற்கரைக்குப் போவோமா?'' என்றேன் அத்தானிடம்.

''கடலை பட்டாணி சாப்பிடவா?'' என்றார்.

''மிருகக்காட்சி சாலைக்குப் போவோமா?'' என்றேன்.

''முன்பு இருந்த பழக்கமா?'' என்றார்.

''[illegible] [illegible] சினிமாவுக்குப் போகலாமா?'' என்றேன்.

"அது நல்ல யோசனை. அங்கே விளக்கு அணைத்து விடுவார்கள்!" என்றார்.

"குறும்பா? 'டச்' பண்ணக் கூடாது!" என்றேன்.

"'டச்' பண்ணாமல் 'கிஸ்' பண்ணுவது எப்படி?" என்றார்.

"நான் இப்போது 'மிஸ்' என்றேன்."

"நான் 'மிஸ்' பண்ண மாட்டேன்" என்றார்.

"அகாரணமாய்க் கையைத் தொட்டால் அபராதம் ரூபாய் ஐம்பது!" என்றேன்.

ஐம்பது ரூபாயை முன் கூட்டியே எடுத்துக் கொடுத்தார். எனக்குச் சிரிப்பு வந்தது.

சினிமாவுக்குப் போனோம். தியேட்டர் எங்களுக்கு வசதியாக இருந்தது. ஏனென்றால் மாடியில் எங்கள் இருவரைத் தவிர, வேறு யாரும் இல்லை. அவ்வளவு நல்ல படம் போலிருக்கிறது.

படம் தொடங்கிற்று. என் அத்தானின் குறும்பும் தொடங்கிற்று. அங்கே காதலர்கள் கட்டிப் பிடிப்பார்கள். இங்கே இவரும் என்னைக் கட்டிப் பிடிப்பார்.

இருட்டிலே ஒரு தடவை கை படக்கூடாத இடத்திலே பட்டுவிட்டது.

"சிச்சி! அசிங்கம்!" என்றேன் நான்.

படத்தில் ஒரு இடம் வந்தது. 'பெண்களுக்கு ஐந்து இடங்கள் ரசிக்க வேண்டியவை. மூன்று இடங்கள் சுவைக்க வேண்டியவை' என்றான் கதாநாயகன்.

"அதென்ன மூன்று இடங்கள்?" என்று அத்தானிடம் கேட்டேன்.

அவர் காதருகே வந்து சொன்னார்.

"தந்திக் கம்பியை அறுப்பது, தபால் ஆபீஸைக் கொளுத்துவது, ரயிலைக் கவிழ்ப்பது — இவற்றாலெல்லாம் ஒரு நாட்டைக் காப்பாற்ற முடியாது.

"ஒரு சித்தாந்தத்தை மக்களும் ஏற்றுக் கொண்ட பின்னாலே புரட்சி தானாகவே எழும். சிறு நெருப்பைக் காட்டினால் வெடி மருந்து பற்றிக் கொள்வது போல பற்றிக்கொள்ளும்.

அதற்கிடையில் வன்முறை செய்கிறவர்கள் தங்களையும், தங்கள் குடும்பத்தையும் அழித்துக் கொள்கிறார்களே தவிர, வெற்றி விளக்கைக் காண்பதில்லை."

— என்று எவ்வளவோ சொல்லி விட்டேன். என்ன செய்வது? வயது இருக்கிறதே! இது சொல்லிக் கேட்கிற வயதல்லவே! பட்டுத்தேறுகிற வயதாயிற்றே!

ரகு என்னை மாற்ற முயன்றானே தவிர, அவன் மாறவில்லை. அதற்காக அவனை நான் கைவிட முடியுமா?

பிள்ளை திருந்துகிற வரையிலே பெற்றவர்களும் பின்னால் போக வேண்டியவர்கள்தானே!

இதோ ரயில்வே வேலை நிறுத்தமாம். ரகுநாதன் கைதாகி விட்டானாம். அலமேலுத் தாயார் சொல்லியனுப்பி இருக்கிறார்கள்.

ஜெயிலுக்குப் போவதென்பது இந்தக் கம்யூனிஸ்டுகளுக்குத் திருப்பதிக்குப் போவது போலிருக்கிறது.

நானும் ஜெயிலுக்குள்ளே ஒரு நர்ஸிங் ஹோம் வைத்து விடுவதுதான் மரியாதை போலிருக்கிறது.

எந்த உத்தியோகத்தில் இருப்பவனுக்கும் கோடை காலத்திலாவது விடுமுறை கிடைக்கிறது. இந்த அரசியல் வாதிகளுக்கு அதுவும் இல்லை.

திருமணத்திற்குத்தான் நாள் வைத்தாகி விட்டதே! ஒரு குழந்தை பிறக்கும்வரை ஒரு வருஷம் கட்சிக்கு லீவு போடப் பட்டாதா?

யாரைச் சொல்லி என்ன பயன்? ரகுநாதன் படகு புயல டித்து ஓடினால், நான்தான் நீந்திப்போய் அதைக் காப்பாற்ற வேண்டியிருக்கும்.

நான் அலமேலுத் தாயாருக்குச் சொல்லியனுப்பினேன், ஆறுதலாயிருக்கும்படி.

தினசரி பத்திரிகையைப் பார்த்துக் கொண்டே வந்தேன். ரயில்வே வேலை நிறுத்தம் பற்றிப் பேச்சு வார்த்தை நடத்த அரசாங்கம் ஒரு கமிட்டியைப் போடுவதாகச் செய்தி வந்தது. கமிட்டி போடப்படுவதே காரியம் முடியாமல் இருப்ப தற்குத்தானே! ஈஸ்வரா! எப்பொழுது இந்த வேலை நிறுத்தம் முடியுமோ என்று ஏங்கிக் கொண்டிருந்தேன்.

நல்ல வேளையாக ரயில்வே யூனியன்களுக்கும் அரசாங் கத்துக்குமிடையே சமரசம் ஏற்பட்டு விட்டதாகச் செய்தி வந்தது.

கைதான எட்டாவது நாள் ரகுநாதன் விடுதலையாகி வந்து விட்டான். வந்ததும் அவன் தாயையும், மணப் பெண்ணையும் கூடப் பார்க்கவில்லை. என்னைத்தான் வந்து பார்த்தான். அவனோடு சித்தாந்தப் போர் புரிய நான் தயாராக இல்லை.

திருமண விஷயத்தை எடுத்து அவன் மனத்தில் குடும்பப் பற்றுதலை உண்டாக்க முயற்சித்தேன்.

'காமத்துப்பால், காம சூத்திரம், கொக்கோகம்' பற்றியெல் லாம் பேசினேன்.

அவன் சொல்கிறான், செக்ஸ் என்பதே புரட்சிக்கு ஒரு பிள்ளையைப் பெறுவதற்குத் தானாம்!

என்ன கன்றாவியோ! பிறக்கிற பிள்ளைக்கும் அதே புத்திதானா வரவேண்டும்? ஒரு வேளை இவர்கள் பிள்ளை வளருகிற வரையிலே, இவர்கள் புரட்சி முடியாது போல இருக்கிறது.

அன்று அவனை ஒரு சினிமாவுக்கு அழைத்துச் சென் றேன். அது ஒரு ஆங்கிலப் படம். அதுவரையில் அவன் சினிமாவே பார்த்ததில்லை. ஆறாயிரம் அடிப் படமே அவ னுக்கு வெகு நீளமாகத் தெரிந்தது. "இதை ஆயிரம் அடியாகச் சுருக்க முடியாதா?" என்று கேட்டான்.

"ஏன், ஐம்பது அடியாகக்கூடச் சுருக்கலாம்" என்றேன் நான்.

"என்ன கதை இது? எல்லோரும் கட்டிப் பிடித்துக் கட்டிப் பிடித்து விளையாடுகிறார்கள்" என்றான்.

"இது மனிதர்கள் கதை! ஏன், உங்கள் மாசேதுங் தத்துவத்தில் இது இல்லையா?" என்று கேட்டேன்.

திரும்ப அவனை வீட்டிலே கொண்டு போய் இறக்கி விட்டபோது நான் தெய்வானையைப் பார்த்து, "இதோ பார், இன்றைக்கு இவனை விடாதே! தாலி கட்டவில்லையே என்று கவலைப்படாதே! ஒரே காதல் பாட்டாகப் பாடு!" என்றேன்.

தெய்வானை வெட்கப்பட்டாள்.

அந்த வீட்டுக்குப் போகும்போதெல்லாம் தாய் தந்தை இல்லாத பெண் என்பதால் தெய்வானையிடம்தான் அதிகம் பேசுவேன்; ஆறுதல் சொல்லுவேன். அவளும் நன்றாகப் படித்த பெண் ஆதலால், என்னிடம் விவாதமே நடத்துவாள்.

கல்யாணி ஆணவக்காரி. தூக்கியெறிந்து பதில் சொல்லி விடுவாள்.

நான் சொல்லிவிட்டுத் திரும்பிய உடனேயே அதற்குப் பலன் இருக்கும் என்று கற்பனை செய்தேன்.

4

## ஒரு முள் பேசுகிறது

எனக்கு ஒரே ஆயாசம்.

அரசாங்கம் பேசிய சமரசம் ஒரு ஏமாற்று வித்தை போல் எனக்குத் தோன்றிறறு. எங்கள் யூனியன் இதற்கு ஒப்புக் கொண்டது தப்பு என்று நினைத்தபடி படுத்துக் கொண்டிருந்தேன்.

7

## தென்றல் மறுபடியும் பேசுகிறது

இறைவனுக்கும் நமக்கும் மட்டுமே தெரிந்த ரகசியங்களுக்காக அழவேண்டி நேர்ந்தால், நாமும் அவனும்தான் அழுதாகவேண்டும். 'வடிவேல் அறிய வஞ்சகம் இல்லை' என்பது எனக்குத் தெரியும். தெய்வானைக்கும், ரகுநாதனுக்கும் தெரியும். மற்றவர்களுக்குச் சொன்னால் தான் தெரியும்.

சொல்ல முடியாத நிலையில் அவமானங்களை ஏற்றுக் கொள்வது ஒருவகைப் புண்ணியமே தவிர, பாவமில்லை.

அறிந்தவர்கள், தெரிந்தவர்கள், அத்தை, நாத்தனார், சுற்றத்தார் தெய்வானையை வெறுத்த போதிலும், தன் வரையில் சத்தியவதி என்பதால் அவள் கலங்கவில்லை.

என் நர்ஸிங் ஹோமிலேயே அவளைத் தனியாகத் தங்க வைத்து விட்டேன். தனியாக ஒரு சமையல்காரியையும் ஏற்பாடு செய்துவிட்டேன்.

ஆனால், விடிந்தால் எழுந்தால் ரகசியப் போலீஸின் தொல்லை தாங்க முடியாமற் போயிற்று.

இந்த நிலையில் அலமேலுத் தாயார் மரணப் படுக்கையில் வீழ்ந்து விட்டார்கள் என்று கேள்விப்பட்டேன். போய்ப் பார்க்க ஆசை. ஆனால் மானமான மதிற்சுவர் வந்து குறுக்கே நிற்கிறது.

என்னுடைய நண்பர்களான டாக்டர்கள் சிலரை அனுப்பினேன். அவர்கள் போய்ப் பார்த்து, 'இனித் தேறாது!' என்று சொல்லி வந்துவிட்டார்கள்.

இந்தச் செய்தியை ரகுநாதனுக்குத் தெரிவிக்க வேண்டுமே?

அடிக்கடி ரகுநாதனுக்கும் எனக்கும் தூது செல்லும் புறா ஒன்றை வளர்த்து வந்தேன்.

சில நாட்களுக்கு முன்பு தெய்வானையைப் பற்றிய நிகழ்ச்சிகளையெல்லாம் எழுதி அதன் காலில் கட்டி அனுப்பினேன். எந்த ஒற்றன் சேதி சொல்லி, என்ன நடந்ததோ தெரியவில்லை. அந்தப் புறா திரும்பவே இல்லை. இனி யார் மூலம் சொல்வது?

'எப்படியும் தாயாருக்குக் கொள்ளி வைப்பேன்' என்று சத்தியம் செய்திருக்கிறானே?

திடீரென்று வெளியிலே ஒரு பிச்சைக்காரப் பெண் கைக் குழந்தையோடு பாடுவது கேட்டது.

தாங்க முடியாத வேதனையோடு சிந்தித்துக் கொண்டிருக்கும் போது, பாட்டு என்ன பாட்டு?

எனக்குக் கோபம் வந்தது. ஆத்திரத்தோடு நான் வெளியே வந்தேன். அவள் ஒரு குருட்டுப் பிச்சைக்காரி. கையில் அழுகின்ற குழந்தை.

அவளை நான் கூர்ந்து கவனித்தேன். அவள் மெதுவாக விழித்துப் பார்த்தாள். அவள் வேறு யாருமில்லை, சாந்தி.

நான் மடமடவென்று உள்ளே போய் ஒரு கடிதத்தை எழுதி, அதோடு ஒரு எட்டணா நாணயத்தையும் சேர்த்து அவள் கையில் வைத்திருந்த சட்டியிலே போட்டேன்.

சட்டியைப் பிடித்திருந்த விரல்களுக்கிடையே ஒரு கடிதம் நீட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்து மெதுவாக அதை வாங்கிக் கொண்டேன்.

சாந்தி பழையபடியும் பாடிக்கொண்டே போய் விட்டாள்.

அறைக்கு வந்து கடிதத்தைப் படித்துப் பார்த்தேன்.

நான் அனுப்பிய புறாவை வழியில் போலீஸார் சுட்டு விட்ட [illegible] ரகுநாதன் மடியிலேயே போய் விழுந்ததாம். அதற்கு மஞ்சள் போட்டுக்

கட்டி வைத்திருக்கிறானாம். எப்படியும் காப்பாற்றி விடலாம் என்று நம்புகிறானாம். தெய்வானையைப் பற்றிய விபரங்களைத் தெரிந்து கொண்டானாம். 'எதற்கும் மனம் கலங்க வேண்டாம்' என்று எனக்கு ஆறுதல் கூறி இருக்கிறான்.

இது நடந்த மூன்றாவது நாள் அலமேலுத் தாயார் மரணமடைந்து விட்டார்கள். மரணமடையும் போதும், 'என் மகன் தான் வந்து கொள்ளி வைக்க வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்களாம்.

'ரகுநாதன் எப்படி வரப்போகிறான்?' என்றே நான் திகைத்துக் கொண்டிருந்தேன். அவன் தாயாரின் பிணத்தை நாலும் பார்க்க முடியாது; அவன் மனைவி தெய்வானையும் பார்க்க முடியாது.

ஆனாலும் மனது கேட்கிறதா? சுடுகாட்டுக்குப் போய்ச் சற்று தூரத்தில் நான் நின்றுகொண்டேன்.

ஏழைகளுக்காகத் தன்னை நேர்ந்து விட்டுக் கொண்ட அந்தப் பாவியின் தாயை, ஒரு அநாதைப் பிணம்போல் நாலு பேர் தூக்கி வந்தார்கள். அவர்களில் திருமந்திரத்தைத் தவிர, மற்ற மூவரும் கூலி ஆட்கள். போலீசுக்குப் பயந்து உறவினர்கள் கூட வரவில்லை.

யார் கொள்ளி வைக்கப் போகிறார்கள்?

நான் ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டு நின்றபோது, சுடுகாட்டில் பல இடங்களில் மறைவாக நிறுத்தப்பட்டிருந்த போலீஸ் லாரிகள் என் கண்ணுக்குப்பட்டன. ரகுநாதன் வருவான் என்று எதிர்பார்த்தே அவர்களும் வந்திருக்கிறார்கள். யாரோ அவர்களுக்கு உளவு சொல்லியிருக்க வேண்டும்.

கிருஷ்ணாம்பேட்டையில் பிணத்துக்கு மேல் பிணம் வந்து விழுகிற காலம் அது.

அலமேலுத் தாயாரின் சிதைக்கு நெருப்பு மூட்டுவதற்கு முன்னாலேயே அடுத்தொரு பிணத்தை யாரோ நாலு பேர் தூக்கி வந்தார்கள். அவர்களுக்கும், இவர்களுக்கும் சண்டை நடக்கிற மாதிரி ஒரு நாடகம் நடந்தது. அந்தச் சிதைக்குப் பக்கத்திலேயே இந்தப் பாடையும் வைக்கப்பட்டது. இந்தப்

பாடையில் போர்த்தப்பட்டுக் கிடந்த சடலத்தின் கை நீள்வது போல் தெரிந்தது. அதிலொரு குந்தக்கம்பு வைக்கப்படுவது தெரிந்தது.

அலமேலுத் தாயார் சிதையில் நீப்பிடிக்கத் தொடங்கிற்று.

புதிய பாடைக்காரர்கள் கோபமாகத் தூக்கிக் கொண்டு போவது போல் தங்கள் பாடையைத் தூக்கிக்கொண்டு போகத் தொடங்கினார்கள்.

நான் நின்ற மரத்தடியின் வழியாகத்தான் அந்தப் பாடை போயிற்று.

மெதுவாக முக்காட்டை நீக்கி, எனக்கு நன்றி தெரிவித்து விட்டுப் போனான், அந்தப் பாடையில் கிடந்த ரகுநாதன்.

கடைசியில் அவன் கடமையைச் செய்து விட்டான். நான் எனக்குள் சிரித்துக் கொண்டேன். தூரத்தில் என்ன நடக்கிறது என்று பார்த்தேன்.

தாயாரின் பிணத்துக்கு யார் கொள்ளி வைத்தார்கள் என்று தெரியாமல், அதற்கொரு கமிட்டியைப் போட்டுக் கொண்டிருந்தார்கள் போலீசார்.

## 8

## அந்த முள் மறுபடியும் பேசுகிறது

மரணம் இயற்கையானதுதான். ஆனால் புரட்சிக் காரனுக்குக் கூட அது துன்பத்திற்குரியது. அதுவும் தாயின் மரணம் ஈடு செய்ய முடியாதது.

மனைவி இறந்தால் மறுமணம் செய்யலாம்; பிள்ளை மடிந்தால் பெற்றுக் கொள்ளலாம்; பெற்ற தாய் பிரிந்தால் பிரிந்ததே!

ஆயிரம் உயிர்களை அடுக்கடுக்காகக் கொல்லும் போர் வீரன் கூட, தாயின் மரணத்தில் தடுமாறி விடுகிறான்.

நான் எம்மாத்திரம்?

நகரின் எல்லையை ஒட்டிய ஒரு தனி பங்களாவில் மாறு வேஷத்தில் நான் தலைமறைவாக இருந்து வந்தேன். அங்கே சாந்தியும் மற்றொரு வேலைக்காரியுமே எனக்குத் துணையாக இருந்து வந்தார்கள்.

வடநாட்டுக்காரனைப் போல் வேஷமணிந்து, 'ராமானந்த்' என்று பெயர் வைத்துக்கொண்டு, இந்தியிலேயே பேசிக் கொண்டிருந்ததால், சந்தேகப்பட யாருமில்லை.

அந்தத் தெரு முழுவதிலும் சந்தேகத்துக்கிடமில்லாத புரட்சிக்காரர்கள் துப்பாக்கி, ரிவால்வரோடு எப்போதும் தயாராக இருந்ததால் நான் பாதுகாப்பாகவே இருந்தேன்.

சுடுகாட்டில் இருந்து திரும்பியதும், அந்த வீட்டுக்கு வந்து மாடியில் படுத்துக் கொஞ்ச நேரம் அழுதேன். பிறகு மகன் என்ற அந்த மனிதனை விரட்டி அடித்துவிட்டு, எழுந்து உட்கார்ந்தேன்.

புரட்சிக்கான புதிய திட்டங்களுக்கு இன்னும் நாட்கள் இருந்தன. ஆக்வே, வேலை இல்லாத சூழ்நிலையில் மனிதனுடைய சிந்தனை எங்கே ஓடும்? அதுவும் நான் வாலிபன். ஆறு மாதங்களுக்கு முன்பில்லாத காதல் உணர்ச்சி இப்போதெல்லாம் பெருக்கெடுக்கத் தொடங்கிற்று. டாக்டர் சொல்லிக் கொடுத்த காமசூத்திரங்களெல்லாம் இப்போது தான் வேலை செய்ய ஆரம்பித்தன. ஜீவ அணுக்கள் தாங்கள் உடம்பில் நிறைந்து கிடப்பதை ஞாபகப்படுத்தின.

அதை மறக்க 'தாஸ் காபிடால்' புத்தகத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்தேன். எழுத்தைக் கண் பார்த்ததே தவிர, இதயம் காமசூத்திரத்திலேயே நின்றது. என்ன, தாயை இழந்த நிலையிலேயே இப்படி என்கிறீர்களா? அதற்குக் கால நேரம் ஏது?

தாய் என்னை வாழ வைத்துப் பார்க்க விரும்பியபோது தோன்றாதது, தாய் இறந்த பிறகு தோன்றுகிறது.

தன் தந்தை இறந்து கிடந்த போது, தான் மனைவியோடு கட்டிலில் இருந்ததாகக் காந்தியடிகளே சுயசரிதத்தில் சொல்லவில்லையா?

விவஸ்தையற்ற நிலைதான். ஆனால் வாலிபத்தில் விலக்க முடியாத உணர்வு.

இரவு ஒன்பது மணிக்கே சாப்பாடு கொண்டு வந்து வைத்துவிட்டு, சாந்தி தனது அடுத்த அறைக்குப் போய் விட்டாள்.

மணி பத்து. எனக்கோ படுக்கை கொள்ளவில்லை. தெய்வானையின் நினைப்பு - நர்சிங் ஹோமில் அநுபவித்த ஒரு நாளைய மகிழ்ச்சி பத்து மடங்கு வெள்ளமாகத் தோன்றலாயிற்று.

அநுபவத்தோடு கற்பனையும் சேர்ந்து கொண்டால், அது கடற்பாம்பை விட அதிகமாகக் கையை விரிக்குமே!

ஆரோக்கியம் நிறைந்த இளமையின் உணர்ச்சிக் கூத்து எந்தத் தடைகளையும் மதிக்காதே!

'காமத்துக்குக் கண் இல்லை' என்பார்கள். கண் மட்டுமா இல்லை; அறிவும் இல்லை.

எழுந்து அங்குமிங்கும் நடை போட்டேன். தாகம் இல்லாமலேயே தண்ணீர் குடித்தேன். சிகரெட்டைத் தலைகீழாகப் பற்ற வைத்தேன்.

மணி பதினொன்று.

முழுக்கப் போர்த்திக் கொண்டு ஏதாவதொரு வாடகைக் காரில் நர்ஸிங் ஹோமுக்குப் போகவேண்டும் போல் தோன்றிற்று. அங்கே ரகசியப் போலீஸார் இருப்பார்களே — இல்லை; இந்த நேரத்தில் இருக்க மாட்டார்கள். இரண்டு எண்ணம். இறுதியில் இரண்டாவது மனம் வெற்றி பெற்றது.

போர்வையை எடுத்துப் போர்த்தினேன். மெதுவாகக் கதவைத் திறந்தேன். அங்கே நின்றாள் சாந்தி.

"தெரியுமே எனக்கு" என்றாள் அவள்.

அவளையே பரிதாபமாகப் பார்த்தேன்.

"நான்... நான்... காற்று வாங்கப் போகிறேன்...!" என்று தடுமாறினேன்.

"காற்றைத் தெருவிலா விற்கிறார்கள்..." என்றாள் அவள்.

நான் பழையபடியும் என் அறைக்குள்ளே நுழைந்தேன். அவளும் பின்னாலேயே நுழைந்தாள்.

"தலைமறைவுப் புரட்சிக்காரர்கள் அனைவரும் பெண் விஷயத்திலேதான் பிடிபட்டிருக்கிறார்கள். சொல்லப் போனால் ஒருவர் கூட வேறு வகையில் பிடிபட்டதில்லை. ஊமைத்துரையில் இருந்து, சமீப காலத்துக் கொள்ளைக் காரர்கள் வரை எல்லார் கதையுமே இதுதான். துப்பாக்கி கொஞ்ச நாள் வெடிக்காமல் இருந்தால் சிந்தனை வேறு வழியில் திரும்பி விடுகிறது. அந்தப் பயத்திலேதான் நான் உங்களுடனேயே இங்கே பாதுகாப்பாகத் தங்கினேன்" என்றாள் அவள்.

"இல்லையென்றால் நீயாவது போய்த் தெய்வானையை அழைத்து வா!" என்று கெஞ்சினேன் நான்.

"மலை, மகமதுவிடம் சென்றாலும், மகமது மலையிடம் வந்தாலும் போலீசாருக்குத் தெரிந்து விடும்!" என்றாள் அவள்.

"நான் பிடிபட்டால் கூடப் பரவாயில்லை; இந்த வேதனையை தாங்க முடியாது என்னால்!"

"ஒரு புரட்சிக்காரனின் பேச்சா இது...?" என்றாள் அவள்.

பேசத் தெரியாமல் பேசிவிட்டு, ஜெயிலில் மாட்டிக் கொண்டவர்களின் நிலையில் நான் நின்றேன். அவள் சொன்ன

எல்லாமே நியாயம்தான். சூடேற்றிவிட்ட உடம்பில் நியாயமும் ஏறுவது கடினமாயிற்றே! கொதிக்கின்ற பாலில் பச்சைத் தண்ணீரை ஊற்றினால், சிறிது நேரத்தில் அதுவும் சேர்ந்து தானே கொதிக்கப் போகிறது. நான் பதில் சொல்ல முடியாமல் ஒரு ஏழையைப் போல் அழுதேன். அவளைப் பாராதவாறு திரும்பிப் படுத்தேன். படுக்க முடியாமல் மீண்டும் எழுந்தேன். நிலை கொள்ளாத இந்தப் பைத்தியக்காரனை அவள் கவனிக்கிறாளா என்று திரும்பிப் பார்த்தேன். அங்கே அவளைக் காணவில்லை. நான் சாய்ந்து படுத்தவாறு அழுதேன். கதவு திறக்கும் சத்தம் கேட்டது. கண்களைத் துடைத்துக் கொண்டு மெதுவாகத் திரும்பிப் பார்த்தேன்.

தெய்வானை கட்டுகிற அதே புடவை. அதே மாதிரிக் கால் சலங்கை, கொண்டை, மல்லிகை — மெதுவாக அவள் பக்கத்தில் வந்தாள். நான் தலை குனிந்தபடி உட்கார்ந்திருந்தேன்.

"கொஞ்சம் நிமிர்ந்து பாருங்கள். நான் தெய்வானை வந்திருக்கிறேன்..." என்றாள் அவள்.

நான் திகைப்போடு அவளை நிமிர்ந்து பார்த்தேன். அவள் விளக்கை அணைத்தாள்.

அந்த இருளில் அவள் சொன்ன ரகசியம், தன் கணவன் மாட்டிக் கொள்ளாமலிருக்க தெய்வானையே இப்படி செய்யச் சொன்னாள் என்பதே!

நான் உலகத்தை மறந்தேன். சாந்தி, எனக்குப் புதியதோர் சாந்தி அளித்தாள்.

இப்போது நான் மீண்டும் பக்குவம் பெற்ற புரட்சிக்காரனாகி விட்டேன்.

9

# பூமி சொல்கிறது

கருவுற்ற பெண்களெல்லாம் இடுப்புவலி எடுக்கும் போதுதான் பிரசவ ஆஸ்பத்திரிக்குப் போவார்கள். ஆனால் தெய்வானை அதிர்ஷ்டக்காரி. ஆறு மாதங்களாகவே அவள் பிரசவ ஆஸ்பத்திரியில் தானே இருக்கிறாள்.

நிறை மாசத்தில் அவளைக் கவனிக்க ஒரு லேடி டாக்டரையே அமர்த்தியிருந்தார், டாக்டர் ராமநாதன். என்ன குழந்தை பிறக்கப் போகிறதென்றுதான் லேடி டாக்டர்களுக்குச் சொல்லத் தெரியாதே தவிர, எந்தனை நாளில் பிறக்கும் என்பதைக் கூடுமானவரை சரியாகவே சொல்லி விடுவார்கள்.

லேடி டாக்டர் சொன்னபடி, குறிப்பிட்ட நாளில் தெய்வானை ஒரு பெண் குழந்தை ஈன்றெடுத்தாள். ஆனால் அது சித்திரை மாதம். ஆடி மாதத்தில் கணவனும் மனைவியும் உறவு கொண்டால், சித்திரை மாதத்தில் குழந்தை பிறக்கும் என்றுதான் அவர்களை ஆடியிலே பிரித்து வைப்பார்கள். சித்திரைப் பிறப்பு வெயிலைக் குழந்தை தாங்காது என்பதால் அந்த ஏற்பாடு. 'ஆடி வேவு' என்று சொல்லி, பெற்றவர்கள் பெண்ணை அழைத்துக் கொண்டு போய்விடுவார்கள். உணர்ச்சி இல்லாமல் இருக்க 'ஆடிக்கூழ்' என்று செய்து கொடுப்பார்கள். ஆனால், ஸ்ரீராமனை கோசலை சித்திரை மாதத்தில்தானே ஈன்றெடுத்தாள். ஸ்ரீராமன் பிறந்த அதே சித்திரையில், நவமி திதியில், புனர்வஸு நட்சத்திரத்தில் தெய்வானைக்கு அந்தப் பெண் குழந்தை பிறந்தது. ராமன் பிறந்த நாளில், ஆண் குழந்தை பிறந்தால் ராமனைப் போல் கஷ்டப்படும். ஆனால் பெண் குழந்தை பிறந்தால் பெரிய அதிர்ஷ்டமாம்.

ஸ்ரீ ராமனையே நம்பாத ஒரு புரட்சிக்காரனுக்கு, ஒரு அதிர்ஷ்டக் குழந்தை பிறந்தது. அதற்குக் 'கோசலை' என்றே பெயர் வைத்தார் டாக்டர் ராமநாதன்.

குழந்தை பெறும்போது வேதனைப்படும் தாய், அதைப் பெற்றெடுத்ததும், அதை அதன் தந்தை பார்க்க வேண்டும் என்றுதானே ஆசைப்படுவாள்? நிச்சயமாக அந்தக் குழந்தையின் தந்தை விலாசம் ரகுநாதன். ஆனால் ரகுநாதனின் இன்றைய விலாசம் என்ன? புறா இருந்தாலும் செய்தி அனுப்பலாம்.

மொழு மொழுவென்று வளர்ச்சி பெற்ற குழந்தையைப் பத்து நாட்களாகியும் தந்தை பார்க்கவில்லையே என்று தெய்வானை வாடி நின்றபோது, அந்த நர்ஸிங் ஹோமுக்கு ஒரு புது நோயாளி வந்து சேர்ந்தாள். தாளாத வயிற்று வலியால் அவள் துடித்தாள். டாக்டரும் அது மிகவும் மோசமான வலிதான் என்பதை ஒப்புக் கொண்டார்.

அந்தப் பெண்ணைப் படுக்க வைக்க வேறு அறை கிடைக்காததால், தெய்வானையின் அறைக்குள்ளேயே கட்டிலைப் போட்டுப் படுக்க வைத்தார் டாக்டர்.

என்ன ஆச்சரியம்! அந்த அறைக்குள் வந்தவுடனேயே அந்தப் பெண்ணின் வயிற்று வலி பறந்து போய் விட்டது. முதலில், 'ஒரு பெண்ணை இந்த அறைக்குள் படுக்கவைக்கப் போகிறேன்' என்று டாக்டர் சொன்னபோது என்ன இதையும் ஜெனரல் வாடாக மாற்றுகிறாரே என்று கோபப்பட்ட தெய்வானை, இப்போது தன் படுக்கையையே அந்தப் பெண்ணுக்குக் கொடுக்கத் தயாராக இருந்தாள். காரணம், காணாமல் போன புறாவல்லவா வந்திருக்கிறது.

ஆம், சாந்தியே அங்கு நோயாளியாக வந்திருந்தாள்.

இந்தக் கருவுக்கு எவள் தூதுப் பெண்ணாக அமைந்தாளோ, அவளே குழந்தையையும் பார்க்க வந்திருக்கிறாள்.

பழைய நினைவுகளை இருவரும் புதுப்பித்துக் கொண்டார்கள். இந்த இடைக்காலத்தில் ரகுநாதனுடைய மறைவு வாழ்க்கையைக் காப்பாற்றுவதற்காகத் தானே தெய்வானை யாக நடித்த விவரங்களைச் சாந்தி அவளுக்குச் சொன்னாள். முதலில் அதில் அதிர்ச்சியுற்ற தெய்வானை, 'எல்லாம் உன் இஷ்டப்படியே' என்று அவள் சொன்ன போது தான் சுய நினைவுக்குத் திரும்பினாள்.

பெண்ணுக்குப் பொறாமை வருகிற இடம், இதுதானே! ஆனாலும் அந்தப் பொறாமையில் இருந்து மீண்ட தெய் வானை, அவர்களது அந்தரங்கம் பற்றி மேலும் பேச விரும்ப வில்லை. கணவன் நன்றாக இருக்கிறான் என்பதே அவளுக்கு ஆறுதலாக இருந்தது.

"இந்தப் பக்கம்தான் அவர் வர முடியவில்லையே தவிர, அதற்காக அவர் ஒரே இடத்தில் அடைந்து கிடக்கவில்லை. நானும் அவரும் மாறுவேஷங்களில் பல இடங்களில் சுற்றி வருகிறோம். புரட்சி சற்று நீறு பூத்த நெருப்பாக இருப்பதால் இந்த இடைக் காலத்தில் அவர் சித்தார் வாத்தியம் வாசிக்கவும், பாடவும் கற்றுக் கொண்டார். போலீசாரைக் கொஞ்ச காலம் தூங்க வைத்துவிட்டு, மறுபடியும் புரட்சி ஆரம்பமாகப் போகி றது. அதற்கிடையில் உன் நிலையை அறிந்து செல்லவே நான் இங்கு வந்தேன்!" — என்றாள் சாந்தி.

"குழந்தை அவரைப் போலவே இருக்கிறாள். அவர் அடுத்த பயணம் ஆரம்பிக்கும் முன்னால், இந்தக் குழந்தையை வந்து பார்க்கக் கூடாதா? தாய்க்குக் கொடுத்த வாக்கின்படி சுடுகாட்டுக்கே வந்து சேர்ந்த அவருக்கு, இது ஒரு கஷ்டமான காரியமா என்றாள்?" தெய்வானை.

அப்போது வெளியில் டாக்டர் யாருடனோ பேசும் சத்தம் கேட்டது. ஜன்னலைத் திறந்து மெதுவாக எட்டிப் பார்த்தாள் சாந்தி. அங்கே ஒரு போலீஸ்காரர் தன் மனைவியை ஆஸ்பத்தி ரியில் சேர்க்க வந்திருந்தார். அவர் சேர்க்க வந்த மனைவி வேறு யாருமில்லை; வேலைக்காரி லெட்சுமியே.

சாந்தி திரும்பி, "இதோ பார் உங்கள் வீட்டு வேலைக்காரி லெட்சுமி இங்கு நோயாளியாக வந்து சேர்ந்திருக்கிறாள். அவள்மீது எனக்குக் கொஞ்சம் சந்தேகம். இருந்தாலும் பரவா யில்லை. வருகிற ஞாயிற்றுக் கிழமை கலெக்டருக்கு இங்கே ராம்லால் மண்டபத்தில் ஒரு பெரிய விருந்து நடக்கிறது. அந்தக் கலெக்டர்தான் ரகுவின் தலைக்கு விலை வைத்தவர். அந்த விருந்திலே ரகு பாட்டுப் பாடவும், நான் நாட்டியமாட வும் ஒப்புக் கொண்டிருக்கிறோம். அதன் பிறகு தொடர்ச்சியாக நிகழ்ச்சிகள் நடைபெறப் போகின்றன. அதற்குள் நாளையே, எப்படியாவது மாறு வேஷத்தில் அவரை இங்கே வரச்சொல்லி குழந்தையைப் பார்க்கச் சொல்கிறேன்!" என்றாள் சாந்தி.

சாந்தி வெளியேறியபோது, அவளையே கூர்ந்து கவனித் தாள் வேலைக்காரி லெட்சுமி.

தனக்கு ரொட்டி வாங்கி வந்த பையனின் காதில் ஏதோ ரகசியமாகச் சொல்லியனுப்பினாள்.

சாந்தி சொன்னபடி, உயிருக்குத் துணிந்த நிலையிலேயே மறுநாள் ரகுநாதன் நர்ஸிங் ஹோமுக்கு வந்து விட்டான்.

எப்படி வந்தான்?

நரைத்த தாடி; குழி விழுந்த கண்கள்; தொள தொள சட்டை; கிழிந்த வேட்டி — ஆம். இப்போது அவன் ஒரு தோட்டி.

ஆஸ்பத்திரியில் ஒவ்வொரு அறையாகக் கூட்டிப் பெருக் கியபடி மெதுவாக டாக்டர் அறைக்குள்ளும் போய் தான் யார் என்பதைச் சொல்லிவிட்டு, அப்படியே பெருக்கிக் கொண்டே தெய்வானையின் அறைக்குள் நுழைந்தான்.

தெய்வானைக்கு அவனை அடையாளம் தெரியவில்லை. அவள் கண்ணீரோடு மகளைத் தாலாட்டிக் கொண்டிருந்தாள்.

அந்தத் தாலாட்டைக் கேட்டுக் கண்ணீர் வடித்தபடி, ஒரே இடத்தையே பெருக்கிக் கொண்டிருந்தான் ரகுநாதன்.

ஜன்னல் திறந்திருந்தது. நர்சுகள் வந்து போய்க் கொண்டி ருந்தார்கள். அதனால் அவனால் பேச முடியவில்லை.

திடீரென்று குழந்தையைக் கீழே வைத்து விட்டு, பாத்ரூமிற்குள் போனாள் தெய்வானை.

ரகுநாதன் அந்தக் குழந்தையை அப்படியே வாரி எடுத்து மாறி மாறி முத்தம் கொடுத்து மீண்டும் இருந்த இடத்திலேயே வைத்து விட்டான்.

வெளியிலே விசில் சத்தம் கேட்டது.

ஆறு லாரிகளில் போலீசார் வந்து இறங்கினார்கள். ஆஸ்பத்திரியில் இருந்து வெளியே போகிறவர்கள் அனைவரையும் சோதனை போடத் தொடங்கினார்கள்.

பார்த்தான் ரகுநாதன். தான் மாட்டிக் கொண்டு விட்டதாகவே அவனுக்குத் தோன்றிற்று. துடைப்பத்திற்குள் மறைத்து வைத்திருந்த ரிவால்வரை எடுத்து மடியிலே செருகிக் கொண்டான். தெய்வானை வைத்திருந்த சேலைகளில் ஒன்றை எடுத்துக் கட்டிக் கொண்டான். டாக்டருக்கு ஜாடை காட்டினான். திடீரென்று ஆபரேஷன் ரூமுக்குள்ளே சென்று படுத்துக் கொண்டான்.

டாக்டர் அவன் முகம் முழுவதிலும் பிளாஸ்திரி போட்டார்.

வெளியிலே ஒரு கார் வந்து நின்றது; அப்போது நர்ஸிங் ஹோமின் ஒவ்வொரு அறையிலும் சோதனை நடந்து கொண்டிருந்தது.

காரை ஓட்டி வந்த பெண்ணும், கூட இருந்த பெண்ணும், 'ஓ'வென்று அழுதபடி உள்ளே ஓடி வந்தார்கள்.

டாக்டரும், இன்னொரு நர்சும் ஆபரேஷன் ரூமில் இருந்த சடலத்தை ஸ்டெச்சரில் எடுத்துக் காரில் வைத்தார்கள்.

போலீசார் உயிருள்ள ஒருவனைத்தானே தேடுகிறார்கள். ஒரு பெண்ணின் பிணத்தைப் பற்றி அவர்களுக்கென்ன கவலை? அவர்கள் அந்தக் காரை சோதனை செய்யவில்லை.

கார் வெளியில் போகும்போது, காரில் இருந்த ரேடியோ கம்பீரமாக ஒரு பாட்டை ஒளி பரப்பிற்று. அது கே.பி.சுந்தராம்பாளின் குரல்.

"சிறைச்சாலை என்ன செய்யும்? சரீராபிமானமில்லா ஞான தீரரை சிறைச்சாலை என்ன செய்யும்...?"

10

# அந்த முள் மறுபடியும் பேசுகிறது

போலீசாரின் கண்ணிலேயே படாமல் தப்பி வந்து விட்டதில் எனக்குப் பெரும் மகிழ்ச்சி. அவர்கள் என்னைப் பார்த்திருந்தால் நான் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்திருப்பார்களே! சாந்திதான் எவ்வளவு சாகஸக்காரி!

'பெண்ணிடம் ரகசியம் நிற்காது' என்பார்கள். இவளோ கைதேர்ந்த புரட்சிக்காரியாக விளங்குகிறாள். எவ்வளவு மென்மையான உடம்பு! அதிலே எவ்வளவு பலமான இதயம்?

மனைவியாக, சமையற்காரியாக, மந்திரியாக, காவல்காரியாக — இப்படி ஒருத்தி கிடைக்கவில்லையென்றால், நான் எப்பொழுதோ மாட்டிக் கொண்டிருப்பேன்.

புரட்சி வென்று விட்டால், சாந்தியும் என்னோடு தங்க வேண்டியவளே. தெய்வானை அதை மறுக்க மாட்டாள்.

— இப்படி நான் எண்ணிக் கொண்டிருந்தபோது, ஒரு நாட்டியக்காரியின் ஜிகினா உடையில் உள்ளே நுழைந்தாள் சாந்தி.

அவளைக் கட்டிப் பிடித்து நான் முத்தமிட்டேன்.

இப்போது அந்த முத்தம் மிகவும் நெருக்கமாகவும், பாசம் நிறைந்ததாகவும் இருந்தது. அவளும் படுக்கையில் மட்டுமே சொல்லக் கூடிய, "ராஜா!" என்ற வார்த்தையை அப்போது வெளிப்படுத்தினாள்.

எதிர்த்தாற் போலிருந்த தம்பதிகள் மிக நல்லவர்கள்.

"இப்படியே நீங்கள் கால காலங்களுக்கு இருக்க வேண்டும்'' என்று ஆசிர்வதித்தார்கள்.

12

## அந்த முள் மறுபடியும் பேசுகிறது

நான் நினைத்தது சரியாகப் போய்விட்டது.

சாந்தியின் உடலைக் கொண்டு நடயும் கண்டுபிடித்த போலீசார், நாங்கள் தங்கி இருந்த வீட்டைக் கண்டுபிடித்து விட்டார்கள்.

என் மாறுவேஷ உடைகளும் கடிதங்களும் சிக்கி விட்டனவாம். காயம் ஆறிவிட்ட என்னுடைய புறாவையும் பிடித்துக் கொண்டு போய்விட்டார்களாம்.

அதனால் புறாவைக் கொண்டு என்னைப் பிடிப்பது சுலபம் என்றும், சென்னையை விட்டு திருச்சிக்கு இடத்தை மாற்றிக் கொள்ளும்படியும் ரகசியப் புரட்சி அலுவலகத்தில் இருந்து கட்டளை வந்தது.

எங்கு பார்த்தாலும் ஒரே ஒற்றர்கள் மயம். எப்படித் திருச்சிக்குப் போவது?

எங்கள் கட்சித் தோழர் ஒருவர் சென்னைக்கும் திருச்சிக்கும் இடையே லாரி ஓட்டிக் கொண்டிருந்தார். அவரைக் கைக்குள் போட்டுக் கொண்டேன். நானே மாறு வேஷமிட்டு லாரியை ஓட்டினேன். வழியில் பல இடங்களில் போலீசார் சோதனை போட்டார்கள்.

அவர்களெல்லாம், லாரியின் உட்புறம் தேடினார்களே தவிர, முன்புறம் தேடவில்லை. அவ்வளவு கெட்டிக்காரர்கள்!

அலகு - V

# 1. குரு தரிசனம்

சில ஊர்களைச் சிவனடியார் பாடிய ஸ்தலங்களென்றும், சில ஊர்களை ஆழ்வார்கள் பாடிய ஸ்தலங்களென்றும் சொல்வது போல், 'பாண்டிச்சேரி' என்று புதுச்சேரியைப் பாரதியார் பாடிய ஸ்தலம் என்று இவ்வூர் வாசிகளாகிய நாங்கள் பெருமையுடன் சொல்லிக் கொள்கிறோம். புதுச்சேரியைச் சுருக்கமாகப் 'புதுவை' என்றும் சொல்வதுண்டு.

> செந்தமிழ்த் தென்புதுவை
> என்னும் திருநகர்

என்று புதுச்சேரியைப் பாரதியாரின் 'குயில்' குதூகலமாய்ப் பாடியிருக்கிறது.

பல ஆண்டுகளாகப் பாரதியாரின் புதுச்சேரியில் வசித்து வந்தார்; மதில் இல்லாத சிறையில். விலங்கில்லாத கைதிபோலத்தான் காலம் கழித்து வந்தார். அக்காலத்திலேயே இவர், எத்தனையோ சொந்தத் துன்பங்களுக்கு இடையிலும், தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் துன்பங்களைக் குறித்து விசேஷ அனுதாபம் காட்டி வந்தார். இவ்வகுப்பைச் சேர்ந்த என்னிடம் இவருக்கு அலாதி அபிமானம். பாரதியாரின் அக்காலத்து வாழ்க்கை வரலாறுகளை அறிந்தவர்களாயும், அந்நாளில் இவருக்கு நண்பர்களாயும், இருந்த சிறு கூட்டத்தில் சிறியேனையும் சேர்த்துப் பேசுவதுண்டு. அவர்களில் ஒருவரும், இப்போதும் பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டிருப்பவருமாகிய நண்பர் ஒருவர், 'செந்தமிழ்ப் புதுவையில் ஸ்ரீமான் சுப்பிரமணிய பாரதியாருக்குத் துணையாயிருந்த பல நண்பர்களில் ஹரிஜன குலத்தைச் சேர்ந்த ரா. கனகலிங்கமும் ஒருவர்' என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆனால், நான் பாரதியாரை

நண்பராக எண்ணத் துணியவில்லை; பாக்கிய வசத்தால் கிடைத்த குருநாதர் என்றே நாளிதுவரையும் நம்பி வந்திருக்கிறேன்.

சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்-1907-ம் வருஷம் என்று ஞாபகம் - பாரதியார் அன்றைய சென்னைச் சர்க்காரின் பல அடக்குமுறைகளிலிருந்து தமது ஞானபுத்திரியாகிய 'இந்தியா' பத்திரிகையைக் காப்பாற்றி வளர்க்க வேண்டும் என்ற கவலையோடு புதுச்சேரிக்கு வந்து அப்பத்திரிகையை நடத்திவந்த போது, எனக்கு வயது சுமார் பதினேழு இருக்கும். கல்வே கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன். என் பள்ளித் தோழர்களில் ஒருவரான திரு. ராயல் ரெட்டி என்பவர் 'இந்தியா' ஆபீஸில் வேலை பார்த்து வந்தார். அவருடைய உதவியால் வாரம் தவறாமல் அப்பத்திரிகை எனக்கு வாசிக்கக் கிடைத்தது. அதைப் படிக்கப் படிக்க அந்தப் பத்திரிகையில் எனக்கு ஒரே மோகம் ஏற்பட்டது. பாரதியாரின் மீது எனக்குப் பக்தி ஏற்பட்டதற்கு அப்பத்திரிகைதான் முதலாவது காரணம்.

சில சமயங்களில் காலைவேளையில் பத்திரிகை பார்க்கப் பாரதியார் வீட்டுக்கும் போய்வரத் தொடங்கினேன். அங்கே 'சுதேசமித்திரன்' முதலான வேறு பத்திரிகைகளும் படிக்கலானேன். பிறகு தினந்தோறும் அந்த வழக்கத்தை மேற்கொண்டு அங்கே போய்வரலானேன். முதல் முதல் பாரதியாரைப் பார்த்ததுமே என் பக்தி குருபக்தியாகிவிட்டது.

'வீரத் திருவிழிப் பார்வையும்' என்று முருகன் பாட்டு ஒன்றைத் தொடங்குகிறார் சுப்பிரமணிய பாரதியார். அந்த மாதிரி வீரத் திருவிழிகள் (இரண்டுதான், பன்னிரண்டு இல்லை!) முதல் முதல் என்னை நோக்கியதும், நான் பணிந்து கை கூப்பினேன். அவர் ஒன்றும் பேசவில்லை. தலையை அசைத்து உட்காரும்படியாகக் கையால் ஸ்சைகை காட்டினார். 'தட்சிணாமூர்த்தி மௌனமாகவே ஏதோ உபதேசம் செய்துவிட்டார் சீடர்களுக்கு!' என்கிறார்களே, அந்த மாதிரி ஏதோ உபதேசத்தைப் பெற்றுவிட்டது போலத் தோன்றியது அடியேனுக்கும்.

இப்படிப் பல தினங்களாக நடந்துவந்தது. அதே 'வீரத் திருவிழிப் பார்வை' பார்ப்பதும், அடியேன் கை கூப்புவதும், அவர் சைகை காட்டி அமரச்செய்வதும், உட்கார்ந்த பின்பும் உரையாடாமல்

தமக்கு வந்திருக்கும் பத்திரிகைகளையோ, தமது 'இந்தியா' பத்திரிகையையோ ஒருமையுள்ளத்துடன் பார்த்துக் கொண்டிருப்பதும் இவ்விதமாகவே நாள்தோறும் நடைபெற்று வந்தன. இவரது அருமைப் புதல்வி - இப்போது ஸ்ரீமதி சகுந்தலை அம்மாள், அப்போது, பாப்பா? காலைச் சிற்றுண்டி கொண்டுவரும்போதுதான் - அதுவும், முன்னே கொண்டு வந்து வைக்கும்போதுதான் - பாரதியார் என் பக்கமாகப் பத்திரிகையைப் போடுவார்.

பத்திரிகையைப் புரட்டி நான் வாசிக்க முயலும்போதே, 'இந்தா, இதைப் பிடி!' என்ற குரலுடன் தோசையும் தொடர்ந்து வரும்! உலர்த்திய மாங்காய்த் துண்டோ உபகரணமாக இருக்கும். முதல் முதல் வாங்கி உண்ணக் கூசினேன். ஆனால் அந்த வீரத் திருவிழிகளை நோக்கியதும், 'வேண்டாம் என்றால் கோபிப்பாரோ?' என்று வாங்கி உண்டேன். நாளடைவில், அந்தத் தோசையைப் பிரசாதம் போல் வாங்கி, அமுதமாக உண்டு வந்தேன். காப்பியும் கொடுப்பார். இவ்விதமாக எத்தனையோ தடவை நான் பாரதியாருடன் காலைச் சிற்றுண்டி சாப்பிட்டிருக்கிறேன்.

காலை உணவுக்குப் பின், வெற்றிலை போட்டுக் கொள்வார். எழுதும் வேலை இருக்கும் போது அதிலே ஒருமையுள்ளத்துடன் ஈடுபடுவார். அந்த வேலை இல்லாத தினங்களும் உண்டு. அப்போது தங்கம்மாள், சகுந்தலை அம்மாள் என்ற இரண்டு அருமைப் புதல்வியருடனும் உத்ஸாகமாகப் பாடிய வண்ணம் பொழுது போக்குவார். இவர் சொற்படியே அப்புதல்வியார் பாடுவதில் குதூகலமாக ஈடுபடுவார்கள் மூவரில் ஒருவரும் சலித்துப் போவது கிடையாது.

முதல் முதல் பாரதியார் புதுவை ஈசுவரன் கோவில் தெருவில் திரு.மு.இராஜாபாதரின் இல்லத்திற்கு அடுத்த ஒரு சிறு வீட்டில் குடியிருந்தார். பிறகு அவ்வீட்டைக் காலி செய்து, அதே வீதியில் 28-ம் எண்ணுள்ள ஒரு மாடி வீட்டில் குடியேறினார். அது ஒரு செட்டியாருக்குச் சொந்தம். அவர் பெயர் ஐயாக்கண்ணுச் செட்டியார் அவர் குள்ளமாக இருப்பார். தயாள குணம் உள்ளவர்.

அவர் பாரதியாரிடம் குடிக்கூலி கேட்பதே விநோதமாக இருக்கும். சந்தடி செய்யாமல் அடி மேல் அடிவைத்து வருவார்.

வீட்டுக்குள்ளே வந்து பாரதியாரை உற்று நோக்குவார். வாய் திறந்து வாடகை கேட்கமாட்டார். மௌனமான அந்தச் சைகையை அறிந்துகொண்டே பாரதியார் பணம் கொடுத்துவிடுவார் - ஆம், பணம் கையில் இருந்தால்! ஆனால், இப்படி அடிக்கடி நிகழ்வதில்லை. பணம் இல்லாவிட்டால், பாரதியார் செட்டியாரைப் பார்த்து, 'செட்டியாரே! இன்னும் வந்து சேர்ந்தபாடில்லை. ஒருவாரம் கழித்து வாருங்கள்!' என்று சொல்வார். பாரதியாரின் இல்வாழ்க்கைதான் செட்டியாருக்குத் தெரியுமே, குடிக்கூலிக்காக மன்றாடாமல் மெள்ள நழுவிவிடுவார். இவரைப் பாரதியார் வேடிக்கையாக 'விளக்கெண்ணெய்ச் செட்டியார்' என்று அழைப்பதுண்டு. இந்த வினோதப் பெயரால் ஐயாக்கண்ணுச் செட்டியாரும் இலக்கியப் பிரசித்தி பெற்றுவிட்டார்!

புதுவையில் பாரதியார் பட்ட கஷ்டங்களே ஒரு பாரதமாகும். கட்டுரை, கவிதை எழுத வேண்டியிருக்கும்: வெள்ளைக் காகிதம் இராது, கையில் காசும் இராது அப்படித் தவிக்கும் சமயங்களில் பழைய 'ஹிந்து', 'சுதேசமித்திரன்' பத்திரிகைகள் உதவி செய்யும்! அவற்றைக் கட்டாகக் கட்டிக் கொடுத்து, அதை மளிகைக் கடையில் விற்று வெள்ளைக் காகிதம், 'ரிலீப் நிப்' முதலயவைகளை வாங்கிவரச் சொல்வார். வந்ததும், வழக்கம்போல எழுத்து வேலை நடக்கும்.

இத்தகைய வறுமைத் துன்பம் பாரதியாரை விட்டு அகலவேயில்லை, இவர் புதுவையை விட்டுப் போகும்வரையில். வறுமையை நோக்கி ஒரு தமிழ்ப் புலவர், 'நீங்கா நிழல் போல நீ என்னை விட்டு நீங்குவதேயில்லை!' என்று பாடியிருக்கிறாரல்லவா? அதுபோலத்தான் பாரதியாரின் நிலையும் ஆனால், வறுமைப்பட்ட மற்றப் புலவர்களின் மனநிலைக்கும் பாரதியாரின் மனநிலைக்கும் மிகுந்த வித்தியாசம் உண்டு. பாரதியாருக்குப் பராசக்திமீது பக்தி அதிகம். இதனால் இவர் மகிழ்ச்சியுடனேயே இருந்தார். இவரது மனைவியார் ஸ்ரீமதி செல்லம்மாளும் வறுமை கருதி வெறுப்புற்று இருந்ததில்லை. பணக்கவலையால் என் குருநாதராவது, அம்மையாராவது வெறுப்புற்றிருந்ததை நான் சிறிதும் கண்டதில்லை.

பாரதியாருக்குத் தேசபக்தியும் தெய்வபக்தியும் ஒன்றே. பராசக்தியே பாரதமாதாவாகவும் காட்சியளித்தாள். ஆகவே தேசக்

கவலையிலும் உலகக் கவலையிலும் மூழ்கித் தாம் கவலையை மறந்திருக்கும்படி. பாரதியாருக்கு, உலக மாதாவாகவும் தேச மாதாவாகவும் விளங்கிய பராசக்தி கிருபைசெய்து பாலித்தாள் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. இத்தகைய பெரும் பக்திமானாகிய பாரதியார் எனக்குத் தேசபக்தராக மட்டும் தோன்றவில்லை. வெறும் பத்திரிகாசிரியராக மட்டும் தோன்றவில்லை, வாழ்க்கைக்கே வழி காட்டக்கூடிய ஒரு பெரியாராக - குருதேவராகக் காட்சியளித்தார்.

ஆனால், பாரதியாரின் பெருமையை அந்நாளில் புதுவை நகர் உணர்ந்துகொள்ளவில்லை. அக்காலத்தில் பத்திரிகைகளைப் புதுவைப் பொதுஜனங்களில் பலரும் வாசித்து வரவில்லை. அதிலும், தமிழ்ப் பத்திரிகை என்றால் வேப்பிலைக் கஷாயந்தான்! அதிலும், பாரதியாரின் 'இந்தியா' பத்திரிகை அரசியல் துறையிலும் சமூகத்துறையிலும் புரட்சிகரமான கொள்கைகளை வெளியிட்டு வந்ததால், அதையும் தீண்டாத இனத்தைச் சேர்ந்ததுபோல் செல்வரும் செல்வாக்குள்ளவர்களும் கருதிவிட்டனர்.

புதுவைத் தமிழர்கள் பாரதியாரைத் தங்களில் ஒருவர் என்றுகூட எண்ணியதில்லை. ஆனால், பாரதியாரையும், அவரைப்போல் புதுவைக்கு வந்திருந்தவர்களையும் 'சுதேசிகள்' என்பார்கள்! 'சுதேசிகள்' என்றால் 'நம்மவர்' என்ற பொருளில அல்ல; 'பிரிட்டிஷ் அரசாங்கத்தில் கலகமோ, குழப்பமோ செய்து ஓடி வந்தவர்கள்' என்ற ஒரு புதுமைப் பொருளையும் புதுவை வாசிகள் அளித்துவிட்டார்கள். அக்காலத்தில் பிரிட்டிஷ் இந்தியாவில் நடைபெற்ற அரசியல் கிளர்ச்சியைச் 'சுதேசிக் கலகம்' என்று பேசிக்கொண்டார்கள்.

பாரதியாரின் பெருமையை ஒருவாறு அறிந்தவர்களுக்கும், அவரோடு பழகவும் சம்பாஷிக்கவும் துணிவு கிடையாது. போலீஸ்-பயம் ஒரு பெருங்காரணம். பிரிட்டிஷ் இரகசிப் போலீஸ் (சி.ஐ.டி) காரர்களின் கண்காணிப்பில் இருந்தார்கள் பாரதியார் போன்ற தேசபக்தர்களும், அரவிந்த ஆசிரமவாசிகளும். இவர்களுடன் சம்பாஷித்தவர்களும், இவர்களுடைய விடுதிகளுக்குச் சென்றவர்களும்கூட, சி.ஐ.டிகளின் சர்வ வல்லமையுள்ள கூரிய கடாட்சத்திற்கு இலக்காயினர்! ஆகவே,

பாரதியாரின் தேசபக்தியைப் பாராட்டி இவரிடம் பக்தி விசுவாசம் கொண்டவர்களும், இவரைக் கண்டும் காணாமல் போய்விடுவார்கள். இந்நிலையிலும், இவரோடு நான் நெருங்கிப் பழகத் துணிந்ததற்குக் காரணம் பயம் அறியாத இளமையில் பதிந்துவிட்ட குருபக்திதான்.

இத்தகைய பக்தியினால்தான் இவருடைய நடை உடை பாவனைகளைக் கண்டும் நான் விகற்பமான உணர்ச்சி கொண்டதில்லை. மற்றவர்களுக்கோ, இவருடைய தோற்றமே வினோதமாகவோ, வெறுப்பாகவோ இருந்திருக்க வேண்டும். ஈசுவரன் தருமராஜா கோயில் வீதியில், திறந்த மேல்மாடியிலே, சூரியன் உச்சியிலிருக்கும்போது, உடலின் மேற்பாகத்தில் ஆடையில்லாமல், தலைமுடி அலைய, ஏதோ ஆவேசம் கொண்டவரைப் போல் இவர் காட்சியளிப்பதுண்டு. பார்த்தவர்கள், 'ஏதோ சக்தி பூஜை செய்கிறவர் என்பார்கள். பலருக்கு அத்தோற்றமும், ஆட்டமும் ஓட்டமும், குதிப்பும் கை நீட்டல்களும் வேடிக்கையாகவும் தோன்றும் எனக்கு மட்டும் குருபக்தி அதிகரித்து, இவரிடம் உபதேசம் பெறவேண்டும் என்ற ஆசையை விளைத்தது.

❖

# உ. பாரதியார் பிரசங்கம்

பாரதியார் வீட்டுக்கு அடிக்கடி போவதுடன், கடற்கரை ரஸ்தாவில் உலாவும்போதும் நான் இவரை அடிக்கடி சந்திப்பது வழக்கம். குருநாதரைக் கண்டதுமே, இரும்பைக் காந்தம் இழுப்பதுபோல இவருடைய பேரன்பு என்னை வசீகரித்தது. ஆனால், அந்த ஆரம்பகாலத்தில் இவருடைய தோற்றம் - அந்த முறுக்கிய மீசையும், மார்பை முன் தள்ளி நிற்கும் கம்பீர நிலையும், குதித்து நடக்கும் குதூகலமும், அன்பையும் கருணையையும் ஆழத்திலே கொண்டு ஜொலித்த வீரத் திருவிழிகளின் பார்வையும், என்னை அணுகவொட்டாமல் சிறிது தூரத்திலே கூசி நிற்கச் செய்துவிட்டன.

எனினும், 'எப்படியாவது இப்பெரியாருடன் வார்த்தையாட வேண்டும்; இவர் கருணைக்கு இலக்காக வேண்டும்' என்ற ஆசை என் சங்கோசத்துடன் போராடியது. ஒருவாறு நெஞ்சு துணிந்து நான் பழக விரும்பியபோது, இரகசியப் போலீஸாரின் பயமும் குறுக்கிட்டது. ஆகவே, நெடுநாள்வரை தூரதரிசனத்துடன் திருப்தி அடையவேண்டியதாயிற்று. கடைசியாக, ஆசை அச்சத்தையும் கூச்சத்தையும் ஜயித்துவிட்டது. 1912-ம் ஆண்டில் 'ப்ரொக்ரெஸிவ் யூனியன் கிரிக்கட் கிளப்' (Progressive Union Cricket Club) டீஎன்ற சங்கத்தின் ஆண்டுவிழா நடைபெறுவதற்கு ஒரு வாரத்திற்குமுன், அவ்விழாவில் நடைபெற வேண்டிய நிகழ்ச்சிகளைக் குறித்து ஆலோசிக்க ஒரு கூட்டம் கூடியது. உறுப்பினர் பலரும் பல்வேறு ஆலோசனைகளை வெளியிட்டார்கள். கடைசியாகப் பாரதியாரைக் கொண்டு விழாவில் ஒரு சொற்பொழிவு நடத்துவது நலம் என்று ஒரு தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இவ்விஷயமாகப் பாரதியாரைக் கண்டு பேச வேண்டுமென்று ஒரு தினத்தை உறுப்பினர் குறிப்பிட்டனர். அதற்கு இணங்க மேற்படி 'கிளப்'பின் நிர்வாகத் தலைவரான அடைக்கலநாதன் அர்லோக், ஜேம்ஸ் ஸாமுவேல், அந்துவேன் அர்லோப் ஆகிய மூவரும் நானும் பாரதியார் வீட்டை நோக்கிச் சென்றோம். எங்களில் ஜேம்ஸ் ஸாமுவேல் பின்னாளில் பாரதியார் பாடும்போது பிடில் வாசிக்கலானார்: அவ்வளவு பழக்கம் நாளடைவில் ஏற்பட்டது. அந்துவேன் அர்லோக் பாரதியாரின் பிரெஞ்சு வாத்தியாராகி, பிரெஞ்சு சுதந்திர கீதத்தில் பாரதியாருக்குப் பெரு விருப்பம் ஏற்படக் காரணமானார்.

வீட்டின் கதவு உட்புறம் தாழிட்டிருந்தது. மெள்ளக் கதவைத் தட்டினேன். உடனே, 'யார்?' என்று ஓர் உரத்த சப்தம் உள்ளிருந்து கம்பீரமாகக் கேட்டது.

எங்களுக்கு ஒன்றும் பதில் சொல்லத் தோன்றவில்லை. சற்று நேரம் தயங்கி நின்றோம். மறுபடியும் நான் தட்டினேன். 'யார் அங்கே?' என்று மறுபடியும் ஒரு சப்தத்துடன் கதவு படீரென்று திறந்தது. நெற்றியில் குங்குமப் பொட்டும் முறுக்கிய மீசையுமாகப் பாரதியார் வெளியிட்டார். நாங்கள் கைகூப்பி வணங்கியதும், அவர் பதில் நமஸ்காரம் செய்து, 'எங்கே வந்தீர்கள்?' என்று கேட்டார்.

நாங்கள் கொஞ்சம் சாவகாசமாகப் பேசி, வந்த காரியத்தைத் தெரிவிக்க விரும்பினோம். எனவே நான், 'ஒரு காரணத்தை முன்னிட்டுத் தங்கள் உதவியை நாடி இங்கு வந்திருக்கிறோம்' என்றேன். அவரும், 'அப்படியானால் உள்ளே வாருங்கள்' என்றார். நாங்கள் தொடர்ந்து சென்றதும், ஒரு சிறு அறையைக் காட்டி, 'இங்கே உட்கார்ந்திருங்கள், இதோ வந்துவிடுகிறேன்' என்று சொல்லிவிட்டு, உள்ளே போனார். அந்தச் சிறு அறையின் நிலைமையைத்தான் பாரதியார் தமது குயில்-பாட்டின் இறுதியில் உள்ளது உள்ளபடியே படம் பிடித்துக் காட்டுகிறார்:

சூழ்ந்திருக்கும் பண்டைச்
சுவடி, எழுதுகோல்,
பத்திரிகைக் கூட்டம்,
பழம்பாய்-வரிசையெல்லாம்

ஒத்திருக்க 'நாம் வீட்டில்
உள்ளோம்!' என உணர்ந்தேன்.

எங்கே பார்த்தாலும் துண்டுக் காகிதங்களும், அன்று வந்த 'ஹிந்து', 'சுதேசமித்திரன்' பத்திரிகைகளும் குழப்பமான கூட்டமாய்க் கிடந்தன. ஒரு மூலையில், குயில்-பாட்டில் வர்ணிக்கப்படாத கறுப்புச் சட்டையும், பெஞ்சியின் மேல் ஒரு வீணையும் இருந்தன.

நாங்கள் தரையில் உட்கார்ந்தபடியே மௌனமாக ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தோம். சற்று நேரத்தில் வாய் நிறைய வெற்றிலை போட்டுக்கொண்டு பாரதியார் வந்து எங்கள் முன் உட்கார்ந்தார். உட்கார்ந்து தலையைக் கம்பீரமாக நிமிர்த்தி, 'எங்கே வந்தீர்கள்?' என்று முன் கேட்ட வினாவையே-அந்தக் கம்பீரமான தோரணையில் அல்ல-இப்போது வினயமாக வினவினார். நாங்கள், 'எங்கள் "கிளப்"பின் ஆண்டுவிழாக் கொண்டாட்டம் ஒரு வாரத்தில் கொண்டாடப் போகிறோம். அன்று தாங்கள் கருணை கூர்ந்து ஒரு சொற்பொழிவு நிகழ்த்த இணங்க வேண்டும்!' என்று வேண்டிக் கொண்டோம்.

'நல்லது, எதைப்பற்றி உபந்யாஸம் செய்யவேண்டும்?' என்று அன்பு தோய்ந்த குரலில் கேட்டார். நான் பளிச்சென்று, 'சாதி வேற்றுமையைக் குறித்துத் தாங்கள் பேசுவதை நாங்கள் கேட்க விரும்புகிறோம்' என்றேன். பாரதியார் இளநகை அரும்பிய வண்ணம் எங்களை நோக்கி, 'நல்லது, நல்லது! என எண்ணம் போலவே இருக்கிறது உங்கள் விருப்பமும்!' என்றார். மிக்க மகிழ்ச்சியுடன் எங்கள் 'கிளப்'பில் வந்து பேச ஒப்புக்கொண்டார். பாரதியாரையும், ஈசுவரன் கோவில் வீதியில் அவர் வசித்துவந்த வீட்டையும் எண்ணி, 'இந்தச் சிறு வீட்டுக்குள்ளே எவ்வளவு பெரிய ஆத்மா குடியிருக்கிறது!' என்று நாங்கள் அதிசயித்தோம். பெரு மகிழ்ச்சியுடன் விடைபெற்றுக் கொண்டு திரும்பினோம்.

மறு நாள் ஆண்டுவிழா அழைப்புப் பத்திரிகை அச்சிட்டு அன்பர்களுக்கு மட்டும் வினியோகித்தோம். அப்பத்திரிகையில், மாலை ஐந்து மணிக்குப் பாரதியார் 'சாதி வித்தியாசம்' என்னும் பொருள் குறித்துச் சொற்பொழிவாற்றுவார் என்று தெளிவாகக்

குறிப்பிட்டிருந்தோம். ஏதோ அரசியல்-பிரசங்கம் செய்வார் பாரதியார் என்று யாரும் நினைக்கக் கூடாது என்று முன்ஜாக்கிரதையாகவே நடந்து கொண்டோம்.

ஊரெங்கும் செய்தி பரவிவிட்டதால், புதுவை ஷார்த்தர் வீதியில் 15-வது எண்ணுள்ள வீட்டில்-அதாவது, ஆண்டு விழாப் பிரசங்கம் நடைபெறும் என்று குறித்திருந்த இடத்தில்-ஐந்து மணிக்கு முன்பே பெருங் கூட்டம் கூடிவிட்டது. அந்த ஷார்த்தர் வீதி இப்போது பிரான்சுவா மார்ட்டின் வீதி என்று பெயர் மாறியிருக்கிறது. அந்தக் கூட்டம் நடந்த வீடு இன்று அரவிந்த ஆசிரமத்திற்குச் சொந்தமாயிருக்கிறது.

அக்கூட்டத்தில் பல்வேறு வகுப்பினரும் காணப்பட்டனர். நான் வாசலில் நின்றுகொண்டு, ஜாக்கிரதையாக, அழைப்புப் பத்திரம் வைத்திருந்த ஆளைப் பார்த்துப் பார்த்து உள்ளே அனுமதித்துக் கொண்டிருந்தேன். சி.ஐ.டி பயத்தினால் அப்படிச் செய்யலானேன்.

இப்படி வடிகட்டி அனுப்பிக்கொண்டிருந்தும் உள்ளே கூட்டம் பெருகிவிட்டது. 'சுதேசி வீரர் பேசப்போகிறார், கேட்கலாம்!' என்ற ஆசைதான் அதற்குக் காரணம். நான் ஒவ்வொருவராக வந்தவர்களைப் பார்த்து உள்ளே அனுப்பிக் கொண்டிருக்கையில், ஒருவர் என் எதிரே ரஸ்தா நடுவில் நின்றுகொண்டிருந்தார். அவர் தம் கையில் வைத்திருந்த குடையை ஊன்றிய வண்ணம் நின்றுகொண்டிருந்தார். பிறகு மெள்ள என் அருகில் வந்து, 'ஸார்!' என்றார்.

நல்ல சிவப்பு நிறம், சுமார் ஆறடி உயரம், கிராப்புத் தலை, நெற்றியில் நாமம், மேலே கறுப்புச் செக்குக் கோட்டு, இடுப்பில் கரைபோட்ட வேட்டி-அந்த ஆசாமியை நோக்கி நான் 'தங்களுக்கு என்ன வேணும், ஸார்!' என்று கேட்டேன். அதற்கு அவர், 'ஒன்றுமில்லை, ஸார்! நான், பாரதியாருடன் திருநெல்வேலியில் சேர்ந்து வாசித்த பள்ளித்தோழன்!' என்று பதில் சொன்னார். 'பாரதியார் உபந்யாஸம் செய்யப் போவதாகக் கேள்விப்பட்டுத்தான் ஓடோடியும் வந்தேன், என்றும் தெரிவித்தார். தம்மிடம் அழைப்புப்

பத்திரிகை இல்லையென்று சொல்லிவிட்டு, பாரதியாரின் பழைய நண்பர் என்ற முறையில் தயவுசெய்து தம்மை அனுமதிக்க வேண்டும் என்று வினயமாகக் கேட்டுக்கொண்டார். நான் சம்மதித்து, அவரை உள்ளே அழைத்துப்போய் ஒரு நாற்காலியில் உட்கார வைத்தேன்.

இதற்குள் மணி ஐந்தும் ஆகி அதற்கு மேலும் ஆகிவிட்டது. பாரதியார் இன்னும் வந்து சேரவில்லை. சபையோ பாரதியார் பிரசங்கத்தைக் கேட்கவேண்டுமென்று பேராவலுடன் காத்திருந்தது. விழா நடக்கும் அந்த இடத்திற்குப் பாரதியார் வீடு அதிக தூரத்தில் இல்லை. ஆகவே ஓடிப்போய் அழைத்து வரலாம் என்று வீட்டை நாடி விரைந்தேன்.

பாரதியார் சில நண்பர்களுடன் எதிரே வந்து கொண்டிருந்தார். அந்த நண்பர்களில் அறிஞர் வ.வே. சு ஐயரும் ஒருவர். நான் ஒரே ஓட்டமாக ஓடிப்போனேன். என்னைக் கண்டதும் பாரதியார், 'எங்கே ஓடி வருகிறாய்?, என்று கேட்டார். மூச்சுத் திணற ஓடிச் சென்ற நான், சிறிது அமைதியுற்ற பின், 'தங்கள் வரவை எதிர்நோக்கி ஜனங்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். மேலும், தங்களுடன் திருநெல்வேலியில் வாசித்து வந்த பழைய நண்பர் ஒருவரும் வந்து காத்திருக்கிறார்' என்றேன்.

அதற்குப் பாரதியார், 'என் பள்ளிக்கூட நண்பனா? அப்படியா சொன்னான்? அவன் எப்படி இருக்கிறான், அடையாளம் சொல்லு!' என்று கேட்டார். நான் ஆசாமியை வருணிக்கத் தொடங்கியதும், பாரதியார் முகம் உத்ஸாகத்தை இழந்தது. 'சுமார் ஆறடி' என்று அந்த உயர் திருவாளரை வருணித்து முடித்ததும், 'நீ மோசம் போய்விட்டாய்!' என்றார். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. 'கறுப்புச் செக்கு கோட்டு, ஆள் நல்ல சிவப்பு' என்றதும், பாரதியார், 'பழைய கறுப்பன்தான்! என் நண்பன் அல்ல, இரகசியப் போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டராக இருக்கவேணும்! என்று சொல்லிவிட்டு, 'அவன் இருந்தால் இருக்கட்டும், நம்முடைய காரியத்தை நாம் பார்க்கலாம், வா!' என்று அவசரமாக நடந்தார். நாங்கள் விழா நடைபெறும் வீட்டுக்குள் நுழைந்தோம்.

பாரதியாரைக் கண்ட ஜனங்கள் வந்தேமாதர கோஷம் செய்து கைதட்டி வரவேற்றார்கள். அக்கூட்டத்திற்குத் தலைமை வகித்தவர்

காலஞ்சென்ற திரு.பு.சி.நாராயணசாமி உபாத்தியாயர்; ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர். பாரதியார் ஜாதி பேதத்தின் தோற்றம், வளர்ச்சி, ஜாதி வித்தியாசத்தில் விளைவான கேடுகள், கொடுமைகள் முதலியவற்றையெல்லாம் சங்கோபாங்கமாக எளிய நடையில் எல்லோர் மனத்திலும் ஆழ்ந்து பதியும்படி பேசி முடித்தார்.

இந்த உபந்யாஸத்தைச் சுருக்கெழுத்துக்காரர் யாராவது உள்ளபடி எழுதிவைத்திருந்தால், அது இந்நாளிலும் இன்றைய தமிழருக்குப் பாரதி-இலக்கியத்தின் ஒரு பகுதியாக உதவியிருக்கும்.

❖

# 3. பிரசங்கத்திற்குப் பரிசு

எங்கள் 'கிளப்'பின் ஆண்டுவிழா வைபவம் இனிது நிறைவேறிய ஒரு வாரத்திற்குப் பின், ஒருநாள், 'பாரதியாரைப் பார்த்து வருவோம்' என்று என் வீட்டிலிருந்து புறப்பட்டேன் காலை சுமார் 9-மணி இருக்கும். போலீஸ் சேவகன் ஒருவன் எனக்கு ஒரு 'ஸம்மன்ஸ்' (Summons) இருப்பதாகச் சொல்லி என்னிடம் கொடுத்தான். 'இப்படி இன்னும் மூன்று பேருக்கு உண்டு' என்றும் சொன்னான்.

'கிளப்'பின் தலைவரான அடைக்கலநாதன் அர்லோக் என்பவருக்கும், ஜேம்ஸ் ஸாமுவேலுக்கும், திருவேங்கடம் வெர்னியே என்பவருக்கும் 'ஸம்மன்ஸ்' உண்டு என்று அறிந்தேன். திருவேங்கடம் வெர்னியே இந்தோ-சைனாவுக்குப் போய்விட்டதால், எனக்கு 'ஸம்மன்ஸ்' கொடுத்துவிட்டு, மேற்கூறிய இருவரையும் தேடிப் போவதாகச் சொல்லிப் போய்விட்டான் சேவகன்.

எனக்கு வந்த 'ஸம்மன்'ஸைப் பார்த்தேன் அதில், 1912-ம் சஷ (மாதம், தேதி, கிழமை இப்போது ஞாபகம் இல்லை) சர்க்கார் அனுமதியில்லாமல் புதுவை ஷார்த்தர் வீதியில் 15-வது எண்ணுள்ள இல்லத்தில் சி.சுப்பிரமணிய பாரதியாரைக் கொண்டு ஒரு பெரும் பொதுக் கூட்டம் கூட்டியது சட்ட விரோதமாய் இருப்பதால், நான் புதுவைக் கப்பிஸேன் வீதியிலுள்ள போலீஸ் கோர்ட்டில் காலை எட்டு மணிக்கு ஆஜராக வேண்டுமென்று கண்டிருந்தது. இது குறித்துப் பாரதியாரைக் கலந்துகொள்ளலாம் என்று நேரே சென்றேன். பாரதியார் தம் கறுப்புக் கோட்டையும் தலையில் கட்டியிருந்த பெங்களூர்ப் பட்டுக் குட்டையையும் எடுத்து ஒரு மூலையில் வீசியெறிந்துவிட்டு, 'என்ன செய்தி?' என்று கேட்டார். நான் என் கையிலிருந்த 'ஸம்மன்' ஸை நீட்டினேன்.

பாரதியார் ஒரு தடவைக்கு இரு தடவையாக அதை வாசித்துப் பார்த்தார். 'இதுபோல் இன்னும் யார் யாருக்கு வந்திருக்கிறது?' என்று கேட்டார். 'கிளப்' புத் தலைவருக்கும், ஜேம்ஸ் ஸாமுவேலுக்கும், கூட்டம் நடத்த இடம் தந்த திருவேங்கடம் வெர்னியே என்பவருக்கும் வந்திருப்பதைத் தெரிவித்தேன்.

பிறகு பாரதியார் என்னை நோக்கி, 'வழக்கு நடக்கும் போது, "சுப்பிரமணிய பாரதியார் எதைக் குறித்துச் சொற்பொழிவு செய்தார்?" என்று கேட்டால், இந்தக் குறிப்பை மாஜிஸ்டிரேட் முன்பு சமர்ப்பித்துவிடலாம்' என்று சொல்லி, ஒரு துண்டுக் காகிதத்தில் தாம் உபத்யஸித்த முக்கிய அம்சங்களை எழுதிக் கொடுத்தார்.

'ஸம்மன்' ஸில் குறிப்பிட்டிருந்த எட்டு மணிக்கு முன்பே நானும், 'கிளப்' புத் தலைவரும், ஜேம்ஸ் ஸாமுவேலும் போலீஸ் கோர்ட்டில் ஆஜராய் இருந்தோம். சுமார் எட்டரை மணிக்கு, **கொமிஸேர் அப்பாஸாமி** எங்கள் வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டார். பாரதியார் என்ன பேசினார் என்ற கேள்வியே கிடையாது. '21 நபர்களுக்கு மேற்பட்ட கூட்டத்தைக் கூட்டினீர்களா? அப்படிக் கூட்டுவதாயிருந்தால் சர்க்காரிடம் முன்கூட்டியே உத்தரவு பெறவேண்டும் என்று உங்களுக்குத் தெரியாதா?' என்ற கேள்விகளே கொமிஸேர் வாயிலிருந்து புறப்பட்டன. அதற்கு நாங்கள், 'கூட்டம் கூட்டியது உண்மைதான்; ஆனால் அதற்குச் சர்க்கார் உத்தரவு பெறவேண்டும் என்பது தெரியாது' என்று பதில் சொன்னோம்.

'அப்படிச் சட்டம் இருப்பது தெரியாதா?' என்று அதட்டினார் கொமிஸேர். 'உண்மையாகவே இளைஞர்களாகிய எங்களுக்கு அப்படி ஒரு சட்டம் இருப்பது அந்த நாளில் தெரியாது. தெரிந்திருந்தால் நாங்கள் முன் கூட்டி உத்தரவு பெற்றிருப்போம். அனுபவமில்லாத சிறுவர்கள் செய்த தவறு இது. முதல் தடவைதான். ஆகவே, கோர்ட்டார் தயவு செய்து மன்னிக்க வேண்டும்' என்று பணிவுடன் வேண்டிக் கொண்டோம்.

இத் தாழ்மையான வேண்டுகோளைக் கோர்ட்டார் காதில் போட்டுக் கொள்ளவேயில்லை. 'நீங்கள் கூட்டம் கூட்டுவதற்காக அழைப்புப் பத்திரங்கள் வெளியிட்டது உண்மைதானே?' என்று

கர்ஜித்தார். கடைசியாக அவர், தெரியாமல் செய்த பிழையை ஒப்புக்கொண்டதற்காகத் தலைக்கு ஐந்து பிராங்கு அபராதம் விதித்தார். ஆஜராகாத திருவேங்கடம் வெர்ஸியே என்பவருக்குக் கூட்டத்திற்கு இடம் கொடுத்த குற்றத்திற்காக இருபது பிராங்கு அபராதம் விதிக்கப்பட்டது.

நாங்கள் கோர்ட்டை விட்டு வெளியே வரும்போது, எங்கள் 'கிளப்'பின் ஆண்டுவிழா அன்று பாரதியாரின் பழைய நண்பனாக நடித்த பிரிட்டிஷ் சி.ஐ.டி.ஸப்-இன்ஸ்பெக்டரைக் கோர்ட்டு வாசற்படிக்கு அருகிலேயே கண்டோம். எங்களைக் கண்டதும் அந்த ஆசாமி வேறொரு பக்கமாக முகத்தைத் திருப்பிக்கொண்டு யாரையோ எதிர்நோக்கி நிற்பவன் போல் வேறொரு நாடகம் நடித்துக் காட்டினான். நாங்கள் அவனையும் அந்த நாடகத்தையும் கவனியாதவர்கள்போல், பாரதியார் வீட்டை நோக்கி நேரே போய்விட்டோம்.

எங்களை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த பாரதியார், எங்களைக் கண்ணுற்றதும், 'கேஸ் என்ன ஆச்சு?' என்று கேட்டார். அபராதம் கிடைத்தது என்றும் தெரிவித்ததும், அவர், 'பரிசு கிடைத்தது சரிதான்! மாஜிஸ்டிரேட் இந்த வெகுமதியை அளிப்பதற்கு என்ன தகுதியை உங்களிடம் கண்டு கொண்டாரோ?' என்று வேடிக்கையாகக் கேட்டார். 'திருவேங்கடம் வெர்ஸியே சர்க்கார் உத்தியோகஸ்தராக இருந்தும், அபாரமான வெகுமதி பெற்றிருக்கிறாரே!' என்றும் பாரதியார் சிரித்துக்கொண்டே கேட்டார். நாங்களும் நகைத்துக்கொண்டே, 'சட்டம் தெரிந்த சர்க்கார் உத்தியோகஸ்தராக இருந்தும், திருவேங்கடம் வெர்ஸியே கூட்டம் நடத்த இடம் தந்தாரே, அந்தத் தீரத்திற்காகத்தான் இந்தப் பெரும் பரிசு' என்றோம்.

பிறகு பாரதியார் நகைப்பையும் வேடிக்கைப் பேச்சையும் விட்டுக் கவலையுடன், 'ஓகோ, சிறுவர்களாகிய நீங்கள் அபராதத் தொகையைக் கட்ட வேணுமே! எப்படிக் கட்டப் போகறீர்களோ?' என்று கேட்டார். அந்த முகவாட்டத்தையும் இரக்கம் தோய்ந்த குரலையும், இன்றும் நான் நினைப்பூட்டிக் கொள்வதுண்டு.

'சுவாமி! இதற்காகத் தாங்கள் கவலைப்பட வேண்டாம். எப்படியாவது அபராதம் செலுத்தி விடுவோம்!' என்று

இருந்திருக்குமே; சட்டம் போட்டுக் கண்ணாடியிட்டு வைத்துப் பார்த்துக்கொள்ள வேண்டிய தஸ்தாவேஜல்லவா அது!

பாரதியாரின் சாதிவித்தியாசப் பிரசங்கத்தையும் அபராதம் கொடுத்த பின்விளைவையும் இன்று நினைத்துப் பார்க்கும்போது, 'ஏதோ ஒரு துளியாவது பாரதியாரின் துயரத்தில் கலந்து கொள்ளும் பாக்கியம் கிடைத்ததே என்றுதான் தோன்றுகிறது.

'இளங்கன்று பயமறியாது' என்ற தோரணையில்தான் நாங்கள் நடந்துகொண்டோம். ஆனால் அந்த நிகழ்ச்சி பாரதியாருக்கு என்மீது பின்னால் ஏற்பட்ட பேரபிமானத்திற்கு வித்தாகிவிட்டது. அந்த நிகழ்ச்சியின் பயனாய்க் கவிஞர் எனக்குக் குருநாதராக என் உள்ளத்தில் இடம் பெறலானார்; நானும் ஒரு பிரிய சிஷ்யனாக அவர் உள்ளத்தில் பதவிபெறும் பாக்கியம் பெற்றேன்.

நாங்கள் வேண்டிக்கொண்டவுடனே பிரசங்கிக்கச் சம்மதித்துவிட்ட அந்தப் பெருந்தன்மையும், 'சி.ஐ.டி ஸப்-இன்ஸ்பெக்டர் நண்பர் என்று நாடகம் ஆடி உள்ளே நுழைந்து விட்டார், ஏதாவது கெடுதி செய்யப்போகிறார்' என்று தெரிந்தும் அலட்சியமாக உபந்யாஸத்தில் ஈடுபட்ட தீரமும், எங்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டதே என்ற கவலையைத் தமது பணக் கவலைகளுக்குள்ளும் மேலாகக்கொண்டு இரங்கிய சீலமும், நான் உள்ளக்கோயிலிலே எழுதிவைத்திருக்கும் பாரதி-சித்திரத்திற்கு ஓர் அபூர்வ அழகும் ஒளியும் தந்திருக்கின்றன.

# 5. உப்பளம் தேசமுத்துமாரி

புதுவைத் தேசமுத்துமாரி அம்மன் கோவிலின் பூசாரியான ஸி.நாகலிங்கம் என்ற வள்ளுவப் பண்டாரத்தை நான் பாரதியாருக்கு அறிமுகப்படுத்தி வைத்தபின், அவருக்கும் பாரதியாருக்கும் பழக்கம் அதிகரித்தது. 'தேசமுத்துமாரி அம்மன் சந்நிதியில் அர்ச்சகனாக இருந்து வருகிறேன். திருவள்ளுவ நாயனார் வம்சத்தைச் சேர்ந்தவன்' என்று நாகலிங்கம் தைரியமாகச் சொன்னதும், பாரதியாருக்குப் பெருமகிழ்ச்சி தோன்றிவிட்டது. 'தேசமுத்துமாரி' என்ற பேரைக் கேட்டதுமே கவிஞருக்கு ஆனந்தம் பொங்கியது என்பது அந்த முகச் சாயலிலேயே தெரிந்துவிட்டது.

'சைவனா? அசைவனா?' என்று பாரதியார் கேட்டதற்குப் பண்டாரம், 'சைவன்தான்' என்று பதில் சொன்னது பாரதியாரின் குதூகலத்தை அதிகரிக்கச்செய்தது. கறுப்பு மேற்சட்டையை மாட்டிக்கொண்டு, தலையில் பஞ்சாபிக் கட்டுக் கட்டிக்கொண்டு, தமது 'ஞாயிற்றுகிழமைச் சிட'ரான பண்டாரத்தின் கையைக் கெட்டியாகப் பிடித்த வண்ணம், பாரதியார் கடற்கரைக்குப் போவார். அங்கே டூப்ளே (Duplex) என்ற பிரெஞ்சு வீரனின் உருவச்சிலைக்கு அருகில் 'பியாண்டு' வாத்தியம் வாசிக்கும் சிப்பாய்களை உற்று நோக்கிப் பண்டாரத்தையும் நோக்கி, 'எவ்வளவு ஆவலுடன் வாசிக்கிறார்கள் பார்த்தாயா?' என்று கேட்பாராம். பிறகு வாராவதிமீது அழைத்துக் கொண்டுபோய், அங்கே போட்டிருந்த பெஞ்சியில் பண்டாரத்தை அமரச்செய்து, பாரதியார் உலாவிய வண்ணம் காற்றுவாங்கிப் பொழுதுபோக்குவாராம்.

ஈசுவரன் தருமராஜா கோவில் தெருவில், வெளிப்புறத்திலே இரும்புக் கிராதி போட்ட அந்த மாடி வீட்டில், பாரதியார் வள்ளுவப் பண்டாரத்திற்குப் பராசக்தியின் கதைகளைச் சொல்லி, ஓம் சக்தி, ஓம் சக்தி, ஓம் சக்தி! என்று திரும்பத் திரும்ப உச்சரிக்கச் சொல்வார்.

இப்படித் தமது அருமைப் பிள்ளை போலவும், பிரிய சீடனாகவும் பண்டாரத்தை நடத்தி வந்த பாரதியார். அவருக்குப் பூணூலும் போட்டதுடன். தாம் அருகே உட்கார்ந்து சாப்பிடுவதும் உண்டு.

வழக்கம் போல் ஒரு ஞாயிற்றுக்கிழமை வள்ளுவப் பண்டாரம் பாரதியாரிடம் போயிருந்தபோது. 'இதோ நமது ஞாயிற்றுக்கிழமைச் சீடன் வந்து விட்டான். ஹார்மோனியப் பெட்டியைக் கொண்டு வா!' என்றார் பாரதியார். பண்டாரத்திற்கு ஒன்றும் விளங்கவில்லை. புதல்வியார் ஸ்ரீமதி தங்கம்மாள் ஹார்மோனியப் பெட்டியைக் கொண்டுவந்து வைத்துத் தந்தையார் அருகில் உட்கார்ந்து கொண்டார். பிறகு பாரதியார் நாகலிங்கப் பண்டாரத்தை நோக்கி, 'உன் அம்மன் மீது பாட்டு ஒன்று பாடியிருக்கிறேன். நீ என்ன பரிசு கொடுப்பாய்' என்று கேட்டார்.

பண்டாரம் பதில் சொல்லாமல் தலை குனிந்திருந்தார். அப்போது பாரதியாரும் ஸ்ரீமதி தங்கம்மாளும்,

தேடிஉனைச் சரணடைந்தேன்,
தேசமுத்து மாரி!
கேடதனை நீக்கிடுவாய்,
கேட்டவரம் தருவாய்!

என்று தொடங்கும் பாட்டை வெகு இனிமையாகப் பாடினார்கள். பண்டாரம் மெய்மறந்து கேட்டுக் கொண்டிருந்தார்.

பாடியுனைச் சரணடைந்தேன்,
பாசமெல்லாம் களைவாய்,

கோடிநலம் செய்திடுவாய்
குறைகளெல்லாம் தீர்ப்பாய்!

என்று தொடர்ந்து பாடி,

நம்பினார் கெடுவதில்லை,
நான்குமறைத் தீர்ப்பு:
அம்பிகையைச் சரண்புகுந்தால்,
அதிகவரம் பெறலாம்!

என்று பாட்டை முடித்துப் பரவசமாயினர். பாட்டும் பண்ணும் பாரதியார் குதூகலமும் நாகலிங்கப் பண்டாரத்தையும் பரவசமாக்கி விட்டன.

பாரதியார் 'தேசமுத்துமாரி' பாடலைப் பாடிக் காண்பித்த பின் அதைப் பண்டாரத்திற்கு எழுதிக் கொடுத்துப் பாராயணம் செய்யச் சொன்னார். அப்படியே பண்டாரமும் பாராயணம் செய்து சாந்தி பெறுவதுண்டு.

எப்பொழுதும் கவலையிலே
இணங்கி நிற்பான் பாவி,

ஒப்பிஉன தேவல் செய்வேன்,
உனதருளால் வாழ்வேன்!

என்று தேசமுத்துமாரியை நோக்கிப் பாரதியார் பாடியிருப்பது, சக்தி அருளால் அவர் சக்தியும் சாந்தியும் பெற்ற அனுபவம்தான். இதைப் பாடிப் பாராயணம் செய்யும் எங்களுக்கும் கவலை நீங்கி அம்மன் அருள் கிடைத்தது போலத் தோன்றும்.

பாரதியார் சில சமயங்களில் நாகலிங்கப் பண்டாரத்தைத் 'தேசமுத்துமாரி பாடலை நீ பாடு!' என்று, பண்ணோடு பாடச் செய்து தாம் கேட்டுக் கொண்டிருப்பதுமுண்டு.

சக்தியென்று நேரமெல்லாம்
தமிழ்க்கவிதை பாடி,
பக்தியுடன் போற்றி நின்றால்,
பயமனைத்தும் தீரும்!

என்றெல்லாம் பண்டாரம் பாடும்போது பாரதியார் குதூகலமாய்க் கேட்டு, குழந்தையின் மழலைச் சொல்லைக் கேட்டு இன்புறும் தந்தைபோல் மகிழ்வார். அந்தக் குதூகலம் பண்டாரத்தையும் தொத்திக்கொண்டு பயம் தீர்த்துப் பக்தியை விளைவிக்கும்.

ஒருநாள் பாரதியார் வீட்டில் மேளவாத்தியங்கள் முழங்கின. பூந்தோரணங்களால் வீடெல்லாம் அலங்கரிக்கப் பெற்றிருந்தது.

ஆடவரும் பெண்களும் கூடியிருந்தார்கள். சற்று நேரம் பாரதியார் சொற்பொழிவு ஆற்றியபின், தெய்வப் படங்களுக்குக் கற்பூரதீபம் காட்டினார். வந்த ஜனங்களுக்குக் கற்கண்டு, பழம், ஒரு தேங்காய்மூடி வழங்கினார். அப்போது அங்கே போய் அந்த வழிபாட்டில் கலந்துகொண்ட வள்ளுவப் பண்டாரம் அன்று இரவு பத்துமணிக்கு வீட்டுக்குத் திரும்பினார். அப்போதுதான் பண்டாரத்திற்குத் 'தேசமுத்துமாரி' பாடலில் உள்ள

> துன்பமே இயற்கையெனும்
> சொல்லைமறந் திடுவோம்;
> இன்பமே வேண்டிநிற்போம்;
> யாவும் அவன் தருவான்!

என்ற பகுதியின் பொருளும் பயனும் நன்றாக விளங்கின.

> 'தேசமுத்துமாரி' பாடலின் வாயிலாக,
> ஆதாரம் சக்தியென்றே
> அருமறைகள் கூறும்;
> யாதானும் தொழில்புரிவோம்,
> யாதும் அவன் தொழிலாம்!

என்ற உபதேசத்தைப் பெற்றுத் தொழிலின் மேன்மையை உணர்ந்து இன்புற்ற பண்டாரத்திற்கும், மற்ற ஹரிஜன இளைஞருக்கும் பாரதியார் புதுவையிலிருந்து பிரிந்து போனதும், அந்த தேசம் நமக்கு இல்லாமற் போய்விட்டதே! அந்த ஆதார சக்தியை இழந்து விட்டோமே! என்ற ஏக்கம் பிடித்தது.

ஆரம்பத்தில் பாரதியாரைப் பித்துப் பிடித்தவர் என்று கருதிய நாகலிங்கம், 'தேசமுத்துமாரி' பாட்டைப் பாடிப்பாடி அனுபவித்தபின், அத்தகைய பக்திப் பைத்தியத்தின் பெருமையை உணர்ந்துகொண்டார்.

பாரதியாரின் 'தோத்திரப் பாடல்கள்' புத்தகத்தில் தேசமுத்துமாரி காட்சியளிக்கிறாள். ஆனால் அப்பாட்டைப் பாரதியார் எந்தத் தேசமுத்துமாரி மீது பாடினாரோ என்பது புதுவையில் அவருடன் கூடிப்பழகிய சில நண்பர்களுக்கே நன்றாகத் தெரியும். இது தெரியாத பலரும் தேசத்திற்குப் பொதுவாக உள்ள ஒரு

மாரியம்மன் மீது கவிஞர் பாடியிருப்பதாகக் கருதுகிறார்கள். சிலர் புதுச்சேரியிலுள்ள வேறொரு மாரியம்மனைப் பாரதியார் இப்படிப் பாடியிருப்பதாகவும் கூறுகிறார்கள். ஆனால், ஜாதி பேதம் தாண்டவமாடும் கோயில்களைப் பாரதியார் பாடுவதேயில்லையே!

இப்பெரியார் புதுவையில் தஞ்சம் புகுந்திருந்த காலத்தில் அவ்வூரில் பல ஆலயங்களிலும்.. சிவாலயங்களோ, விஷ்ணு ஆலயங்களோ, அம்மன் ஆலயங்களோ, எவற்றிலும்-ஜாதிப்பேய் தலைவிரிகோலமாய்த் தாண்டவம் ஆடிக்கொண்டுதான் இருந்தது. 'அத்தகைய கோவில்களில் தெய்வம் இல்லை!' என்று என் குருநாதர் தைரியமாகச் சொல்லுவார். அந்தத் தெய்வங்கள் மீது ஒரு பாட்டுப்பாட அவருக்கு விருப்பம் கிடையாது. இது பகிரங்க ரகசியம். ஆகவே ஹரிஜன மக்களுக்குச் சொந்தமான தேசமுத்துமாரி அம்மனை-புதுவை உப்பளம் நடுப்பதியில் கோவில் கொண்டிருக்கும் அம்மனையே-மனம் உவந்து பாடியிருக்கிறார்.

பாரதியாரின் மனைவியார் ஸ்ரீமதி செல்லம்மாள் ஆதியில் வெளியிட்ட 'தேசிய கீதம்' என்ற புத்தகத்தின் முதற்பாகத்தில் இப்பாடல்கள் 'உப்பளம் தேசமுத்துமாரி' என்ற தலைப்பெயரின் அடியில் வெளியிடப்பட்டன. அதுதான் சரி: என்ன காரணத்தினாலோ அடுத்த பதிப்புக்களில் 'தேச முத்துமாரி' என்ற தலைப்பெயர் மட்டுமே காணப்படுகிறது.

பாரதியார் 'குமரன்' பத்திரிகையில் அந்நாளில் வெளியிட்டிருந்த ஒரு கட்டுரையில், 'என் வீட்டுக்கு ஒரு வள்ளுவப் பண்டாரம் வந்துபோவது வழக்கம். அவன் ஐயனார் பேரில் பாடல் பாடுவான். அவனுடைய அம்மன் பேரில் ஒரு பாடல் கட்டிக்கொடுத்தேன்' என்று 'உப்பளம் தேசமுத்துமாரி' பாடல் பாடிய அந்த நிகழ்ச்சியைத் தாமே குறிப்பிட்டிருக்கிறார்.

பாரதியாரின் நினைவுக்குறியாக உப்பளத்திலுள்ள அன்பர்கள் தேசமுத்துமாரி ஆலயத்திற்கு எதிரே இராப்பாடசாலை ஒன்று ஏற்படுத்தி ஹரிஜனப் பிள்ளைகளுக்கு கல்வி கற்பித்து வருகிறார்கள். புதுவை அரவிந்த ஆசிரமத்தில் இருந்து வரும் ஸ்ரீ. சுத்தானந்த பாரதியார் மேற்படி வாசக் சாலைக்குப் 'பாரதி நூலகம்' என்ற பெயரையும் சூட்டியிருக்கிறார்.

ஜாதி கர்வம் குடிகொண்ட பெரிய கோவில்களைப் பாடாமல் ஹரிஜனங்களின் தேசமுத்துமாரியைப் பாடிய போதிலும், இந்த அம்மனை உலக நாயகியாகிய மகாசக்தியாகவே பாடியுள்ளார் கவிஞர். 'உலகத்து நாயகியே!' என்று தொடங்கும் முத்துமாரி பாட்டிலே தேசமுத்துமாரி பாட்டிலுள்ள கருத்துக்கள் மேலும் விளக்கம் பெறுகின்றன. வேறு 'சக்தி'ப் பாடல்களிலும் இதே பக்தியும் சிரத்தையும் புதிய புதிய கவியுருவம் பெறுகின்றன.

புதுவையில் ஹரிஜன தெய்வமாகிய தேச முத்துமாரி தேசப்பிரசித்தி பெற்றுவிட்டாள். இந்தப் பாட்டிலுள்ள,

> நம்பினார் கெடுவதில்லை
> நான்குமறைத் தீர்ப்பு

என்ற பாரதியாரின் தீர்ப்பு, இவர் இப்பாடல்பாடிய நாள்தொட்டு இன்றுவரை ஹரிஜனங்களாகிய எங்களுக்கு எவ்வளவோ ஆறுதல் அளித்து வந்திருக்கிறது. அந்த நம்பிக்கையும் பாரதியாரின் பாட்டுத் திறமும், தமிழ்நாட்டில் பொதுவாகத் தேசீய இயக்கத்திற்கும், சிறப்பாக ஹரிஜன முன்னேற்றத்திற்கும் நல்ல வழி காட்டியிருக்கின்றன. இன்று ஆலயப் பிரவேசம் இந்நாட்டில் திருப்பதி ஹரிஜனப் பிரவேசத்துடன் இனிது முற்றுப் பெற்றிருக்கிறது. எல்லாம் பாரதியார் பாடிய தேச முத்துமாரியின் திருவருள்தான் என்பது என் நம்பிக்கை.

# 7. இதயக்கோவிலில் ஹரிஜனப் பிரவேசம்

என் குருநாதரை நினைத்ததும் கால வெள்ளம் பின்னோக்கி ஓடுகிறது. என் மனத்தோணியைத் துழைந்துகொண்டே ஓரிடத்தில் கரையை எட்டிக் குதித்து அவர் கண் முன்னே நின்றுவிடுகிறேன். 'ஆறில் ஒரு பங்கு' என்ற சிறிய கதையை எழுதி ஹரிஜன முன்னேற்றத்தில் தமக்கிருந்த பேரன்பை விளக்கிக் காட்டிய பாரதியார், என்னைக் கண்டதுமே, தம் இதயக் கோவிலில் பிரவேசம் அளித்து விடுகிறார்.

ஹரிஜனங்களுக்கு ஆலயப் பிரவேசம் அளித்துவரும் இன்றைய தமிழகத்திலும் இதயப் பிரவேசம் அளிக்கும் 'உயர் குலத்தினர்' மிகச் சிலரேயாவார். இப்படியிருக்க, அந்த நாளிலேயே பாரதியார் தம் இதயக்கோவிலில் ஹரிஜனங்களைத் தாராளமாகப் பிரவேசிக்கச் செய்து, அத்தகைய பிரவேசத்தைத் தேச சேவையின் முக்கிய அம்சமாகவும் கருதினார். இதைக் குறித்து மணிக்கணக்கில் பேசலாம், பக்கம் பக்கமாக எழுதித்தள்ளலாம் என்று என் இதயம் சொல்லுகிறது.

ஒருநாள் நான் பாரதியார் வீட்டுக்குச் சென்றிருந்தேன் என்னைக் கண்டதும் பாரதியார், 'உனக்குத் தம்பலா வீடு தெரியுமா?' என்று கேட்டார். 'தெரியும்' என்றேன் 'அப்படியானால் அந்த வீட்டுக்குப் போய்வருவோம்' என்றார். நான் திடுக்கிட்டுப் போனேன். குருநாதர் இருந்தாற்போலிருந்து தோட்டி தம்பலா வீட்டுக்கு அழைக்கிறாரே என்றும், அவர் இதயம் வருந்தலாகாதே என்றும் எண்ணிக்கொண்டே, 'சுவாமி வாருங்கள், போய் வருவோம்!' என்று பதில் சொன்னேன்.

புதுச்சேரியில் தோட்டி சமூகத்திற்குத் தம்பலா தலைவராக விளங்கினார். அவருடைய சொந்தப் பெயர் எனக்குத் தெரியாது. பொதுவாக ஜனங்கள் அழைக்கும் பெயர்தான் தம்பலா. அவர் சாராயக் கடை, கஞ்சாக் கடை இவைகளைக் குத்தகை எடுத்துப் பொருள் சம்பாதித்தவர். 1905-ம் ஆண்டில் நடைபெற்ற 'லெமேர்' தேர்தலில் அவர் வோட்டர்களைப் பயமுறுத்தியது பிரசித்தமான செய்தி. அக்காலத்தில் புதுவையில் தம்பலா என்றால், அழுத பிள்ளை வாய் மூடும் என்பார்கள்.

புதுச்சேரி 'புல்வார்க்' பக்கத்தில் சுண்ணாம்புக் காளவாய் என்ற இடத்தில் தமக்குச் சொந்தமான ஒரு பெரிய மாடி வீட்டில் தம்பலா வசித்து வந்தார். பாரதியாரும் நானும் அங்கே சென்றதும், அவ்வீட்டின் ஒட்டுத் திண்ணை ஒன்றில் பாரதியார் உட்கார்ந்துகொண்டார். வீடு தாழிட்டிருந்தது. கதவைத் தட்டச் சொன்னார். தட்டியதும் உள்ளே தம்பலாவின் மனைவி, 'என்ன செய்தி?' என்று கேட்டாள். 'தம்பலா எங்கே?' என்று நான் கேட்டதும், அவள், 'அவர் கழனி வேலையாகப் போயிருக்கிறார், வருகிற சமயம்தான்' என்றாள். அப்படி அவள் சொல்லி வாய் மூடுவதற்குள் தம்பலாவும் வந்து சேர்ந்தார்.

அவர் பாரதியாரைக் கண்டவுடன் வரவேற்றுத் தாழ்மையுடன் கும்பிடு போட்டு நின்றார். கவிஞர் தமக்கு எதிரேயிருந்த ஒட்டுத் திண்ணையில் தம்பலாவை உட்காரச் சொன்னார். பாரதியார் எவ்வளவோ வற்புறுத்தியும் அவர் கேளாமல் தோளில் போட்டிருந்த துண்டை விரித்துப்போட்டுத் தரையிலே உட்கார்ந்து கொண்டார். தான் 'யார் தெரியுமா?' என்று குருநாதர் கேட்டார். தம்பலா, 'தெரியுங்கோ! நீங்கள் சுதேசிங்கோ!' என்றார். 'அப்படியானால் நீர் பரதேசியா?' என்று பாரதியார் பளிச்சென்று கேட்டார். தம்பலா ஒன்றும் பதில் சொல்லாமல் இவரைப் பக்தியுடன் நோக்கிய வண்ணம் இருந்தார்.

கடைசியாகப் பாரதியார், 'உம்முடைய வீட்டில் வந்து உட்கார்ந்துகொண்டு உம்மிடம் இரண்டொரு வார்த்தையாவது பேசவேணும் என்ற அவா இருந்தது. இன்று பூர்த்தியாகிவிட்டது. தாங்கள் போய் வருகிறோம்' என்று எழுந்தார். அப்படிப் பிரித்துவிட மனமில்லாதவர்போல் தம்பலாவும் எங்களுடன் கொஞ்ச தூரம்

ரஸ்தாவரையில் வந்து, பாரதியாருக்கு நமஸ்காரம் செய்து விட்டுத் திரும்பினார்.

அப்போது பாரதியார் என்னை நோக்கி, 'கனகலிங்கம்! தம்பலா நம்மிடம் எவ்வளவு நல்லவனாக நடந்துகொண்டான், பார்த்தாயா? தேர்தல் காலங்களில் ஜனங்களை அடிப்பதும் ஹிம்ஸிப்பதுமாய் இருந்தான் என்று கேள்விப்பட்டுத்தான் நான் இவனிடம் சிநேகம் செய்ய மனமில்லாமல் இருந்தேன்!' என்று சொன்னார்.

எந்தக் காரணத்தை முன்னிட்டும் சிலரை ஒதுக்கிவைப்பது தவறு என்று பாரதியார் கருதினார். கெட்ட பழக்க வழக்கங்கள் உள்ளவரானாலும் அவர்களோடு நல்லவர்கள் பழகுவார்களானால், அவர்களைத் திருத்த முடியும்; ஒதுக்கி வைப்பதோ, ஒடுக்கி வைப்பதோ, அவர்களுக்கும் கேடு, பிறருக்கும் கேடு என்பது பாரதியாரின் கொள்கை.

பாரதியார் தமது அருமைத் திருமகள் சகுந்தலாவைப் 'பாப்பா' என்று செல்லமாகக் கூப்பிடுவது வழக்கம் இந்தக் குழந்தைக்காகத்தான் 'பாப்பாப் பாட்டு' என்று அழகான குழந்தைப் பாடலை இவர் பாடியிருக்கிறார்.

'ஓடி விளையாடு பாப்பா;'

என்று ஆரம்பிக்கும் இந்தப் பாடலை இந்நாளில் அறியாத தமிழனும் உண்டோ? இப்பாட்டில் சகுந்தலா அம்மையாருக்கு 'வாழும் முறைமையைப் போதிக்கும் பாரதியார், வீரத்தையும் தேச பக்தியையும் வற்புறுத்துவது போல் சமூக ஸமதர்மத்தையும்,

சாதிகள் இல்லையடி பாப்பா! - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்

என்று அழுத்தமாக வற்புறுத்தி உபதேசித்திருக்கிறார்.

பாரதியாருக்கு, உபதேசம் வேறு, அனுஷ்டானம் வேறு என்றுதான் கிடையாதே: ஆகவே நானும் ஒரு நண்பரும் - பாரதியாருக்குப் பிரெஞ்சு கீதங்கள் கற்பித்த நண்பர்தான் -

சகுந்தலாவை எங்கள் வீட்டுக்கு அடிக்கடி அழைத்துப்போவது வழக்கம். அப்போது இந்த அம்மையாருக்கு ஐந்து வயதுதானிருக்கும்.

நாங்கள் 'பாப்பா'வை வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போவதற்குமுன் பாரதியாரிடம் தகவல் கொடுப்போம். அவர் உடனே, 'செல்லம்மா!' என்று தம் மனைவியாரைக் கூப்பிடுவார். அந்த அம்மையார் பின்கட்டில் இருந்தபடியே 'அழைத்துக்கொண்டு போகட்டும்: தின்பதற்குக் கண்டதைக் கொடுக்க வேண்டாம்' என்று சொல்வார்.

நாங்கள் சகுந்தலாவை அழைத்துக் கொண்டு போகும்போது எங்களை ரஸ்தாவில் காணும் இதர வகுப்பினரில் சிலர், 'ஐயோ! பிராம்மணக் குழந்தையை இவர்கள் கையைப் பிடித்துக் கூட்டிக்கொண்டு போகிறார்களே!' என்று முணுமுணுத்துக் கொண்டே எங்களை ஏற இறங்கப் பார்ப்பார்கள். அவர்கள் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கும்.

அக்காலத்தில் புதுச்சேரி ஜாதி வித்தியாசம் பாராட்டுவதில் எந்த வைதிகப் பிரதேசத்திற்கும் சிறிதும் பின்வாங்கியதில்லை. ஆனால் கவியரசருக்குத்தான் இதைப்பற்றிக் கவலையே கிடையாதே! இவரது இதயக்கோவிலில்தான், ஜாதிபேதம், நிறபேதம், அந்தஸ்துபேதம் முதலான பேதம் ஒன்றும் இல்லாமல் யாரும் பிரவேசிக்கலாமே!

நாங்கள் அடிக்கடி சகுந்தலா அம்மையை வீட்டுக்கு அழைத்துப் போனதற்குக் காரணம், இவர் சிறு பிராயத்திலேயே பாரதியாரின் இரண்டு பாடல்களையும், ஒரு பிரெஞ்சு தேசீயப் பாடலையும் வெகு இனிமையாகப் பாடியதும், அதைக்கேட்டுக் கேட்டு ஆனந்திக்க நாங்கள் விரும்பியதும்தான். குறித்த பிரெஞ்சு தேசீயப் பாடல் 'லா-மர்ஸியேஸ்' என்று தொடங்குவதுதான். மற்றப்பாடல்களில், 'காணி நிலம் வேண்டும்' என்று தொடங்குவதும், 'பாரத தேசம் என்று பெயர் சொல்லுவார்' என்று தொடங்குவதும் ஆகிய இரண்டு பாரதி-பாடல்களைத்தான் நான் இங்கே குறிப்பிடுகிறேன்.

பாரதியாருக்கு ஜாதி வித்தியாசங்களை அடியோடு தொலைத்துவிட வேண்டும் என்ற புரட்சிகரமான லட்சியம்

அந்நாளிலேயே உண்டு. அரசியல் துறையில் மட்டுமல்ல, சமூகத் துறையிலும் இவர் பெரும் புரட்சிக்காரர். வாய்ச்சொல் வீரரல்லர், செயல்-திறமை வாய்ந்த தீரர். ஆகவே இப்பெரியார் தம் வீட்டில் ஐந்து ஹரிஜன வாலிபர்களுக்கு விருந்து நடத்தினார் ஒரு சமயம். இன்றைக்குச் சுமார் முப்பத்து மூன்று வருஷங்களுக்கு முன் இந்த விருந்து நடைபெற்றது. 1914-ம் ஆண்டில் நடைபெற்ற முதலாவது உலக மகாயுத்தத்திற்குக் கட்டாயச் சேவகமாய்ப் புதுவையிலிருந்து ஐந்து பிரெஞ்சு இந்திய வாலிபர்கள் அனுப்பப்பட்டார்கள். இவர்களில் ஒருவர் பாரதியாருக்குப் பிரெஞ்சு தேசிய கீதங்களைக் கற்றுக் கொடுத்த அந்துவேன் அர்லோக். ஜேம்ஸ் ஸாமுவேல் என்ற வேறொரு வாலிபர் பாரதியார் பாடும் சமயங்களில் பிடில் வாசிப்பவர். இவர்களை உள்ளிட்ட ஐவருக்கும் பாரதியார் தாம் வசித்துவந்த ஈசுவரன் தருமராஜா வீதி இல்லத்தில் விருந்து நடத்தியது அந்நாளில் அவ்வூரில் எத்தகைய வீரதீரப் புரட்சிச் செயலாக இருந்திருக்க வேண்டும் என்பதை இந்நாளில் உணர்ந்து கொள்வது எளிதன்று.

நான் தவறாமல் பாரதியார் வீட்டுக்குப்போய் வருவதை வழக்கமாய்க் கொண்டிருந்த நான் அன்றும் அங்கே போயிருந்தேன். எதிர்பார்த்தபடி ஐந்து ஹரிஜன விருந்தினர்களும் பாரதியாரை மகிழ்ச்சியுடன் நமஸ்கரிக்க, இவர் மிக்க மகிழ்ச்சியுடன் அவர்களை வரவேற்றார். எல்லாரும் வீட்டுக்கூடத்தில் அமர்ந்தார்கள். பாரதியாரின் மனைவியார் ஸ்ரீமதி செல்லம்மாள் டம்ளர்களில் தண்ணீர் கொண்டுவந்து வைக்க, எல்லோரும் கை அலம்பிக் கொண்டு, பாரதியார் மத்தியிலும், மற்ற ஐவரும் இடதுபக்கமும் வலதுபக்கமுமாக அமர்ந்தார்கள். அம்மையார் எல்லாருக்கும் இலை போட்டுப் பரிமாறி விட்டுப் பின்கட்டுக்குப் போய்விட்டார்.

எல்லாரும் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது ஜேம்ஸ் ஸாமுவேல், டம்ளரைத் தூக்கிக் குடிக்கும் பழக்கம் இல்லாததால், மார்பிலும் கழுத்திலும் தண்ணீரை ஊற்றிக்கொண்டார். அது மற்றவர்களுக்கு வேடிக்கையாக இருந்தது. பாரதியாரோ அனுதாபத்துடன், ஸாமுவேல்! ஏன் தூக்கிச் சாப்பிட்டீர்? அச்சமின்றி வழக்கம்போல் பருகலாமே!, என்றார். அந்த அன்புச் சொல் எங்களை உருக்கிவிட்டது.

எல்லாரும் சாப்பிட்டு எழுந்திருக்கும்போது அந்துவேன் அர்லோக், சாப்பிட்ட இலையைக் கையில் எடுத்தார். உடனே குருநாதர், 'யாரும் இலையைத் தொடவேண்டாம்!' என்று சொல்லி, 'செல்லம்மா!' என்று கூப்பிட்டு, 'இலைகளை எடும்!' என்றார். அம்மையார் ஒருவித வெறுப்பும் இல்லாமல் அப்படியே செய்தார்.

ஜாதி கர்வமும் தீண்டாமையும் தலைவிரித்துப் பேயாட்டம் ஆடிய அந்நாளில் பாரதியார் இப்படியெல்லாம் ஹரிஜனங்களுக்குத் தமது இல்லத்தில் மட்டுமல்ல, இதயக் கோவிலிலும் பிரவேசம் அளித்து அன்பு-விருந்து செய்தார்.

❖

# 8. பாரதியாரின் ஸமதர்மம்

முன்னே குறிப்பிட்டபடி ஐவரும் விருந்து அருந்தியபின் கூடத்தில் பாரதியாருடன் உட்கார்ந்து வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தனர் வயிற்றுக்கு விருந்து அளித்த பாரதியார் அவர்களுடைய உள்ளத்திற்கும் ஒரு விருந்து அளித்தார். (நான் அவர்களைப்போல் போருக்குப் புறப்படாததால் செவி-விருத்தில் மட்டும் பங்கு கொண்டேன்.)

பாரதியார் விருந்தினர்களை நோக்கிச் செய்த உபதேசத்தின் ஸாரம்தான் எனக்கு.இப்போது ஞாபகம் வருகிறது.

பொன்போல் குரலும்,
புதுமின் போல் வார்த்தைகளும்

என்று 'குயில் பாட்'டில் பாரதியார் பாடியிருக்கிறார் அல்லவா? மின்னல்கள் போல் அப்படிப் பளிச்சுப் பளிச்சென்று வந்தன வார்த்தைகள், தங்கமான குரலிலே. அந்தத் தோரணையையாவது. குரலையாவது, வார்த்தைகளையாவது நான் இங்கே காட்ட முடியாது. ஆனால் அந்தக் கருத்தைக் குறைவில்லாமல் ஒருவாறு வெளியிடுகிறேன்.

அந்த விருந்தினரைப் போன்றவர்களெல்லாம் சாதாரணமாகத் தங்கள் சொந்தப் பெயர்களோடு பிரெஞ்சுப் பெயர்களையும் சேர்த்துத்தான் புதுச்சேரியில் பெயர்ப் பதிவு செய்துகொள்வார்கள். உதாரணமாக, ஸ்ரீ. திருவேங்கடம் என்பவர் திருவேங்கடம் வெர்னியே என்று பெயர்ப் பதிவு செய்வார். சொந்தப் பெயர்களுடன் வெர்னியே, அர்லொாக், ஸெழான் போன்ற பிரெஞ்சுப் பெயர்களையும் இணைத்துக் கொள்வார்கள். கிறிஸ்தவர்களும் சரி, இந்துக்களும் சரி. இரண்டு பெயர்களில்

புதிதாக வைத்த பிரெஞ்சுப் பெயர்தான் வழங்கும் ஸ்ரீ. திருவேங்கடம் வெர்னியேஎன்பவரை 'மிஸ்டர் வெர்னியே!' என்பர். இது குடும்பப் பெயராகவும் அமைந்துவிடும் ஆகவே, பிற்காலச் சந்ததிகளுக்கும் இப்பெயர்களே முன் நிற்கும். இப்படிக் கூடுதலாக வைக்கும் பிரெஞ்சுப் பெயர்களுக்குப் பதில், ஹரிஜன வாலிபர்கள், 'ஐயர்', 'ஐயங்கார்', 'செட்டியார்', 'முதலியார்', 'நாயுடு' என்ற ஜாதிப் பெயர்களைத் தங்கள் இஷ்டப்படி வைத்துக்கொள்வது நலம் என்று கவிஞர் உபதேசம் செய்தார்.

அப்படியானால், 'மிஸ்டர் ஐயர்' என்றோ 'மிஸ்டர் முதலியார்' என்றோ, 'மிஸ்டர் செட்டியார்' என்றோ, 'மிஸ்டர் நாயுடு' என்றோ ஹரிஜனங்களையும் கூப்பிட நேரிடும் என்று கவிஞர் யுக்தி சொன்னார். அடுத்தபடியாக இவர்களுடைய மனைவியரும் 'மேடம் ஐயர்' 'மேடம் ஐயங்கார்' 'மேடம் செட்டியார்' என்றெல்லாம் அழைக்கப்பெறுவர். இப்படியாக ஹரிஜன வாலிபர்கள் பெயர் வைத்துக்கொள்ள ஆரம்பித்துவிட்டால், நாளடைவில் 'ஐயர்', 'ஐயங்கார்', 'செட்டியார்', 'முதலியார்', 'நாயுடுகாரு' முதலான ஜாதிப்பெயர்களின் தனிக்கௌரவம் பறந்துபோகும் என்றார் பாரதியார்.

'என்ன வினோதமான ஆலோசனை!' என்று வாசகர்கள் எண்ணக்கூடும். அதே சமயத்தில், 'அடடா, என்ன புரட்சிகரமான ஆலோசனை!' என்றும் தோன்றுகிற தல்லவா? பாரதியார் உள்ளும் புறமும் புரட்சிமயமாகவே இருந்தார் புரட்சியென்றால் புரட்சிதான், புரட்டு அன்று!

இந்த உபதேசத்திற்குப்பின், இரண்டு தினங்களுக்கு அப்பால், பிரெஞ்சுப் போர்க்களத்தை நோக்கிப் புறப்பட இருந்த அந்த ஹரிஜன வாலிப விருந்தினர்களைப் பாரதியார் தமது வீரத் திருவிழிப் பார்வையால் குளிரக் கடாட்சித்தார். இடையூறு ஒன்றும் ஏற்படாமல் அவர்கள் வெற்றியுடன் தாய் நாடு திரும்பவேண்டும் என்று அன்னை பராசக்தியைத் தியானித்து ரட்சையாக விபூதி கொடுப்பதாய்ச் சொல்லி, அதை அவர்கள் பத்திரமாக வைத்துகொள்ள வேண்டும் என்றார்.

பிறகு கூடத்தில் மாட்டியிருந்த காளி தேவியின் படத்தின்முன் போய்நின்றுகொண்டு,

காளீ! வலிய சாமுண்டீ!
ஓங்காரத் தலைவி! என் ராணி!

என்று கூவி அந்தப் பாடலை வெகு உருக்கமாகப் பாடினார். 'இந்துக்களாயிருந்தாலும் சரி, கிறிஸ்தவர்களாயிருந்தாலும் சரி' என்று மதவேற்றுமை பாராட்டாமல் அவர்கள் தலையில் திருநீறு போட்டு நெற்றியிலும் இட்டுக்கொள்ளச் செய்தார். அந்த ஐவரில் நால்வர் கிறிஸ்தவர்; ஜகதீசன் ஸெஷான் என்ற ஒருவரே இந்து. எனினும், அந்த ஐவரும் பாரதியார்மீது கொண்டிருந்த பக்திப் பெருக்கினால் விபூதிப் பிரசாதத்தைப் பயபக்தியுடன் வாங்கிப் பூசிக்கொண்டார்கள். கடைசியாக எல்லாரும் பணிவுடன் கவிஞர் பெருமானை நமஸ்கரித்து விடைபெற்று வீடு சென்றார்கள். நானும் அவர்களுடன் சென்றேன்.

அந்தக் காட்சி இன்றும் என் கருத்தைவிட்டு அகலவில்லை, கண்ணைவிட்டும் அகலவில்லை. போர்க்களத்தை நோக்கிச் சென்ற அந்த ஐவரும் சேஷமமாக 1918-ம் ஆண்டில் பிரான்ஸிலிருந்து புதுவைக்குத் திரும்பி வந்தார்கள். அங்க ஈனர்களாக வரவில்லை, திடசரீரத்துடன் வந்தார்கள். புதுவை வந்ததுதான் தாம்தம், பாரதியாரைப் போய்க் கண்டு நமஸ்கரித்து ஆனந்தமடைந்தார்கள்.

சிலர், 'மூடநம்பிக்கை' என்று சொல்லலாம்; பலரும், 'ஏதோ தெய்வச் செயல்' என்று கருதலாம். ஆனால் பாரதியார் மனமுவந்து உருகிக் கொடுத்த விபூதிப் பிரசாதத்தின் மகிமையும், இவர் குழந்தையுள்ளத்துடன் போற்றிய தேவி பராசக்தியின் திருவருளும் அவர்களுக்கு அரிய ரட்சையாக அமைந்தது, ஒரு குறையும் இல்லாமல் அவர்களைக் கொண்டுவந்து சேர்த்தன என்பது என் நம்பிக்கை.

இவ்வளவு பக்தி சிரத்தையுடனும், பிரார்த்தனை-உள்ளத்துடனும், ஆத்மசக்தியுடனும் ஜாதி பேதங்களைப் போக்கடிக்க முயன்ற பாரதியார் புதுவையில் மேலும் பல ஆண்டுகள் தங்கியிருந்தால், புதுவையானது ஜாதிப் பேயை ஒழித்து ஒரு புதிய ஸமதர்மத்தை நிலைநாட்டத் தமிழகத்திற்கே வழிகாட்டியாகத் திகழ்ந்திருக்கும் என்று நான் பல சமயங்களில் எண்ணுவதுண்டு. சமய உணர்ச்சியைக் கொண்டே, பக்தியாகிய சக்தி - ஆயுதத்தைச்

சுழற்றிக்கொண்டே, வேற்றுமை உணர்ச்சிகளை வெட்டிக் களைத்து, ஸமதர்ம விதையை ஆழமாக விதைத்துச் சிறந்த நற்பயனை விளைவித்துக்கொள்ளலாம் என்பது பாரதியார் கனவு.

பாரதியாருக்குச் சமய உணர்ச்சியென்றால் 'காளி வழிபாடு' தான் என்பதில்லை. காளியும், கண்ணனும், முருகனும், கிறிஸ்துவும், அல்லாவும் ஒன்றே - இவருக்கு எம்மதமும் சம்மதமே.

புதுச்சேரியில் சம்பா கோவில் என்று அழைக்கப்பெறும் ஜன்ம விராக்கினி மாதாவின் ஆலயத்தில் ஈஸ்டர் பண்டிகை மிகச் சிறப்பாய்க் கொண்டாடப்படுகிறது. இதைத் தமிழ்நாட்டுக் கத்தோலிக் மதத்தினர் நன்கு அறிவர். இப்பண்டிகை விழாவில் பாரதியார் யாதொரு வேற்றுமை உணர்ச்சியும் இன்றி இம் மாதாகோவிலுக்குப் போவார்; மனைவியாரையும் குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு போவார். வேடிக்கை பார்க்க அன்று, பக்தியுடனே போய்வருவதுண்டு.

சுமார் ஐந்து அண்டுகளுக்குமுன் - 1942-ம் வருஷம் என்று ஞாபகம் - பாரதியாரின் அருமைத் திருமகள் 'பாப்பா' என்ற ஸ்ரீமதி சகுந்தலை அம்மையார் சென்னைத் தியாகராயநகரில் வசித்து வந்தார். நான் அவ்வம்மையாரைக் காணச் சென்றேன். அப்போது அவர் மாதாகோவிலைக் குறித்தும் அங்கே நடைபெறும் ஈஸ்டர் பண்டிகை குறித்தும் ஆவலாக விசாரித்தார். 'அப்பா எங்களையெல்லாம் அந்தப் பண்டிகைக்குக் கூட்டிக்கொண்டு போவாரே, அது இன்னும் என் ஞாபகத்தில் இருந்துவருகிறது, என்றார். பாரதியாரின் ஸமதர்மம் ஜாதி பேதங்களையும் சமயபேதங்களையும் ஒருங்கே கடந்த சமரஸ சன்மார்க்கமாகும்.

ஒரு தேநீர்க் கடை 'காக்கா' என்னும் முஸ்லீம் அதற்கு முதலாளி. புதுச்சேரிக் கடைவீதியில் இருந்த அக்கடையில் பாரதியார் தேநீர் அருந்துவார். ஏதோ இரகசியமாய்ப் போய்ச் சாப்பிட்டார் என்பதும் இல்லை!

நண்பர்கள் சூழக் கடைக்கு எதிரே தெருவில் நிற்பார். 'காக்கா' டீ தயாரித்துக் கொண்டுவந்து கொடுப்பார் ஒரு கண்ணாடி டம்ளரில். பாரிதியார் டம்ளரை வாங்கி முகத்திற்கு நேரே தூக்கிப் பிடித்துக்கொள்வார் - எல்லாரும் பார்க்கட்டும் என்றுதான்.

அப்போது பார்க்கவேணும் அங்கே. சில முகங்களை - அவைகளில் எத்தனை கோணல்கள் விழும்! பாரதியாரோ ரஸித்துப் பருகுவார்.

இது பாரதி கண்ட ஸமதர்மம். முஸல்மான் என்றும், கிறிஸ்தவன் என்றும், இந்து என்றும், பிராம்மணன் என்றும், ஹரிஜனன் என்றும் சிறிதும் வேற்றுமை பாராட்டாமல், எல்லாச் சமயங்களிலுமுள்ள ஸாரமான உண்மை கண்டு,

ஒன்றே குலமும்,
ஒருவனே தேவனும்

என்ற திருமூலர் கொள்கையை அப்படியே அனுபவித்து அனுஷ்டித்துக் காட்டிய இந்த ஸமதர்மம் தமிழ்நாட்டுக்கு விசேஷமாக உரியது.

பழைய காலத்திலே தமிழ் நாட்டில் உதித்த ஸமதர்மக் கொள்கைக்குப் பாரதியார் புத்துயிர் அளித்தார். இது இவரது கவிதைக்குப் புதியதோர் ஒளியையும், உயிரையும், அழகையும், அளித்திருக்கிறது. இவருக்குத்தான் வாழ்க்கை வேறு. கவிதை வேறு என்பதில்லையே - வாழ்க்கையே கவிதை. கவிதையே வாழ்க்கை அல்லவா?

❖

# 9. நிகழ்ச்சிக் கதம்பம்

'பொன்வால் நரி'

பாரதியார் புதுவையிலிருந்த காலத்தில் 'பொன்வால் நரி' என்ற சிறு ஆங்கிலப் புத்தகமொன்றை வெளியிட்டார். அந்தப் புத்தகத்தில் சுமார் நூறு பிரதிகளை ஒரு கட்டாகக் கட்டி அந்தக் கட்டை ரயில்வே பார்ஸலில் அனுப்பி வரும்படி அதற்கு உரிய செலவையும் கொடுத்து என்னை அனுப்பிவைத்தார்.

நான் புத்தகக் கட்டுடன் கொஞ்சம் தூரம் சென்றதும், பாரதியார் மறுபடியும் என்னை வீட்டுக்குள்ளே கூப்பிட்டு, 'நீ ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்றதும்....' என்று ஏதோ சொல்ல வாயெடுத்தார். (அவர், 'நீராவி, ஊர்தி நிலையம்' என்றெல்லாம் கடுந்தமிழில் பேசமாட்டார். செந்தமிழ், கொச்சைக் கொடுந் தமிழாக இருக்கக் கூடாது; ஆனால் பற்களை உடைக்கும் கடுந் தமிழாகவோ, விளங்காத கருந் தமிழாகவோ இருக்க வேண்டியதில்லை; பேச்சை ஒட்டிய, இலக்கணப் பிழை இல்லாத பச்சைப் பசுந் தமிழாக விளங்கவேண்டும் என்பது பாரதியார் அபிப்ராயம்.) 'முதலில் சுங்க அதிகாரிகளிடம் கட்டை அவிழ்த்துப், புத்தகங்களைக் காட்டவேண்டியிருக்கும்; காட்டியபின் பார்ஸல் ஆபீஸில் "புக்" பண்ண வேண்டும், தெரிந்ததா? என்றார்.

இப்படிச் சொல்லிவிட்டு, 'இதோ இந்த இரண்டு பிரதிகளையும் கையில் வைத்துக்கொள், கஸ்டம்ஸ் அதிகாரிகள் புத்தகம் வேண்டுமென்றால், அவர்களிடம் ஒரு பிரதி கொடுக்கலாம்; பிரிட்டிஷ் இரகசியப் போலீஸார் அங்கே திரிந்து கொண்டிருப்பார்கள், அவர்கள் கேட்டாலும் மற்றப் பிரதியைக் கொடுத்துவிடலாம்' என்றார்.

பாரதியார் சொன்னபடியே கஸ்டம்ஸ் அதிகாரிகளிடம் புத்தகக் கட்டைப் பிரித்துக் காட்டிக்கொண்டிருக்கும் சமயத்தில், இரகசியப் போலீஸாரின் கழுகுக் கண்கள் என் பின்புறமாகக் கூர்ந்து நோக்கி கொண்டிருந்ததை அறிந்து கொண்டேன். உடனே சி.ஐ.டி அதிகாரிக்கு ஒரு பிரதி கொடுத்துவிட்டு, என் கையிலிருந்த மறு பிரதியைச் சுங்க அதிகாரியிடம் நீட்டினேன்.

சுங்க அதிகாரி பார்ஸல் செய்ய அனுமதித்தார். ஆனால் சி.ஐ.டி அதிகாரி, உடனே பார்ஸல் செய்யவிடாமல், புத்தகக் கட்டின்மேல் எழுதியிருந்த விலாசத்தைச் சட்டைப் பையில் வைத்திருந்த டயரியில் ஜாக்கிரதையாகக் குறித்துக்கொண்டார்.

விலாசதார், காலம் சென்ற சென்னை டாக்டர் டி.எம். நாயர்தான். அந்நாளில் டாக்டர் நாயர் தேசியவாதியாகவே இருந்தார் - சமூகச் சீர்திருத்தத்தில் பெருவிருப்பமுள்ள தேசியவாதி. பின்னாளில் எங்கும் வகுப்புப் பூசல்களைச் சண்டமாருதமாய்க் கிளப்பி விட்டுத் தமிழ் நாட்டை ஒரு கலக்குக் கலக்கி விட்ட டாக்டர் நாயர் அல்லர் அக்காலத்து டாக்டர் நாயர். பாரதியாரும், சமூகப் புரட்சி அரசியல் புரட்சிக்கு இன்றியமையாதது என்று கருதியதால் டாக்டர் நாயரிடம் அபிமானமுள்ளவராக இருந்தார்.

அநாவசியமாகத் தாமதம் செய்த பின்னர் இரகசியப் போலீஸார் 'பொன்வால் நரி'யைச் சென்னை டாக்டர் நாயர் இல்லத்திற்கு அனுப்பிவைக்க அனுமதித்தார்கள். நான் திரும்பிச் சென்று குருநாதர் சொன்னபடியே பார்ஸல் செய்து வந்ததைத் தெரிவித்தேன்.

## தர்மாவேசம்

ஒரு சமயம் பாரதியார் என்னை ஸ்ரீ. சுந்தரேசய்யர் என்ற தமது பிராம்மண நண்பர் வீட்டுக்கு வந்து தம்மைச் சந்திக்கும்படி சொல்லியிருந்தார். நான் அங்கே சென்றதும், வீட்டுக்குள் புகுந்து விடாமல் தெருவில் நின்றுகொண்டே மேல்மாடியை நோக்கி, 'சுவாமி!' என்று உரத்த குரலில் கூப்பிட்டேன். 'உள்ளே வா!' என்று பாரதியார்சத்தம் கொடுத்தார். அந்நாளில் புதுவை ஜாதி பேத உணர்ச்சிக்கு ஒரு நிலைக்களமாக இருந்ததால், பாரதியார் கூப்பிட்டும் நான் உள்ளே நுழைந்துவிடவில்லை.

பாரதியார் மேல்மாடத்திற்கு முன்புறமாக வந்து நின்றுகொண்டு, 'உள்ளே வா!' என்று சற்றுக் கோபமாய்க் கர்ஜித்தார். அப்பால் தயங்காமல் நான் மேடைக்குப் போய்ச் சேர்ந்தேன். அங்கே வீட்டின் சொந்தக்காரரும், வேறு மூன்று பிராமணர்களும் இருந்தார்கள். பாரதியார் என்னைக் கண்டதும், 'இன்றுமுதல் நான் எந்த இடத்தில் இருக்கிறேனோ, அந்த இடத்தில் தீண்டாமைப்பிணி இருக்கவே இருக்க முடியாது!' என்று ஆவேசத்துடன் கூறினார். உடன் இருந்த மற்றப் பிராம்மணர்களின் முகக்குறியும் பாரதியாரின் வார்த்தையை ஆதரித்ததாகவே மலர்ச்சி பெற்றது.

பாரதியார் ஆனந்தமாகப் பாடுவதைக் கேட்டுக் கேட்டு எத்தனையோ தடவை மெய்சிலிர்த்துப் பரவசமாயிருக்கிறேன். அன்று பாரதியாரின் தர்மாவேசமும், 'பாரதி இருக்கும் இடத்தில் தீண்டாமை எப்படி இருக்க முடியும்?' என்று பொருள் படப் பேசிய வீரதோரணையும் எனக்கு ஒரு புதிய அனுபவமாக இருந்தன. ஆம், உண்மைதானே! ராமன் இருக்குமிடம் அயோத்தி என்பதுபோலப் பாரதி இருக்குமிடம் ஸமதர்ம பூமிதான்!' என்பதை நான் மறந்ததுதான் பிசகு என்று உணர்ந்துகொண்டேன்.

### ஸமதர்மக் கச்சேரி

பிறகு பாரதியார் என்னிடம் அன்று மாலை ஆறு மணிக்குமேல் ஸ்ரீ சங்கரச் செட்டியார் வீட்டில் ஒரு வீணைக்கச்சேரி நடைபெறப் போவதாகவும், அதற்கு அந்துவேன் அர்லோக் என்ற பிரெஞ்சு வாத்தியார் முதலான ஹரிஜன நண்பர்களையும் அழைத்துக்கொண்டு வரவேண்டும் என்பதாகவும் சொன்னார். ஸ்ரீ. சங்கரச் செட்டியாரும் பாரதியாரும் பழைய புதுவை நண்பர்கள். பாரதியாரை அடிக்கடி செட்டியார் வீட்டில் காணலாம்.

குறித்த நேரத்தில் நான் நான்கு ஹரிஜன நண்பர்களுடன் கச்சேரிக்குப் போனேன். பாரதியார் எங்களை இதர வகுப்பாருடன் சமத்துவமாக உட்காரவைத்துத் தாமும் எங்களுக்குப் பக்கத்திலேயே உட்கார்ந்துகொண்டார். அப்போது அங்கிருந்த பார்ப்பனர் பார்ப்பனரல்லாதால் பலரும் எங்களைக் கூர்மையாகப் பார்த்து தங்களுக்குள்ளே ஏதேதோ முணுமுணுத்துக் கொண்டனர். பாரதியார் அதைக் கண்டும் காணாதது போல் அலட்சியமாகவும் கம்பீரமாகவும்

வீற்றிருந்து வீணாகானத்தைப் பருகிக்கொண்டிருந்தார். வேற்றுமையுணர்ச்சி கொண்டவர்களுடைய இதயத்திலோ, வெறுப்பும் பொறாமையும் நிறைந்து வீணாகானத்தை ஆனந்தமாக அனுபவிக்க முடியாமல் செய்திருக்க வேண்டும்.

கச்சேரி முடிந்தபின், ஸ்ரீ சங்கரச் செட்டியார் சிரித்துக் கொண்டே பாரதியாரை நோக்கி, 'பாரதி கண்ட பசங்களையெல்லாம் கச்சேரிக்குக் கூட்டிக் கொண்டு வந்துவிட்டதாகவும், அது நியாயமில்லையென்றும் சிலர் என்னிடம் புகார் செய்து கொண்டார்கள்; நான் அதைக் காதில் போட்டுக்கொள்ளவே யில்லை!' என்றார்.

## மௌன விரதம்

1913-ம் ஆண்டில் டிஸம்பர் 24-ம் தேதி, அதாவது கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு முந்தின நாள், என் வீட்டுக்கு அருகில் வசித்த ஹரிஜனக் கிருஸ்தவ வாலிபர்கள் தாங்கள் பஜனை செய்வதற்காகப் பாரதியாரிடமிருந்து ஹார்மோனியப் பெட்டி வாங்கிக்கொண்டு வரவேண்டுமென்று என்னிடம் சொன்னார்கள். அப்போது பாரதியார் ஈசுவரன் தர்மராஜா கோவில் தெருவில் தாம் முன்பு வசித்த 'விளக்கெண்ணெய்ச் செட்டியார்' வீட்டுக்கு எதிர் வீட்டில் குடியிருந்து வந்தார். வீடு தாழிட்டிருந்ததால், 'சுவாமி!' என்று உரக்கக் கூப்பிட்டேன். பாரதியார் மேடை ஜன்னலைத் திறந்துகொண்டு, மனைவி செல்லம்மா அம்மையார், புதல்வி சகுந்தலை அம்மாள், தங்கம்மாள் ஆகிய இவர்களுக்கிடையே காட்சியளித்தார். அப்போது பதில் பேசாமலே ஏதோ கைஜாடை காண்பித்தார். ஸ்ரீ. செல்லம்மாள் சகுந்தலை அம்மையுடன் மாடியிலிருந்து இறங்கிவந்து வெளிக்கதவைத் திறந்து ஹார்மோனியப் பெட்டியைத் திண்ணையில் வைத்தார். நான் அதை எடுத்துக்கொண்டு சென்றேன்.

அன்று பாரதியார் வழக்கம்போல் என்னிடம் பேசாதது அதிசயமாகவே இருந்தது. பஜனை முடிந்ததும் ஹார்மோனியப் பெட்டியைத் திருப்பிக்கொடுக்கப் போனேன். பாரதியார் மேல்மாடியில் படுத்திருந்தார்; தலையைமட்டும் அசைத்துவிட்டு,

ஆழ்ந்த சிந்தனையிலிருந்தார். எனக்கு ஆச்சரியம் அதிகரித்தது. ஒரு மணி நேரம் அங்கே உட்கார்ந்திருந்தேன். பாரதியார் பேசவேயில்லை. அப்பால், 'சுவாமி, போய் வருகிறேன்' என்று சொல்லிப் புறப்படும்போதும் பாரதியார் ஒன்றும் பேசாமலே தலையை அசைத்தார் அப்போதும் எதார்த்த நிலையைக் கண்டு கொள்ள முடியாமல் நான் மாடியைவிட்டு இறங்கினேன். சகுந்தலை அம்மையைக் கண்டு, 'என்ன, பாப்பா! அப்பா என்னிடம் பேசவே இல்லையே!' என்று கேட்டேன். அதற்கு அந்த அம்மாள், அப்பா மௌன அப்பியாசம் செய்கிறார். நாளைய தினம் வாரும், நன்றாய் பேசுவார்!' என்று பதில் சொன்னார்.

### கவிஞர் குறிகாரர்!

இந்தோ-சைனாவிலிருந்து ரஜாவின் பேரில் வந்த பிரெஞ்சு வாத்தியாரின் உறவினரில் ஒருவரான ரோக் என்பவர் வியாதியாகப் படுத்த படுக்கையில் இருந்தார். ஆயுர்வேத முறையிலும் நவீன வைத்திய முறையிலும் சிகிச்சை செய்து பார்த்தும், நோயைக் குறித்து விசேஷமாக ஒன்றும் புரியவில்லை. பாரதியார் காளிபூஜை செய்து வந்ததால், அந்த மகிமையை முன்னிட்டு ஒருவேளை இந்த நோயைக் குணப்படுத்தக் கூடும் என்று பிரெஞ்சு வாத்தியாரும் நானும் பாரதியார் வீட்டுக்குப் போனோம்.

வாத்தியார் விஷயத்தைச் சொன்னதும், பாரதியார் ஒரு பதிலும் சொல்லாமலே, கறுப்புக் கோட்டை மாட்டிக்கொண்டு எங்களுடன் புறப்பட்டார். கட்டிலில் படுத்திருந்த நோயாளியின் வலது கையை அந்நோயாளியின் தலைமேல் நீட்டி வைத்துக்கொண்டு கவிஞர் தம் கண்களை மூடிக்கொண்டார். சிறிது தியானத்தில் ஆழ்ந்திருந்த பின், என்னையும் பிரெஞ்சு வாத்தியாரையும் நோக்கி, 'வாருங்கள், போகலாம்' என்றார்.

தாங்கள் மூவரும் அந்த வீட்டுக்கு வெளியே வந்ததும், பாரதியார் பிரெஞ்சு வாத்தியாரைப் பார்த்து, 'கவலைப்பட வேண்டாம்!' என்றார். ஆனால் அதைத் தொடர்ந்து, 'இன்னும் இரண்டு மணி நேரத்திற்குள் அவர் காலமாகிவிடுவார்!' என்றார். அதை கேட்ட பிரெஞ்சு வாத்தியார் மனம் கலங்கிக் கண்ணீர் வடித்தார். 'மனதைத் திடப்படுத்திக் கொள்ளுங்கள்' என்றார் என் குரு.

பாரதியாருடன் வீடுவரையில் போய் நாங்கள் திரும்பி வருவதற்குள் நோயாளி இறந்துவிட்டார். வைத்தியர்களும் அவ்வளவு நிச்சயமாகச் சொல்லாமல் இருந்தபோது. கவிஞர் நடக்கப் போகிறதை முன்கூட்டி அறிந்து அப்படியே குறி சொன்னது போல் எங்களிடம் தெரிவித்தது எனக்கு இன்றும் ஆச்சரியமாகவே இருக்கிறது.

உண்மைக் கவிஞர்களெல்லாம் ஒருவகையில் குறிகாரர்களே என்று யாரோ சொல்லக் கேட்டிருக்கிறேன். உண்மையான குறிகாரருக்கு, 'சொல்லு, சொல்லு' என்று உதடும் நாக்கும் துடிக்குமாம்.அப்படித் துடித்துப் பேசியது போல் அன்று பாரதியார் அந்தக் குறி சொன்னார். இவர் கவி பாடுவதும் ஏறக்குறைய இப்படித்தானே!

மற்றொரு நிகழ்ச்சியும் என் ஞாபகத்திற்கு வருகிறது. புதுவைக் கவர்னர் பங்களாவில் ராகு கொலோந்தோம் என்ற ஹரிஜனக் கத்தோலிக் கிறிஸ்தவர் ஒருவர் துவிபாஷியாக இருந்து வந்தார். கறுப்பு நிறமும், நல்ல தேகக் கட்டுமுடையவர். தலையில் நாவற்பழ நிறமுடைய ஜரிகைத் தலைக்குட்டையும், உடலில் எப்போதும் வெண்மையான உடைகளுமே அணிந்திருப்பார். வாலிபர்கள் முன்வந்து செய்யும் ஒவ்வொரு நற்காரியத்திற்கும் அவர் உற்ற துணையாக இருந்து வந்தார். அவர் இரண்டு மாதக் காலம் நோய்வாய்ப் பட்டு, ரஜாவில் வீட்டிலேயே இருந்து வந்தார். அநேக டாக்டர்கள் பார்த்தும் குணப்படாமற் போயிற்று. பாரதியாரைக் கூட்டிக் கொண்டு போய், சக்தியைத் தியானித்து விபூதி போடச் சொல்லி பார்க்கலாமா என்று அடிக்கடி நான் நினைப்பதுண்டு. ராகு கொலோந்தோம் கிறிஸ்தவராயிற்றே, மற்றவர்கள் என்ன சொல்வார்களோ என்ற அச்சம் என்னைத் தடுத்து வந்தது.

ஒரு நாள் காலை 9-மணி சுமாருக்குப் பாரதியார் வீட்டுக்குச் சென்றிருந்தேன். அந்தப் பெரிய மாடிவீடு 'வினக்கெண்ணெய்ச் செட்டியார்' வீட்டுக்கு எதிரிலுள்ளது. நான் போயிருந்த சமயத்தில் குருநாதர் மாடியில் ஊஞ்சலில் அமர்ந்து ஆடிக்கொண்டே ஏதோ யோசனையிலிருந்தார். சற்று நேரத்தில் பிரெஞ்சு வாத்தியாரும் ஒரு சிறுடிரங்குப் பெட்டியுடன் வந்து, என் அருகில் உட்கார்ந்தார். அவர் ராகு கொலோந்தோம் அவர்களின் நிலைமையைப் பற்றி என் காதில்

குசுகுசுவென்று சொல்லிக்கொண்டிருந்தார். பாரதியார் எழுதும் போதும் படிக்கும்போதும் ஒரு சிறு சப்தமும் செய்யக்கூடாது என்பது எங்களுக்குத் தெரியும். திடீரென்று பாரதியார் ஊஞ்சலைவிட்டு இறங்கி வந்து, எங்கள் எதிரில் குத்திட்டு உட்கார்ந்து, 'என்னமோ குசுகுசுவென்று பேசிக் கொண்டிருந்தீர்களே. என்ன சங்கதி?' என்று பிரெஞ்சு வாத்தியாரை நோக்கிக் கேட்டார். அவரும் உள்ள விஷயத்தை எடுத்துச் சொல்லி, 'உங்களை அழைத்துக்கொண்டு போய் ராசு கோலோந்தோமைக் காண்பிக்கலாமா என்று யோசித்தோம்' என்றார்.

'அப்படியா? - முதலில் உமது பெட்டியைத் திறந்து "விடமோ சாயாவே" என்ற கீர்த்தனை நடக்கட்டும், "பின்னால் போவாம்" என்றார் பாரதியார். உடனே வாத்தியார் பெட்டியைத் திறந்து, உள்ளேயிருந்த கோப்பைகளையெல்லாம் வெளியே எடுத்து வரிசையாக வைத்து, ஒவ்வொன்றிலும் அளவுப்படி தண்ணீர் ஊற்றி, சுரம் செய்து, பாரதியார் கேட்ட பாடலை வாசித்துக் காண்பித்தார். 'இன்னும் விரைவாகக் கை ஓடவேண்டும்' என்று பாரதியார் சொன்னார். இதன் மத்தியில், 'சுவாமி, உங்கள் தேசிய கீதங்களை நல்ல இராகங்களில் பாடாமல், கும்மி, காவடிச் சிந்து, நொண்டிச் சிந்து முதலிய மெட்டுக்களில் ஏன் பாடுகிறீர்கள்?' என்று நான் கேட்டேன். 'என் பாட்டு தேசிய கீதமானதால், மூட்டை தூக்கும் ஆள் முதற்கொண்டு பாகவதர் வரையில் சுலபமாகப் பாடவேணும்' என்றார் கவிஞர்.

பின்னர் நாங்கள் மூவரும் ராசு கொலோந்தோம் வீட்டுக்குச் சென்றோம். சி.ஐ.டி. காரரும் தொடர்ந்து வந்தார். ஓடு போட்ட அந்தக் கல் வீட்டுக்குள் நுழைந்ததும், வலது பக்கமுள்ள இரண்டாவது அறையில் ஒரு நாற்காலியில் தலையைத் தொங்கவிட்ட வண்ணம் உட்கார்ந்திருந்த ராசு அவர்களைக் கண்டோம். எங்கள் காலடிச் சப்தம் கேட்டவுடன் அவர் தலை நிமிர்ந்து பாரதியாருக்கு வணக்கம் செய்தார்.

அவரைப் உற்றுப் பார்த்து, 'உங்களுக்கு உடம்புக்கு என்ன?' என்று கேட்டார் பாரதியார். 'ஒண்ணுமில்லிங்கோ, மயக்கந்தான்!' என்று ஏக்கம் நிறைந்த பெருமூச்சுடன் பதிலளித்தார். ராசு. அவர், மனத்தில் பல எண்ணங்கள் தோன்றிச் சொல்லமுடியாத துக்கத்தில்

ஆழ்ந்திருப்பதைப் பாரதியார் கண்டுகொண்டு, 'நீர் சொல்வது உண்மைதான். உமது மனப் புண்ணை ஒரு டாக்டராலும் ஆற்ற முடியாது. உமது உள்ளத்திலுள்ள "அட்மாஸ்பியர்" (சூழ்நிலை) இந்த அறை முழுதும் சூழ்ந்திருக்கிறது. இவ்வாறே நீர் இருப்பதனால், உமக்கு கஷ்டம் சம்பவிக்கும். ஆனதால் கொஞ்சக் காலம் இந்த அறையைவிட்டு வேறு இடமாகிலும், அல்லது வெளியூராகிலும் போயிருந்துவிட்டு வந்தால் உமக்கு நன்மையாக இருக்கும் என்று சொன்னார். 'அப்படியே செய்கிறேன்' என்று வாய்விட்டுச் சொல்லாமல், தலையை மட்டும் அசைத்தார் நோயாளி பாரதியாரை வீட்டில் கொண்டு. போய் விட்டுவிட்டு நாங்கள் வீடு வந்து சேர்ந்தோம்.

ஒரு வாரத்தில் ராசு கொலோந்தோம் தமது வீட்டிலேயே திடீரென மரணமடைந்தார்.

## குவளைக் கண்ணனின் குணாதிசயங்கள்

என் குருநாதர் புதுவையில் அடிவைத்தபோது அன்னவருக்குக் கிடைத்த நண்பர் குவளைக்கண்ணன் என்ற ஸ்ரீ. கிருஷ்ணமாசாரியார்தான். நானும் குவளைக்கண்ணனும் புதுவைக் கல்வே உயர்தரப் பள்ளியில் ஒன்றாக வாசித்து வந்தோம். அப்போது ஸ்ரீ. வி. ஏ. சுவாமிநாத ஐயர், பி.ஏ., எல்.டி., ஹெட்மாஸ்டராகவும், ஸ்ரீ. சூசை ரெட்டியார் அடுத்த தலைமை ஆசிரியராகவும் இருந்து வந்தார்கள். எங்கள் வகுப்பு உபாத்தியாயர் ஓர் ஐயங்கார். சுமார் 38-வருஷங்கள் கழிந்துவிட்டதால் அவர் பெயர் மட்டும் ஞாபகத்திற்கு வரவில்லை. தலையில் மஸ்லைக்குட்டை, மேலே நீண்ட கோட்டு, இடையில் கரைவேட்டி, நெற்றியில் பட்டை நாமத்துடன் அவர் பள்ளிக்கு வருவார். அவருடைய மூக்கு நீண்டிருந்தமையால், 'கொம்பேறி மூக்கன் வாத்தியார்' என்று நாங்கள் வேடிக்கையாக அவரை அழைப்பது வழக்கம்.

எனது நண்பர் குவளைக்கண்ணன் பள்ளிக் கூடத்திற்கு வரும்போது சட்டை எதுவும் போடமாட்டார்; ஓர் அங்கவஸ்திரத்தை மட்டும் போர்த்திக்கொண்டு புத்தகத்துடன் வருவார். நெற்றியில் பட்டை நாமம் துலங்கும். பள்ளியில் படிக்கும்போது மிகவும் வைதிகமாகவே இருந்துவந்தார். படிப்பை விட்ட பின்னர் அவர் உத்தியோகம் எதுவும் செய்ய நான் பார்த்ததில்லை. புதுவைப்

பெருமாள் கோவிலில் பட்டாசாரியாராக இருந்துவந்தார் என்று நான் கேள்விப்பட்டதுண்டு. ஆனால், இரண்டொரு சமயங்களில், புதுவை நீதிஸ்தலத்தில் சாட்சிகளாக வரும் பிராம்மணரல்லாதாருக்கு அவர் துளசித் தீர்த்தம் கொடுக்கும்போது நான் பார்த்திருக்கிறேன். அக்காலத்தில் புதுவைக் கோர்ட்டுகளில் சாட்சிகள் பிரமாணம் செய்வதற்காக, முஸ்லிம்களுக்காக விருந்தாப்பிய முஸ்லிம் ஒருவர் குர்ஆன் புத்தகத்துடனும், பிராம்மணரல்லாதார்களுக்காக ஓர் ஐயங்கார் துளசித் தீர்த்தப் பாத்திரத்துடனும், ஹரிஜன சமூகத்தாருக்காக வள்ளுவப் பண்டாரம் ஒருவர் துளசித் தீர்த்தப் பாத்திரத்துடனும் காட்சியளிப்பார்கள். கிறிஸ்தவர்களுக்காக ஒருவரும் கிடையாது; அவர்கள் கையைமட்டும் தூக்கிப் பிரமாணம் செய்யவேண்டியதுதான். ஆனால், இப்போது இந்த வழக்கங்கள் எல்லாம் நீங்கி எல்லா வகுப்பாரும் கையைத் தூக்கிச் சத்தியம் செய்யவேண்டிய முறை ஏற்பட்டிருக்கிறது.

பாரதியார் குவளைக்கண்ணனிடம் அளவு கடந்த அன்பு பாராட்டி வந்தார். அவர் விருப்பத்திற்குக் கண்ணன் இரண்டு சொல்லமாட்டார். நாள்தோறும் பாரதியாரைத் தரிசிக்காமல் இருக்கமாட்டார். பாரதியார் வீட்டில் என்னைக் கண்டுவிட்டால், '*கனகலிங்கம்! கனகலிங்கம்!*' என்று புன்சிரிப்புடன் அன்போடு அழைத்து அருகில் உட்கார வைத்துக் கொள்வார். ஈசுவரன் தருமராஜா கோவில் வீதியில் 20-வது எண்ணுள்ள வீட்டில் பாரதியார் குடியிருந்தபோது குவளைக்கண்ணனை நான் அடிக்கடி பார்ப்பதுண்டு. பள்ளியில் படிக்கும்போது காட்டி வந்த வைதிகமெல்லாம் பாரதியாரின் அன்பைப் பெற்றபின் எங்கே போய் ஒளிந்துகொண்டதோ தெரியவில்லை. 'பறையனுக்குப் போஜனம் செய்வித்துப் பக்கத்திலிருந்து சாப்பிட்டால் நீ மனுஷ்யனிடம் அன்புடையவனாக விளங்குவாய்!' என்று குருநாதர் குவளைக்கண்ணனிடம் அடிக்கடி சொல்லிவருவார். என்னைப் பார்த்து, 'அதோ கனகலிங்கம் வருகிறான்! அவனைப்பார்த்து யாராகிலும் பறையன் என்று சொல்லுவார்களா?' என்று கேட்பார். இதே கேள்வியை அவர் புரட்சிக் கவிஞர் ஸ்ரீ. பாரதிதாஸனிடமும் அடிக்கடி கேட்பதுண்டு.

அந்தப் பாலத்தில் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற மூன்றையும் கொள்கைகளாகக் கொண்டு குடியரசின் கீழிருந்த

புதுவை நீதிஸ்தலங்களிலேயே ஜாதிவித்தியாசங்கள் இருந்தன என்றால், கோவில், ஹோட்டல், ஷவரக்கூடம், நாடகக் கொட்டகை முதலான இடங்களில் சொல்லவும் வேண்டுமா? ஜாதி வேற்றுமைகள் தலைவிரித்தாடிய அக்காலத்தில், கூண்டில் அடைபட்ட கிளியைப் போலிருக்க பாரதியாரால் என்ன செய்ய முடியும்? தேர்தல் காலத்தில் எங்கும் அடிதடி நடக்கும். பாரதியார் எதற்கும் அஞ்சாமல், ஜாதிவித்தியாசம் பார்க்கும் மடமையை விளக்கி, 'பறையர்களை ஏன் கோவிலுக்குள் அனுமதிக்கக் கூடாது?' என்று கேள்வி கேட்டு, அனுமதிக்க வேண்டும் என்பதற்குத் தக்க ஆதாரங்களுடன் விளக்கி, 'கோவில் திருத்தம்' என்ற 'நோட்டீஸ்' எழுதித் துணிவுடன் வெளியிட்டார். அதில் குவளைக் கண்ணனைக் கையொப்பமிடச் செய்திருந்தார். இதனைக் கண்ணுற்ற பெருமாள்கோவில் - ஐயங்கார்கள் குவளைக்கண்ணனிடம் கோபாவேசம் கொண்டு, ஸ்ந்நிதியில் அவர் நிற்கும்போது கோஷ்டியில் சேர்க்காமல், ஜாதிப்பிரஷ்டம் செய்தவரைப்போல ஒதுக்கமாக வைத்துத்தான் தீர்த்தம் கொடுத்து வந்தார்கள் என்பதைப் பாரதியார் அனந்தம் தடவைகள் என்னிடம் சொல்லியிருக்கிறார்.

ஐயங்கார்களின் பூச்சாண்டிகளுக்கெல்லாம் குவளைக் கண்ணன் அஞ்சினவரல்லர். கடைசிவரை பாரதியாரின் விசுவாசத்தையும் நட்பையும் கைவிடாமல் ஒழுகி வந்தார். பாரதிதாசன் அவரைக் கெடுத்துவிட்டார் என்று பலரும் சொல்லி வந்தனர். அதையும் அவர் காதில் போட்டுக் கொள்ளாமல், பாரதியார் வீட்டுக்கு அடிக்கடி போய்வந்து கொண்டிருந்தார்.

இப்போது ஹரிஜன மக்கள் புதுவைப் பெருமாள் கோவிலுக்குச் சென்று பெருமாளை வணங்கும் பாக்கியம் பெற்று விட்டார்கள். அன்று பாரதியார் கேட்ட கேள்விக்குப் பதிலாக இன்று எல்லோருக்கும் சம உரிமை கிடைத்திருக்கிறது.

❖

# 10. என் வீட்டில் பாரதியார்

1917-ம் ஆண்டில்-மாதம், தேதி என் ஞாபகத்திற்கு வரவில்லை - பாரதியார் 'உன் வீட்டுக்கு இன்று வரப்போகிறேன், சௌகரியமாய் இருக்குமா?' என்று கேட்டார். அதற்கு நான், 'முன்பக்கம் ஓடு போட்டுப் பின்புறம் மெத்தை இருக்கிறது; மெத்தையில் ஒரு ஹாலும் இருக்கிறது; காற்று வரும்; வசதியாக இருக்கும்' என்று பதில் சொன்னேன். அங்கே வந்து பார்த்ததும், 'சௌகரியமான இடந்தான்' என்றார். நான் ஒரு பாயைக் கொண்டுவந்து போட்டேன். அவர் ஓர் ஆராய்ச்சி செய்து பார்க்க விரும்பினார். அது குறித்து இங்கே எழுதவேண்டியது அவசியமில்லையென்று நினைக்கிறேன். ஆனால் வேறு பரீட்சைகளைக் குறிப்பிடலாம்.

ஒரு காலை மற்றொரு கால்மேல் போட்டுக்கொண்டு பாயில் படுத்த வண்ணம் பத்திரிகைகளை வாசித்துக் கொண்டிருந்தார். கொஞ்ச நேரம் கழிந்ததும் நான் அவரை நோக்கி, 'சுவாமி! ஆகாரம் சாப்பிடவில்லையே, பசிக்கவில்லையா? ஏதாவது தருவிக்கலாமா?' என்று கேட்டேன். அதற்கு அவர் அருகேயிருந்த என் நண்பர் ஒருவரைச் சுட்டிக்காட்டி, 'லட்டுவுக்கு என் வீடு தெரியுமோ?' என்று கேட்டார். அற்புதசாமி என்ற அந்த நண்பரை நாங்கள் லட்டு என்று அழைப்பது வழக்கம்.

அற்புதசாமி தமக்கு வீடு தெரியும் என்று சொன்னதும், அப்படியானால் நீ நம் அகத்துக்குப் போய்ச் செல்லம்மாவைக் கண்டு, "பாரதியார் கனகலிங்கம் வீட்டில் இருக்கிறார். காப்பியும், பலகாரமும் வாங்கிவரச் சொன்னார்" என்று கேட்டு வாங்கிக் கொண்டுவா" என்றார்.

அப்படியே அற்புதசாமி பாரதியார் வீட்டுக்குப் போய் ஓர் அலுமினியம் தட்டில் தோசைகளும் பெரிய வெண்கல டம்ளரில் காப்பியும் கொண்டு வந்தார். அவருடன் நாடக நடிகரான திரு.எம்.என். சாமி நாயுடு என்பவரும், வேதாசலம் சகேர் என்ற நண்பரும் வந்தார்கள்.

அவர்கள் மெத்தைக்கு வந்ததும், பாரதியார் நாயுடுவை எனக்குச் சுட்டிக்காட்டி, 'இவர் பெரிய பாகவதாராச்சே! இங்கே எப்படி வந்தார்?' என்று கேட்டார். அதற்கு நான், 'சுவாமி! இவர் அடிக்கடி நம் வீட்டுக்கு வந்து போவது வழக்கம்தான்; இவரும் வித்தியாசம் பாராட்டுவதில்லை' என்று பதில் சொன்னேன்.

பாரதியார் தட்டில் இருந்த தோசைகளை எங்கள் மூவருக்கும் கொடுத்துச் சாப்பிடச் சொல்லி விட்டுத் தாம் ஒரு தோசையை மட்டும் சாப்பிட்டார். காப்பியைத் தாம் சாப்பிடாமல் எங்களுக்கே கொடுத்து விட்டார். பிறகு நாடக பாகவதரை ஒரு பாட்டு பாடச் சொல்லிக் கேட்டுக் கொண்டிருந்தார்.

அப்பால் பாரதியார் அற்புதசாமியை நோக்கி, 'பாத்திரங்களை நம் அகத்தில் சேர்த்துவிட்டுச் செல்லம்மாளிடம், "கனகலிங்கத்தின் வீடு சௌகரியமாய் இருக்கிறது, உங்களையும் வந்து பார்த்துப் போகும்படி பாரதியார் அழைக்கிறார்" என்று சொல்லி 'அம்மாளை அழைத்துவா' என்றார்.

அற்புதசாமி அங்கு போய்ப் பாத்திரங்களைக் கொடுத்து விட்டுத் தாம்மட்டும் திரும்பி வந்தார். 'செல்லம்மா வரவில்லையா?' என்று பாரதியார் ஆவலாகக் கேட்க, 'நீங்கள் சொன்னபடியே அம்மையாரிடம் தெரிவித்தேன். "இப்போது சமையல் நேரமாக இருக்கிறது என்று பாரதியாரிடம் சொல்லிவிடு" என்று சொல்லி அனுப்பிவிட்டார் அம்மையார்' என்று பதில் சொன்னார் அற்புதசாமி.

சில நிமிஷங்கள் மௌனமாக இருந்துவிட்டுப் பாரதியார் எங்களை நோக்கி, 'நான் இங்கே வந்தால் போதுமா? அம்மாளும் இங்கே வந்து போனால்தான் சிலாக்கியமாக இருக்கும்' என்றார். பிறகு வேதாசலம் சகேர் என்பவரை நோக்கி, 'நீ உடனே போய் அம்மாளை நான் இட்டுவரச் சொன்னதாகச் சொல்லி அழைத்துவா!' என்றார்.

வேதாசலம் சகேர் திரும்பிவந்தது 'அம்மாள் சமையல் வேலையைக் கவனித்துக் கொண்டிருப்பதால் இப்போது வரமுடியாது என்று சொல்லி விட்டார்' என்று அற்புதசாமி சொன்னதை அநுசரித்துச் சொன்னார். பாரதியார் ஆத்திரமாக, 'சாப்பாடு பெரிதல்ல, சந்தர்ப்பம் பெரிது! நான் இருக்கும் இந்த இடத்திற்குச் செல்லம்மாளும் வந்து விட்டுப் போனால் என் கொள்கைக்குப் பொருத்தமாய் இருக்கும்' என்று மறுபடியும் வேதாசலம் சகேரை ஓடிப் போய் வரும்படி ஏவினார்.

மறுபடியும் வேதாசலம் சகேர் திரும்பி வந்து, அம்மாள் வருவதற்கு யாதொரு தடையும் கிடையாதாம். "இதோ பார், சாதம் அடுப்பிலிருக்க எப்படி வரமுடியும்? என்று சொன்னார்' என்றார்.

சற்றுநேரம் சென்றதும் பாரதியார் நாடக நடிகரான திரு.எம்.என். நாயுடுவை நோக்கி, 'பாகவதரே! நீர் நம் அகத்துக்கு எதிரே இருப்பவராகையால், நீர் போய்ச் செல்லம்மாளை அழைத்து வரலாமே!' என்று அவரையும் அனுப்பி வைத்தார். பாகவதரும் திரும்பி வந்து மேற்படி இருவர் சொன்ன பதிலையே சொன்னார்.

கடைசியாகப் பாரதியார் என்னை நோக்கி, 'கனகலிங்கம்! நீ போய் அழைத்துவா!' என்று கட்டளையிட்டார். நான் ஓடிப்போனேன். 'உன் வீட்டில் என்ன விசேஷம்?' என்று அம்மையார் கேட்டார். 'ஒன்றுமில்லை!' என்று பதில் சொன்னேன். பிறகு ஸ்ரீ செல்லம்மாள், 'நான்தான் சமையலில் ஈடுபட்டிருப்பதாக ஏற்கனவே சொல்லி அனுப்பிவிட்டேனே. அதுவுமல்லாமல், பாப்பா முதலானவர்கள் வேறொரு வீட்டுக்குப் போயிருக்கிறார்கள். இங்கே என்னைத் தவிர வேறொருவரும் இல்லை என்று பாரதியாரிடம் சொல்லு' என்று சொல்லிவிட்டார்.

நான் திரும்பி வந்து செய்தி சொன்னதும், பாரதியார் என்னை உற்றுப் பார்த்து, 'உண்மையில் செல்லம்மாளுக்கு வீட்டில் வேலை இருக்கலாம்; ஆனால், "வீட்டு வேலைகளைப் பார்த்துவிட்டு வருகிறேன்" என்று ஒருவரிடமும் சொல்லி அனுப்பவில்லையே!' என்றார். அந்தப் பேச்சைத் தொடர்ந்து ஏதோ புதிர்போட்டது போல், 'செல்லம்மாளுக்கு இன்னும் கொஞ்சம் இருக்கிறது' என்றார்.

"அப்படியென்றால், அது என்ன?' என்று கேட்டேன். 'அதுவா? தீண்டாமை என்னும் தொத்து நோய்!' என்றார் பாரதியார்.

அன்று தம் இஷ்டப்படியே செல்லம்மாள் என் வீட்டுக்கு வந்து போனால், 'சுதேசமித்திர'னில் தாமும் செல்லம்மாளும் ஹரிஜனன் வீட்டில் தங்கியிருந்ததாக ஒரு கட்டுரை வெளியிட விரும்பியதாகவும் பாரதியார் என்னிடம் தெரிவித்தார்.

பிறகு சற்று நேரம் டாக்டர் பெஸன்ட் அம்மையாரின் சீர்திருத்தக் கொள்கைகளைக் குறித்து ஸ்ரீ எம்.என். சாமி நாயுடுவிடம் (இவரது முழுப்பெயர் எம். நாராயணசாமி நாயுடு) பேசிக் கொண்டிருந்தார். அன்று தனது அருமை மனைவியார் ஓர் அரிய சந்தர்ப்பத்தை இழந்து விட்டதாக எங்களிடம் சொல்லிவிட்டுக் கொஞ்சம் உறங்கிய பின் கடல் ஸ்நானத்திற்குப் புறப்பட்டார்.

பாரதியாரின் வீட்டுக்கு நான் அடிக்கடி போய் வந்ததுடன், 'குருநாதர் நம் குடிசையிலும் வந்து காட்சி யளித்தாரே!' என்ற பெருமை எனக்குக் கொஞ்சநஞ்சம் இல்லை. நான் என் மதிப்பில் ஓர் அடி உயர்ந்து விட்டதாக எண்ணினேன்.

என்னிடம் பாரதியார் விசேஷ அபிமானம் காட்டிய போதிலும், ஹரிஜன இளைஞர்களிடம் பொதுவாகவே அபிமானம் காட்டுவதுண்டு. மேலே கறுப்புக் கோட்டும், தலையில் பஞ்சாபிக் கட்டும், கையில் கட்டுப் பத்திரிகைகளும், முறுக்கிவிட்ட மீசையும் தாடியுமாக என் கண்ணில் ஒரு சித்த புருஷர்போல் காட்சியளித்த பெரியார், ஓரளவு வேதாசலம் சகேர், எம்.என். நாயுடு முதலானவர்களின் உள்ளங்களையும் பெரிதும் வசீகரித்து விட்டார்.

பாரதியாருக்கு இரகசியப் போலீஸாரால் விளைந்த தொல்லைகள் அனந்தம் என்றுதான் சொல்ல வேண்டும். தலையில் லுங்கித் துண்டும் மேலே காக்கிக் கோட்டும் அணிந்தவர்களாகவும், சிறந்த கனவான்களைப் போல் நாகரிக உடைகள் தரித்தவர்களாகவும், சி.ஐ.டி. காரர்கள் மாறுவேஷத்தில் புதுவையிலே அங்கும் இங்கும் எங்கும் திரிந்து, 'பாரதியார் எங்கே போகிறார்? என்ன செய்கிறார்?' என்று அவர் யார் யாரோடு பேசுகிறாரோ, தோழமை கொள்ளுகிறாரோ, அவர்களையெல்லாம் விசாரித்து விசாரித்துப் பஞ்சரித்துவிடுவார்கள்.

இந்த ஆசாமிகளையும் இவர்கள் விளைத்த, துன்பங்களையும் குறிப்பிட்டுப் பாரதியார், தமது 'கண்ணன் பாட்டு' ஒன்றில்,

ஒன்பது வாசல் - குடிலினைச் சுற்றி
ஒருசில பேய்கள் வந்தே
துன்பப் படுத்துது - மந்திரம் செய்து
தொலைத்திட வேண்டும் ஐயே!

என்று தனது இஷ்ட தெய்வமாகிய கண்ணனை நோக்கிக் கதறியிருக்கிறார். இத்தனை தொல்லைகளுக்கிடையிலும் என்னைப் போன்ற ஹரிஜனங்களின் துன்பங்களை நினைத்து நினைத்து, உருகி உருகி, எங்களோடு தட்டுத் தடையில்லாமல் கலந்து பழகி வந்தார். எத்தனையோ வேதாந்திகளும், அரசியல்வாதிகளும் கூட ஸமரஸ சன்மார்க்கத்தைக் குறித்தும், ஸமதர்மத்தைக் குறித்தும் மணிக்கணக்கில் பேசக் கேட்டிருக்கிறேன். ஆனால், அன்று பாரதியார் என் வீட்டுக்கும் கருணை கூர்ந்து விஜயம் செய்த அந்த நிகழ்ச்சி ஒன்றுக்கு, எத்தனை ஆயிரம் பிரசங்கங்கள் ஈடாகும்!

இன்று காந்தியடிகளைப் போல், இந்த மகாத்மாவுக்கும் முன்பாகவே, என் குருநாதர் பாரதியார் ஹரிஜனங்களின் சுகதுக்கத்தைத் தமதாக்கிக் கொண்டார். இத்தகைய வாழ்க்கையில் பிறந்ததுதான்,

தஞ்சம் உலகினில் எங்கணும் இன்றித்
தவித்துத் தடுமாறிப்
பஞ்சைப் பறையன் அடிமை புகுந்தேன்,
பாரம் உனக்(கு) ஆண்டே!
ஆண்டே! - பாரம் உனக்(கு) ஆண்டே

என்ற பாரதியார் கவிதை.

இந்தப் பாட்டை நான் கேட்கும்போதெல்லாம், பாரதியார் என் குடிசைக்கு விஜயம் செய்ததும், தமது அருமை மனைவியாரையும் அங்கே வரவழைக்க வேண்டுமென்று திரும்பத் திரும்ப முயற்சிகள் செய்ததும் என் மனக்கண்முன் ஓடிவருகின்றன.

உத்தியோகம் வகித்த எனக்கு, தேசியப் புரட்சிப் போர்வீரரான பாரதியாருடன் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ளவும் பயம்.

இப்படிச் சில மாதங்கள் கழிந்தபின் என் தந்தையாரிடமிருந்து எனக்கு வந்த கடிதத்தில் பாரதியாரைப் பற்றிய ஒரு குறிப்பு இருந்தது. அதாவது, 'பாரதியார் புதுச்சேரியை விட்டுப் பிரயாணமாகிக் கடலூர் செல்லும் வழியில் போலீஸாரால் கைது செய்யப்பட்டும், பின் சில நிபந்தனைகளின் பேரில் விடுதலை யடைந்திருக்கிறார்' என்ற செய்திதான்.

கூண்டில் அடைபட்ட கிளிபோல் புதுவையில் இருந்ததாகப் பாரதியாரே என்னிடம் நேரில் குறிப்பிட்டார் அல்லவா? கிளி.. அதிலும் சுதந்திர வானத்தில் பறக்கப் பேராசை கொண்ட கிளி.. தப்பிப்போக உரிமையுள்ளதுதான் என்று நான் எண்ணி மகிழ்ந்தேன். ஆனால், பாரதியாரைக் கடலூரில் ஸப்ஜெயிலில் அடைத்து வைத்திருந்ததும், 'அப்படித்தான் பறக்கலாம், இவ்வளவு தூரம் தான் பறக்கலாம்; அந்த மாதிரிச் சிறகடிக்கலாகாது!' என்று தடைபோட்டுக் கிளியை வெளிவிட்டதும் என் உள்ளத்தைப் புண்ணாக்கிவிட்டன.

படிக்காசுப் புலவரை ஒரு ராஜா தம் அரண்மனையிலேயே வைத்திருந்தார். அந்த 'அரண்மனைச் சிறை' கூட அப்புலவருக்குக் கஷ்டமாக இருந்ததாம். ஆகவே அவர் அரசனைப் பார்த்து,

*பாட்டில் சிறந்த படிக்காசன்*
*என்னும் ஓர் பைங்கிளியைக்*
*கூட்டில் அடைத்து வைத்தாய்!*
*'இரை தா!' என்று கூப்பிடுதே!*

என்று பாடிச் 'சுதந்திர உணவு' கேட்டாராம். அப்படியிருக்க, புதுவைச் சிறையிலிருந்து பாரதியார் சுதந்திர தாகம் கொண்டு பறந்து போக முயன்றதில் என்ன அதிசயம் இருக்கிறது! 'அவ்வளவு கஷ்டங்களை அனுபவித்தவர் சிற்சில நிபந்தனைகளை ஒப்புக்கொண்டு விடுதலை பெற்றதும் ஒரு வகையில் சரிதான். கூட்டுக்குள் இருந்த கிளி வீட்டிலும் தோட்டத்திலுமாவது பறந்து திரியலாம் அல்லவா?' என்று நான் ஒருவாறு திருப்தி அடைந்தேன்.

மெஸொபொடோமியாவில் என் உடன்படிக்கைக்கு இணங்க ராணுவ சேவை செய்து முடித்துக் கொண்டபின் நான் புதுவைக்குத் திரும்பினேன். பாரதியார் இல்லாத புதுவை, கிளி பறந்து போன கூடுபோலத்தான் தோன்றியது எனக்கு. புதுவைக்கு வந்த ஒரு மாதத்திற்குள் எனக்கு மலேரியா என்ற விஷஜுரம் கண்டது. நோயை முற்றும் குணப்படுத்திக் கொள்வதற்காகச் சென்னைக்குச் சென்று மயிலாப்பூர் ஸாந்தோமில் 'திராவிட இல்லம்' என்ற ஜாகையில் வசித்துவந்த ராவ்ஸாஹெப் பி.வி.எஸ் சுந்தர மூர்த்திப் பிள்ளையுடன் தங்கினேன்.

அந் நாளில் சென்னை ஹரிஜனங்களுக்குள் 'திராவிடர்' 'ஆதித்திராவிடர்' என்ற பிரசினைகள் பெரிதும் அடிபட்டன. ஆமாம், மிக்க ஆவசேமாகவும் ஆரவாரமாகவும், கூட்டங்கள் நடைபெறும். எனக்கு மலேரியா குணமானதும் அந்தக் கூட்டங்களுக்கெல்லாம் போவேன். பாரதியாரைப் பார்க்கவேண்டும் என்பதுதான் முக்கிய ஆசை. அவர் சென்னையில் இருப்பதாகத் தெரியும், ஆனால் இருக்குமிடம் தெரியாது. அவர் மேலே சொன்ன கூட்டங்களுக்கும் வருவதில்லை.

இன்று பாரதியாரைத் தெரியாத தமிழர் இல்லை. எல்லா இல்லங்களிலும் உள்ளங்களிலும் பாரதியார் வீற்றிருக்கிறார். ஆனால் அன்று பாரதியார் இருப்பிடம் கண்டுபிடிப்பதே எனக்குக் கொஞ்சம் சிரமமாகத்தான் இருந்தது.

மயிலாப்பூர் மந்தைவெளியில் வசித்து வந்த காங்கிரஸ்வாதியும், ஹரிஜன வகுப்பினருமான ஸ்ரீ ஐயவேலன் என்பவரின் முயற்சியால், நுண்ணறிவாளரும், ஒப்பற்ற வழக்கறிஞரும், பிரபல அரசியல் ஞானியுமாகிய காலஞ்சென்ற உயர்திரு. எஸ். ஸ்ரீனிவாஸையங்காரின் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதில் நானும் கலந்து கொண்டேன். அந்தக் கூட்டத்திற்கும் பாரதியார் வரவில்லை.

அக் கூட்டத்தில் சுவாமி உருத்திர கோடீசுவரர், சகோதரி வி. பாலம்மாள் முதலான அக்காலப் பிரசித்தர்கள் சொற்கொழிவு ஆற்றிய பின், கதரைப் பற்றி என்னைப் பேசும்படியாகத் தலைவர் கட்டளையிட்டார். கூட்டம் கலைந்ததும் சகோதரி பாலம்மாள் என்

ஊர்பேர் முதலான விவரங்கள் பற்றி விசாரித்தார். நான் 'புதுச்சேரி' என்றதும், அந்த அம்மையார், 'அப்படியானால் சுப்பிரமணிய பாரதியாரைத் தெரிந்திருக்கலாம் என்று நம்புகிறேன்' என்றார்.

அந்த வார்த்தை பெரும் பசியனுக்குச் சோறு கிடைத்தது போலிருந்தது எனக்கு. தெரியும் என்பது மட்டுமல்ல: அவர்தான் அடியேனது குருநாதர். சுமார் மூன்று ஆண்டுகளாக அவரைப் பார்க்கவில்லை. சென்னையில்தான் இருக்கிறார் என்று தெரியும். இதுபோன்ற கூட்டங்களிலும் காணக் கிடைக்கவில்லையே! அவர் ஜாகையும் தெரியவில்லை! என்று வருந்திக் கூறினேன்.

அப்போது சகோதரியார், 'எனக்கும் அவர் ஜாகை தெரியாது. இப்போது "சுதேசமித்திரன்" பத்திரிகையில் உதவியாசிரியர் வேலை பார்த்து வருவதாகக் கேள்வி. பாவம், பாண்டிச்சேரியில் எவ்வளவோ கஷ்டத்திற்குப் பின் பழையபடி சென்னைக்கு வந்து ஏதோ கொஞ்சம் நிம்மதியாய் இருக்கிறார் போலும்!' என்றார்.

நீந்திக் கை ஓய்ந்தவனுக்கு ஒரு தெப்பம் கிடைத்தது போலிருந்தது அந்தச் செய்தி, "சுதேசமித்திரன்" காரியாலயம் எங்கே இருக்கிறது?' என்று ஆவலாகக் கேட்டேன். 'டவுனில், எரபாலு செட்டி வீதியில் இருக்கிறது' என்று அம்மையார் பதில் சொன்னார். அந்நாளில் 'சுதேசமித்திரன்' விலாசம் அது. அந்தச் செய்தி கிடைத்ததும் நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

மறு நாள் காலை சுமார் பத்து மணிக்கு நான் மயிலாப்பூரை விட்டுக் கிளம்பி 'சுதேசமித்திரன்' ஆபீஸுக்குப் போய்ச் சேர்ந்தேன். வயது முதிர்ந்த ஒரு முகம்மதியர்..வாசல் சேவகராக நின்றுகொண்டிருந்தவர்.. 'பாரதியார் இப்போதுதான் வந்தார். மெத்தைக்குப் போங்கோ!' என்றார்.

மாடியில் வலதுகைப் பக்கம் வடக்கே பார்த்த அறையில் பாரதியார் இருப்பதாக அறிந்து கொண்டதும், திடீரென்று ஏதோ ஓர் ஆலயம் போலத் தோன்றியது அந்தப் பத்திரிகாலய அறை. ஆலயப் பிரவேசம் செய்யும் குதூகலத்துடன் கதவைத் திறந்துகொண்டு நான் உள்ளே புகுந்தேன்.

மேஜையண்டை இரண்டு கம்பாஸிடர்கள் நின்று கொண்டிருந்தார்கள். அச்சிட்டு வந்திருந்த காகிதப் பிரதிகளைப்

பாரதியார் ஒருமை உள்ளத்துடன் பார்வையிட்டுக்கொண்டிருந்தார். நான் என் உள்ளக் கிளர்ச்சியை அடக்கிக்கொண்டு மௌனமாக அவரை உற்று நோக்கிய வண்ணம் நின்றுகொண்டிருந்தேன்.

'ப்ரூப்' பார்த்த பின் ஷீட்டுகளைக் கம்பாஸிடர்களிடம் கொடுத்துவிட்டுத் தலை நிமிர்ந்தார் குருநாதர். நான் தலை வணங்கிப் பயபக்தியுடன் நமஸ்காரம் செய்தேன். பாரதியார் ஆச்சரியமாக என்னைப் பார்த்தார் ஒரு கணம்: அடுத்த கணமே, 'அடேய்!' என்று சொல்லிக்கொண்டே காலால் நாற்காலியைப் பின்புறமாக உதைத்துத் தள்ளிவிட்டு, எழுந்துவந்து அப்படியே என் கழுத்தைக் கட்டிக்கொண்டார். எனக்குக் கண்ணீர் ததும்பியது.

'எப்போது வந்தாய்? இப்போது எங்கிருந்து வருகிறாய்?' என்று பேரன்புடன் க்ஷேமம் விசாரித்தார். பிறகு, 'நல்லது, என்னுடன் கூடவா!' என்று சொல்லி, என்னை 'மித்திரன்' ஆசிரியரின் அறைக்கு அழைத்துச் சென்றார். அப்போது, அரசியல் ஞானியும் பொருளாதார அறிஞருமாக விளங்கிய ஸ்ரீ.ஏ.ரங்கஸ்வாமி ஐயங்கார் 'மித்திரன்' ஆசிரியராக இருந்தார்.

அவரிடம் என்னை அழைத்துச் சென்று பாரதியார் அறிமுகப்படுத்தினார். அறிமுகப்படுத்துவதிலும் பாரதியாரின் தோரணை அலாதியாகத்தான் இருந்தது. தாம் உகந்த ஏதோ ஓர் அரும்பொருளைக் காட்டுவது போல் அவரிடம் என்னைக் காட்டி, 'இதோ இவன் என்னுடைய புதுவை ஹரிஜனப் பிரதம சிஷ்யன்; இவனுக்கு உபநயனம் செய்துவைத்தேன், புதுவையிலே!' என்று குதூகலமாய்க் கூறினார். தாம் ஜாதி வேற்றுமையைப் பற்றிய பேசிய கூட்டத்தை நடத்தியதற்காக எனக்கு அபராதம் கிடைத்த வைபவத்தையும் ஐயங்காரிடம் தெரிவித்தார். 'வெகு காலமாக இவனை நான் பார்க்கவில்லை; மறவாமல் சீடப்பிள்ளை தேடி வந்துவிட்டான்!' என்று ஆனந்தமாகச் சொன்னார். நான் ஆனந்தக் கடலில் ஆழ்ந்தே போனேன்.

❖